# முத்தமிழ் ஆரம்

யாழ் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி

25th Anniversary

1991 – 2016

## வெள்ளி விழா சிறப்பு மலர்

## 2016

# வெள்ளி விழா சிறப்பு மலர்

## 1991 - 2016

2016

யாழ் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி

ஆடியபாதம் வீதி,

நல்லூர்.

# முத்தமிழ் முன்பள்ளிக் கீதம்

வாழிய வாழிய முத்தமிழ் எங்கள்
வளமுடன் வளரும் முன்பள்ளியே - (02)

முத்தான எங்கள் சித்திரங்கள் இந்த
முத்தமிழ் வளர்த்த இரத்தினங்கள்
நன்றென வளரும் மாணவர் எமக்கு
அடித்தளம் இடுவது எம்பள்ளியே
(வாழிய)

ஆடலும் பாடலும் ஆக்கமும் திறன்களும்
ஆங்கிலம் கணிதம் தமிழென இணைந்து
இன்புடன் நாங்கள் கூடியே ஆடம்
இனியநல் பூங்கா எம்பள்ளியே
(வாழிய)

உடல் உள அறிவு ஆளுமைத் திறன்கள்
பண்புடன் பழக்க வழக்கங்கள் புகட்டும்
எங்களின் இனிய ஆசானை வணங்கி
அம்மனின் பாதம் போற்றுவோமே
அம்மனின் பாதம் போற்றுவோமே
(வாழிய)

## இலட்சனை

இதில் முற்றிய நெற்கதிர்களின் நடுவே தாமரை மலரில் விளக்கொளி பிரகாசத்தில் புத்தகம் காணப்படுகிறது.

## கருத்து

பூக்களில் சிறந்த பூவாகிய தாமரைப்பூவில் கல்வியின் கண்ணாகிய புத்தகம் ஒளியெனப் பிரகாசிக்க நெல் மணிகளாக முத்தமிழின் முத்துக்கள் மிளிர்வர் என்பதே

## மகுட வாசகம்

"வளமான வித்தில் உருவான விருட்சம்"

## நோக்கு

வெற்றுத் தாள்களைப் போன்று வரும் குழந்தைகளை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் உருவாக்கி இவ்வுலகிற்கு கையளிப்பதே.

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | முத்தமிழ் ஆரம் |
| வெளியீடு | : | நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி |
| பதிப்பு | : | தை 2016 |
| பதிப்புரிமை | : | மலர்க்குழு நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி |
| நூல் அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | 88 |
| பிரதிகள் | : | 300 |
| பதிப்பகம் | : | வைரஸ் பிறிண்டேர்ஸ் |
| | | கே.கே.எஸ் வீதி, இணுவில் |


## மலர் வெளியீட்டுக் குழு

திரு நா.விமலநாதன்

திரு சு.மணிராஜா

திரு.சி.திலீபன்

செல்வி ச.சியாமளா

செல்வன் ர.செந்துஜன்

செல்வன் வே.சகிந்தன்

செல்வி இ.தர்சியா

செல்வன் இ.துஷாந்

திரு ச.சுரேந்திரன்

செல்வன் சு.சனோஜன்

முன்பள்ளி பொறுப்பாசிரியை



செல்வி சியமளாதேவி சண்முகலிங்கம்

# அருளாசிச் செய்தி



யாழ் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி தனது 25வது ஆண்டு வெள்ளி விழாவினை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சிய டைகின்றேன். ஒவ்வொரு மாணவர்களின் வாழ்விலும் ஆரம்பக் கல்வியே உயர் கல்விக்கு அத்திவாரமாகும். இவ் வகையில் இம் முன் பள்ளியானது கடந்த 25 வருடங்களாக மாணவர்களிடையே கல்வி மட்டுமல்லாது சமய கலாச்சாரம் பண்பாடுகளோடு நன் மாணவர்களை உருவாக்கித் தந்த பெருமைக்குரியதாகும். ஒவ்வொரு மாணவர்களினதும் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது. அதிலும் சமயத்தோடு இணைந்த கல்வி மனித பண்பை மேல் எடுத்துச் செல்கின்றது இதை உணர்ந்த நம்மவர்கள் ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர் கல்வி வரையில் சமயக் கல்வியை கட்டாயக் கல்வியாக்கியுள்ளனர். இதை உணர்ந்த இம் முன்பள்ளியிலும் கல்வியுடன், கலை, பண்பாட்டு விழுமியங்கள், விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளிலும் மாணவர்களை முன் எடுத்துச் செல்வது அணைவரையும் மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஒருவன் மனிதனாகப் பிறந்து பல படிகளைத் தாண்டி பயணம் செய்கிறான். இதில் மாணவப்பருவம் என்பது மிகவும் இன்றியமையாத பருவமாகும். இக் காலகட்டத்தில் பாடசாலைகளில் கல்வி புகட்டும் ஆசிரியர்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது. மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் திறன்களை வெளிவரச் செய்து இந்த தேசத்தில் நன்மக்களாக திகழ அரும் பணியாற்றும் இம் முன் பள்ளியின் ஆசிரியர்கள் அயராது அரும்பணியாற்றும் பொறுப்பாசிரியர் ஆகியோரை வாழ்த்தி மேலும் இம் முன்பள்ளியின் பணிகள் சிறப்புடன் தொடர எல்லாம் வல்ல இறைவனை பிராத்தித்து ஆசி கூறுகின்றேன்.

*சிவஸ்ரீ.சீ.ஸ்ரீசாரங்கக்குருக்கள்*
*(கல்வியங்காடு)*

# ஆசிச் செய்தி



நல்லூரிலுள்ள முன்பள்ளிகளுள் ஒன்றான கல்வியங்காட்டில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள யாழ் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியின் 25வது ஆண்டு வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சிறார்களின் ஆளுமையை இனங்கண்டு அவர்களுக்கு சிறந்த ஆன்மீகம், கல்வி ஒழுக்கம் ஆகியவற்றை நன்முறையில் கற்பிக்கும் பொறுப்பாசிரியருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எனது அன்பார்ந்த வாழ்த்துக்கள்.

ஒரு கட்டடத்தின் அடித்தளம் பலமானதாக இருந்தால் தான் அக்கட்டடம் உறுதியுடையதாக இருக்கும். அதே போன்று முன்பள்ளிப் பருவத்தில் மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் ஆரம்ப கல்வியை சிறந்த முறையில் இம் முத்தமிழ் முன்பள்ளி வழங்குவது பாராட்டத்தக்கதாகும். இவ் வெள்ளிவிழா மலர் இணைய வருகையுடன் அருகிக்கொண்டு செல்லும் எழுத்தாற்றல், வாசிப்புத்திறன், ஆகியவற்றை மேம்படுத்த முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பது தெளிவானதாகும்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவன்." என்னும் கூற்றுக்கிணங்க இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும், பொறுப்பாசிரியை செல்வி சியாமிளாதேவி சண்முகலிங்கம் அவர்களுக்கு மீண்டும் என் வாழ்த்துக்கள். மேலும் இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களையும் கல்வி பயின்ற, கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவர்கள் சிறந்த பிரஜைகளாக வாழ புனித / சவேரியார் ஆலயப் பங்குத்தந்தை என்ற வகையில் இறை ஆசீரையும் எனதாசியையும் வழங்குகின்றேன்.

அருட்தந்தை J.C போல்றொகான்,
பங்குத்தந்தை,
புனிதசவேரியர் ஆலயம்,
திருநெல்வேலி - கோப்பாய்

# முன்பள்ளி இணைப்பாளரின் வாழ்த்துச் செய்தி



முன்பள்ளி வாழ்க்கை என்பது
மழலைகள் கூடும் இடம்
அவர்கள் பட்டாம் பூச்சியாய் பறந்து திரிவார்கள்
பாடும் பாலர் குழாத்தை
பக்குவமாய் முத்தமிழ் முன்பள்ளி பதப்படுத்தி - பாரினிலே
உயரச் செய்து
ஏணியாய் வழி சமைத்து வழி காட்டியே
எண்ணிய கருமமும் எடுத்த காரியமும்
வெற்றி பெற வைத்த முத்தமிழ் முன்பள்ளி

சீரிய நெறிதனை சிந்தையில் பரப்ப
சிரித்த முகத்துடன் ஆசிரியர்கள் - பாலருடன் பழகிட
கற்றல் மூலை அமைத்து விளையாட்டின் மூலம்
அபிநயப் பாடல் ஆடல் மூலம் கல்வியை ஊட்டி
பொறுமை எனும் பொக்கிசத்தை
போதித்தே வழி நடத்துவார்கள்
அறிவெனும் சுடர்பரப்பி
அன்பெனும் நெறிகாட்டி
நல்லொழுக்கம் நன்னெறிகளை
நல்க, வழி காட்டுவர்
முத்தமிழ் முன்பள்ளி எல்லா வளங்களும்
பெற்று நீடுழி காலம் கல்விக்கு உதவவேண்டும்.
என வெள்ளிவிழா காணும் முத்தமிழை இந்நன்னாளில் இதயம் நிறைய வாழ்த்துகின்றேன்.

திருமதி.விவேகானந்தன் மாலதிதேவி
முன்பள்ளி இணைப்பாளர் நல்லூர்க் கோட்டம்

# யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி தனது கல்விச் சேவையின் 25வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இதனையொட்டி வெளிவர இருக்கும் வெள்ளிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். 1991ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவான கல்விச் சேவையை வழங்கியுள்ள தென்றால் அது மிகவும் சிறப்பான விடயமாகும் கல்வி மட்டுமல்ல மாணவர்களின் பல்வேறு திறன்களையும் விருத்தி செய்கின்ற ஓர் களமாக இம்முன் பள்ளியின் பணி அமைந்ததென்றால் அது மிகையாகாது தொடர்ந்து இம் முன் பள்ளியின் சேவை நன்கு தொடரவும் வெள்ளிவிழா மலரானது சிறப்பாக வெளிவரவும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திருமதி.கௌ.பரந்தாமன்<br>
அதிபர்<br>
யா/கல்வியங்காடு இ.த.க பாடசாலை

# வாழ்த்துப்பா

*சிறுவர் முன்பள்ளிக் கூடம் தாம்!*
*யாழ் நல்லூரில் அமைந்ததுவாம்!*
*குருவாய் வாய்த்தார் சியாமளாவும்*
*திருவாய் ஆனார் சிறார்களுக்கே!*
*தன் நலம் கருதாத தயவுடை அதிபராய்*
*பன்முகப் பயிற்சியும் வழங்குகிறார்!*
*இருபத்தைந்து ஆண்டுகளாய்*
*குருவாய்ப் பொறுப்பை ஏற்றாரே!*
*பக்க பலமாய் ஆசிரியர் பலர்*
*தக்கோராய் இணைந்து உதவுகிறார்*
*அத்திபாரமாய் அமைந்த பள்ளி*
*வித்தகர் பலரை வழங்கி நிற்க*
*அத்தகையோரே உதவுகிறார்*
*இன்பம் இதுவெ தான் வேறு உண்டோ?*
*மன்னுயிர் காக்கும் இறையருளே*
*மறவோம் என்றும் அவன் அருளை*
*வாழ்க! நல்லூர் முன்பள்ளி வாழிய! வாழியவே!!*
*சூழ்க உங்கள் சேவை துலங்கவே ஞாலமெல்லாம்*
*வாழ்க! அதிபர்! ஆசிரியர்! சிறார் வாழிய! வாழியவே!!*

*திருமதி மனோன்மணி வரதராசா*
*(ஓய்வு பெற்ற ஆசிரியர்)*

## வித்தொன்று மரமாகி பேர் விருட்சமாகி...

யாழ் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி மாணவச் செல்வங்களின் ஆரம்பக் கல்வியின் முன்பள்ளி கற்கை எனும் அடித்தளத்தை இடும் பயணத்தில் 25 ஆண்டுகள் வெற்றி நடைபோட்டு வெள்ளிவிழா நிகழ்வை சிறப்பாக கொண்டாடும் இவ் வேளையில் அதன் நினைவாக வெளிவரும் சிறப்பு மலரிற்கு முத்தமிழ் முன்பள்ளியின் சகோதர முன்பள்ளியாகிய கொக்குவில் வளர்மதி முன்பள்ளியை நடாத்தும் வளர்மதி வாழ்வகம், கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் என்பவற்றின் சார்பாக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அரச மற்றும் நிறுவனங்களின் பேருதவிகள் ஏதுமின்றி பெற்றோரின் ஆதரவுடன் ஓர் முன்பள்ளியை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதென்பது சவால்மிக்கதோர் பணியாகும். அதுவும் யுத்தமேகம் சூழ்ந்ததோர் பிரதேசத்தில் 25 வருடங்கள் தடையின்றி ஓர் முன்பள்ளி நடாத்துவதென்பது எத்தனை துன்ப, துயரங்கள் நிறைந்தது என்பதனை சகோதர முன்பள்ளி என்றளவில் எம்மால் புரிந்து கொள்ளக் கூடியதே

மானிட வாழ்வில் முன்பள்ளிக் கல்வியானது ஏனைய அனைத்திலும் முதன்மையானது இப்பணி சிறப்பாக செயற்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்படும் போது தான் முழுமையான மானிடனை எதிர்கால சமூகத்திற்கு பொருத்தப்பாடான மனிதனை உருவாக்க முடியும். அவ்வாறான பணியினை எமது நாட்டில் இவ்வாறான முன்பள்ளிகள் தம்மாலான மட்டில் செய்து வருகின்றமை பாராட்டுக்குரிய விடயமாகும். அதிலும் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியானது கடந்த 25 வருடங்களாக தடையின்றி செய்து வரும் இப்பணியானது மிகவும் போற்றுதலுக்குரிய அளப்பெருஞ் செயலாகும்.

முன்பள்ளிகளுக்கென அரச அங்கீகாரம் அற்ற நிலையிலும் போதியளவு வேதனங்கள் அற்ற நிலையிலும் இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆற்றி வரும் சேவையினை எமது சமூகமும், மாணவச் செல்வங்களும் என்றும் மறந்திலர். போதிய வேதனம் இன்றி முன்பள்ளி ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் சேவையை நாம் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

அந்த வகையில் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியின் முதன்மை ஆசிரியை சியாமளா அவர்கள் கடந்த 25 வருடங்களாக இம் முன்பள்ளியின் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் சேவையை இப்பகுதி மக்கள் என்றும் மறவாது நன்றியுடன் போற்றி வருவர் என்பது நிச்சயம் அதுபோல் ஏனைய ஆசிரியர்களது அளப்பெரும் சேவையை என்றும் நன்றியுடன் மனதில் கொள்வர்.

யாழ் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியினர் தமது வெள்ளிவிழா ஆண்டில் தாம் கடந்து வந்த பாதையினை நினைவுகள் மீட்டுக் கொள்ளும் வகையிலும் தம்மை மீள்பார்வை, விமர்சனங்கள், ஆய்வுகளை செய்து எதிர்காலம் நோக்கிய தமது பணியை திட்டமிட்டு தீர்மானிக்கும் நிகழ்வாக இவ் வெள்ளிவிழா நிகழ்வுகளை ஒழுங்கமைத்துச் செயற்பட்டு கொண்டாடும் இவ்வேளையில் அவர்களது வெள்ளிவிழா நிகழ்வுகளும், மலர் வெளியீடும் சிறப்புற நடைபெற கொக்குவில் வளர்மதி முன்பள்ளி சார்பில் எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் தங்கள் எதிர்கால பணியிலும் தோழமையுடன் கைகோர்த்து பயணிப்போம் என்ற உறுதி மொழியையும் வழங்குகின்றோம். தம்பணி தொடர வாழ்க வாழ்க என மனதார வாழ்த்துகிறோம்.

கொக்குவில் வளர்மதி முன்பள்ளி சமூகம்
சம்பியன் லேன்,
கொக்குவில்

# பொறுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து
# வளமான விதையில் உருவான விருட்சகம்



செல்வி.சியாமளாதேவி சண்முகலிங்கம்
(முன்பள்ளி பொறுப்பாசிரியர்)

எமது முன்பள்ளி நடைபயின்ற அந்த பாதையினை ஒரு கணம் மீட்டுப் பார்க்கின்றேன். துன்பமும் பயமும் நிறைந்த அந்த வேளையிலும் இன்பம் நிறைந்த இனிய அந்த நினைவுகள் என்றும் மறக்க முடியாதவை. 1989, 1990 காலப்பகுதியில் எமது நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலையினால் அனைத்து கல்விச் செயற்பாடுகளும் குழப்பிய நிலை காணப் பட்டது. பாடசாலைகளுக்கு தொடர்ந்து சென்று கற்க பயந்த எமது சிறுவர்கள் வீட்டில் இருந்த வேளை, அவர்கள் கல்வி மறக்கப்படக்கூடாது என்ற நோக்கில் எமது அயலில் வாழ்ந்த வேறுபட்ட வயதுப் பிரிவினர்கள் கல்வி கற்க என்னிடம் வந்தனர். அன்று வெளிவாரிப் பட்டப் படிப்பினை கற்று வந்த எனக்கு இச்செயற்பாடு மிகவும் சந்தோஷமாகவும் பொழுது போக்காகவும் அமைந்தது. இதனால் அவர்களை அணைத்து அன்பு காட்டி கற்பித்தேன். மாதங்கள் கடந்தன. சிலர் பாடசாலை சென்றனர். அவர் களுடன் சேர்ந்து வந்த 3, 4 வயது சிறுவர்கள் கற்பதற்கு விருப்பம் கொண்டதன் விளைவே 1991 இல் முத்தமிழ் முன்பள்ளி தோன்றியது. அன்று 4, 5 சிறார்களோடு தோன்றிய முத்தமிழ் காலப்போக்கில் பல முத்துக்களை பெற்று படிப்படியாக 80 முத்துக்கள் வரை வளர்த்துக் கொண்டது.

மாணவர் தொகையும் படிப் படியாக அதிகரிக்கவே ஆசிரியர் தொகையும் இரண்டாகியது. பின்னர் இது வளர்ந்து தற்போது 3 நிரந்தர ஆசிரியர்களும் ஓர் உதவியாளரையும் கொண்டு மிளிர்கிறது.

எமது முன்பள்ளி தமது ஆரம்ப காலத்தில் வருடாந்த விளையாட்டு விழாவினை சிறிய அளவில் நடாத்தி வந்த போதும் இதன் வளர்ச்சியின் ஒவ்வோர் அங்கமாக எமது முன்பள்ளிக்கான ஓர் சின்னத்தினை வடிவமைத்து கொண் டோம். இதன் கருப்பொருள் முத்தமிழில் பூத்துக் குலுங்கும் நெல் மணிகள் ஒவ்வொன்றும் கல்வியில் கருத்தூன்றிய மணிகளே என்பதே ஆகும். அதனைத் தொடர்ந்து எமது முத்தமிழிற்கான கீதம் ஒன்று உருப்பெற்றது. இதில் முன்பள்ளிச் செயற்பாட்டினை அடித்தளமிட்ட முத்தமிழ் முன்பள்ளியை அந்த பிஞ்சு உள்ளங்கள் வாழ்த்தி பாடும் கீதமாகும் மாணவர் தொகை அதிகரிக்கவே விளையாட்டு

விழாவினை இலகுபடுத்த இரு இல்லங்களை உருவாக்கினோம். தென்றல் வீச தேனருவி பாய்ந்ததாக இவை அமைந்திருந்தன. 2004ம் ஆண்டில் புத்தொளி கருவி மூலம் ஒரு பாண்ட் வாத்திய குழுவினை அமைத்ததன் பலனாக 2008இல் பெற்றோர்களின் உதவியுடன் பாண்ட வாத்திய கருவிகளை கொள்வனவு செய்து நல்லதொரு பான்ட வாத்திய குழுவை உருவாக்கியுள்ளோம்.

தற்போது எமது முன்பள்ளி கல்வி வலய நேரடி மேற்பார்வையின் கீழ் உள்ளதனால் அவர்களின் திட்டமிடலுக்கேற்ப 1ம் தவணையில் பேச்சுத்திறன் நிகழ்வினை செய்து வரும் வேளை இந்நிகழ்வில் தெரிவான சிறார்கள் வலயமட்டம் வரை சென்று தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் 1ம் இடங்களை பெற்று வந்துள்ளனர். (2015, 2014, 2013, 2011, 2010) இவை எமது சிறார்கள் முதற்சாதனை என்றே கூறலாம். 2ம் தவணையில் விளையாட்டு விழாவினை நடாத்துகின்றோம். இவர்கள் கோட்ட மட்ட, வலயமட்ட, மாகாணமட்ட விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்கெடுத்து உள்ளனர். பேச்சு ஆற்றல், உடற்செயற்பாடு மட்டுமல்ல எம்மிடம் நல்ல கலையாற்றல்களும் உண்டு என கடந்த 04,05 வருடங்கள் நடைபெற்ற எமது முத்தமிழ் விழாவில் காட்டியுள்ளோம்.

இவ்வாறான நிகழ்வுகள் மட்டுமன்றி வருடா வருடம் நாம் இருவகையான சுற்றுலாக்களை மேற்கொண்டு வருகின்றோம் ஒன்று கற்ற இடங்களை நேரடியாக பார்த்து காட்சியோடே பதிந்து கொள்ள ஒரு கல்வி சுற்றுலாவும் 3ம் தவணை முன்பள்ளி கல்வியை முடித்து முறைசார் கல்விக்கு செல்லும் மாணவர்களை மகிழ்வூட்டும் வகையில் ஒரு மகிழ்வான சுற்றுலாவும் மேற்கொண்டு வருகின்றோம். இவற்றைவிட சிறுவர், முதியோர் தினம், ஆசிரியர் தினம் என்பன கொண்டாடி வருகின்றோம். எமது முன்பள்ளியின் கற்றல் செயற்பாடானது மொண்டசூரி அம்மையாரின் செயல்திட்டம் சார்ந்தே ஆரம்ப காலத்தில் நடைபெற்று வந்தது. ஆனால் தற்போது விளையாட்டல்ல வியையாட்டுக்கள் எனும் கைந்நூலின் வருகையுடனான பயிற்சியின் பின் அதனையே பயன்படுத்தி வருகின்றோம். கற்றல் வட்டத்தினூடே மாணவர்கள் கற்றல் செயற்பாடுகள் இலகுபடுத்தப்படுகின்றன. வளர்ந்து வரும் சமூகத்திற்கு ஏற்ப கணினி மூலமான கற்பித்தல்கள் வேண்டப்படுகின்ற இவ் வேளையில் அதற்கான பாதுகாப்பான கட்டட வசதி எமது முன்பள்ளியில் இல்லாத வகையில் மாற்று இடத்தில் கணினி பற்றிய அறிவினை குறகிய அளவில் வழங்கி வருகின்றோம். வாய்மொழி மூலமான ஆங்கிலக் கல்வி சிறுவர்களுக்கு மகிழ்வூட்டும் வகையில் ஆடல் பாடல் விளையாட்டுச் செயற்பாடுகள் என்பன அன்றாட வகுப்பறைச் செயற்பாடுகளாகும். இவை எமது சிறுப்பு மலரில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

எமது முன்பள்ளியின் கடந்த 24 வருடங்களினை நோக்குகையில் "எமது முன்பள்ளியில் தமது முன்பள்ளிக் கல்வியை முடித்து வெளியேறி 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் 80 வீதமான மாணவர்கள் சித்தி பெறுவதுடன் கூடிய புள்ளிளை பெற்று சாதனையும் படைத்துள்ளனர். அதே போன்றே க.பொ.த.சாதாரண தரம், உயர்தர பரீட்சைகளில் சிறப்பான பெறு பேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளனர். இதன் வளர்ச்சிப் படியாக எமது முன்பள்ளியின் ஆரம்பகால மாணவர்கள் பலர் சிறந்த தொழில் நிலைப்பதவிகளில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே இன்று இந்த முத்தமிழ் முன்பள்ளி தனது 25வது அகவையில் தான் விதைத்த இந்த வளமான வித்தினால் உருவாகிய விருட்சங்கள் மூலம் வெள்ளிவிழா சிறப்பு மலரினை வெளியிட்டுள்ளனர் என்பது சான்றுபகர்கிறது. ஒரு பிள்ளையின் ஆளுமை வளர்ச்சிக்கு வித்திடுப வர்களாக ஆசிரியர்களும் பெற்றோர் களும் அமைகின்றனர். அந்த வகையில் எமது முன்பள்ளி இவ்விரண்டையும் சிறப்பாக பெற்றுள்ளமை எமது முன்பள்ளிக்கான ஒரு கொடையாகும். எமது முன்பள்ளியில் கற்பித்துச் சென்ற ஆசிரியர்களும் சரி தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்களும் சரி மிகவும் அர்ப்பணிப்புடன் தமது சுய கடமைகளை ஒருபுறம் வைத்து விட்டு நேரம்பாராது கடமையாற்றுகின்றனர். குறைந்த வேதனத்திலும் தமது நிறைந்த சேவையினை மனப்பூர்வமாக வழங்கும் இவ் ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டி யவர்கள்.

எமது முன்பள்ளி சகல செயற்பாடுகளிலும் ஓர் சிறந்த முன் மாதிரியான முன்பள்ளியாக திகழ்வதற்கு இவ் ஆசிரியர்களது அர்பணிப்புடன் கூடிய பெற்றோரின் பங்களிப்புமே காரணமாகின்றது. எமது முன்பள்ளி தனியார் முன்பள்ளி மட்டுமன்றி சகல நிலைகளிலுமுள்ள சிறார்கள் அனை வரும் கல்வி கற்க வேண்டுமென்ற ஒரு நோக்கில் குறைந்தளவு கட்டணமே அறவிட்டு வருகின்றோம். இதனால் எமது முன்பள்ளியின் பொருளாதார நிலை குறைவாக இருந்த போதிலும் எமது சமூகம் சார் பெற்றோர்கள் வழங்குகின்ற ஆக்கமும் ஊக்கமுமே எம்மை நிறைவடைய வைக்கின்றது. எமது முன் பள்ளி தனியார் முன்பள்ளியாக இருப்பினும் சமூகம் சார் அமைப்பின் கீழ் இயங்குவதனால் அவர்களது பங்களிப்பு எம்மை வளர்த்தெடுக்கிறது. இருப்பினும் எமது முன்பள்ளிக்கென ஒரு நிலையான கட்டிடம் இது வரை ஏற்படுத்தப் படவில்லை. எமது முன்பள்ளியில் பல வளங்கள் இருப்பினும் அவற்றை சரியாக பயன்படுத்த போதுமான கட்டடவசதி இல்லை. இதுவெ எமது முன்பள்ளிக்கான ஒரு பெரும் குறையாகும். எனவே இந்த சிறப்பு மலர் மூலம் எமது சமூகத்திடம் நான் கேட்டுக் கொள்வது ஒரு நிறுவனத்தை ஆரம்பிப்பதே கடினமானது. அமைந்துவிட்டால் அதனை கட்டி வளர்ப்பது இலகுவானதே.

எனவே எனது காலத்தில் இந்த முத்தமிழ் முன்பள்ளி கட்டியெழுப்பட்டு அடுத்த சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதே எனது கனவாகும். இந்த முத்தமிழ் என்னுடன் மறைந்து போகாது வாழையடி வாழையாக பல முத்துக்களை உருவாக்க வேண்டும்.

நிறைவாக இம் முன்பள்ளியை ஆரம்பித்த வேளையில் வெள்ளி விழா காண்போதென நான் எண்ணவில்லை. ஆனால் இன்று அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு பெரும் விருட்சமாக வெள்ளிவிழா காண்கின்றோம். என என்னும் போது சொல்லால் வடிக்க முடியாத ஓர் சந்தோஷம் ஏற்படுகின்றது. எமது முன்பள்ளி மேலும் வளர வேண்டும். எமது நாட்டிற்கு நல்லதோர் முத்துக்களை வழங்க வேண்டும். அதற்கு எமது பழைய மாணவர்களும் இச் சமூகமும் உறுதுணையாக இருப்பார்கள் என நான் நம்புகின்றேன். மீண்டும் எமது முன்பள்ளி சிறக்க எல்லாம் வல்ல பேச்சி அம்மன் உறுதுணையாக இருப்பாளென வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

## வாழ்த்துச் செய்தி



வடமாகாணத்தில் வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூரினிலே யா/நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி எனும் நாமத்துடன் 17.01.1991 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 17.01.2016 இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவில் வெள்ளிவிழா கண்டிருக்கும் எமது யா/நல்லூர் முன்பள்ளியினை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

முன்பள்ளி வரலாற்றிலே ஒரு முன்பள்ளியானது வெள்ளி விழா காணுவதென்பது ஒரு சாதாரண விடயமாக கருத முடியாது. இவ் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் தன்னலமற்ற நிறைவான அர்ப்பணிப்புக்கள் தேவை. அந்த வகையிலே இந்த முன்பள்ளியினைத் தோற்றுவித்து இன்று வரை வழிநடத்திக் கொண்டிருக்கும் இம் முன்பள்ளியின் ஆரம்பகர்த்தாவும், முதல்வரும் ஆகிய செல்வி சியாமளா சண்முகலிங்கம் அவர்களின் சேவையினை எமது முன்பள்ளியின் பெற்றோர்களின் சார்பாக வாழ்த்துகின்றேன். வாழ்க் நீடுழி.

எமது தமிழ் மக்களின் அற நெறிகளையும், சமூக கலாச்சார விழுமியங்களையும் பேணிக் காப்பதோடு மட்டுமல்லாது கற்பித்தல் செயற்பாடுகளோடு ஏனைய புற பாடவிதாக செயற்பாடுகளான நாடகம், நாட்டியம் போன்ற கலை நிகழ்வுகளோடு விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளிலும் யாழ்ப்பாண முன்பள்ளியிலே தனக்கென ஒரு வரலாற்று பெயரை பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள் என்பதற்கு இலக்கணமாய் இந்த முன்பள்ளியானது பல கல்விமான்களையும் ஆசான்களையும் தொழில் வல்லுனர்களையும் உருவாக்கி இலங்கை திருநாட்டிற்கு கொடுத்துள்ளதோடு இன்றும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

முத்தமிழின் முத்து முத்தான சித்திரங்களான எம் சிறார்களை மாணவ மணிகளை என்றும் அழியா முத்திரையிட்டு முத்தமிழை முறையாக கற்பித்து இலங்கை திரு நாட்டிற்கு இன்றும் பல நூறு, ஆயிரமாயிரம் அறிஞர்களை, ஆசான்களை, கல்விமான்களை, தொழில் வல்லுனர்களை உருவாக்க வேண்டும் என வேண்டி இந்த வெள்ளிவிழா ஆண்டில் முன்பள்ளியின் பெற்றோர்களாக இருக்க பாக்கியம் பெற்றதிற்கு இறைவனுக்கு நன்றி கூறி பொன்விழா ஆண்டை நோக்கி வீறுநடை போட வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

"வாழ்க முத்தமிழ் முன்பள்ளி வளர்க முத்தமிழ் முன்பள்ளியின் புகழ்"

சுப்பிரமணியம் மணிராஜா
தலைவர்
பெற்றோர் ஆசிரியர் சங்கம்
யா/நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி

# கடந்தகாலங்களில் கடமையாற்றிய ஆசிரியர்கள்



அமரர்
செல்வி சுதர்சினி நாகலிங்கம்



செல்வி
ஜெயகௌரி சின்னராசா



செல்வி
கிருசாந்தி யோகரட்ணம்



செல்வி லாவண்ஜா



செல்வி
ஜெனிற்றா காராளசிங்கம்



செல்வி
கார்த்திகா செல்வரட்ணம்

**இவர்களுடன்**
திருமதி ராஜேந்திரன் தவச்செல்வி

# தற்போது கடமையாற்றும் ஆசிரியர்குழாம்




## பெற்றோர் ஆசிரியர் சங்கம் - 2015



## மலர் வெளியீட்டுக் குழு - 2016





# முத்தமிழ் பாலர் பாடசாலையின் பழைய மாணவர் சார்பாக

ர.செந்துஜன்
(H.N.B Assurance வெளிக்கள குழு முகாமையாளர்)

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன்

முதற்கே உலகு" என்று கூறிய வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்கு அமைய எங்களது முத்தமிழ் பாலர் பாடசாலையின் பாழைய மாணவர்களாக திகழும் எங்களுக்கு கல்வி எனும் பெருங்கடலிலே ஆரம்பத்தினை தந்தவள் எம் முத்தமிழ் அன்னை, யாழ்ப்பாணத்திலே நல்லூர் எனும் புனிதமான இடத்திலே கல்வியங்காடு எனும் பிரதேசத்தில் 1991/01/17 ஆரம்பிக்கப்பட்ட இந்த முத்தமிழ் பாலர் பாடசாலையானது இந்த வருடம் தனது 25வது வருடத்தில் காலடி எடுத்துவைத்து வெள்ளிவிழாக் காண்பதனை நாம், பழைய மாணவர் சார்பாக பெருமபகிழ்ச்சி அடைகின்றோம் அதாவது முத்தமிழ் பாலர் பாடசாலையானது இன்று தன்னகத்தே 25 வருடங்களை கொண்ட ஓர் சிறப்பான கற்பித்தல் தொழிற்பாட்டை கல்விச் சமூகத்திற்கு வழங்கி வருகின்றமையை நாம் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் நாம் முத்தமிழ் பாலர் பாடசாலையின் பழைய மாணவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய நவீனகாலத்திலே விரைவான வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறும் கல்வியிலே உயர்ந்து விளங்கி நவீன கால நுட்பத்தோடு எமது வாழ்க்கை நிலைகளை மாற்றியமைக்கவும், சமூகத்தில் நற் பிரஜையாக நாம் வாழவும் எங்களை சீர்தூக்கி நெறிப்படுத்தியவள் எம் முத்தமிழ் அன்னை என்று சொல்வது மிகையாகாது. நாம் குழந்தைகளாக அன்னை மடியில் தவழ்ந்த காலம் தொடக்கம் எமது வாழ்க்கையின் கடைசி தருணம் வரை கல்வி என்பது முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்றது.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கு அமைவாக எமது இளமைப் பருவத்தில் கல்வியினை சீராக எமக்களித்த ஆசிரியர் சியாமளா அவர்களை இத் தருணத்தில் நாம் பாராட்டுகின்றோம். அவரது கற்பித்தல் முறையானது எமக்கு இளமைப்பருவத்தில் கல்வியினை சீராக பயில முடிந்தது. அது மட்டுமல்லாது அவர் மாணவச் செல்வங்களுடன் பழகும் முறையானது தமது குழந்தைகளைப் போல் எங்களை வழிநடத்தி எமது கல்வி முன்னேற்றத்தில் பெரிதும் பங்காற்றினார். மேலும்

முத்தமிழ் பாலர் பாடசாலையானது இன்று வெள்ளிவிழாக் காணும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது என்றால் அப்பாடசாலையின் ஆசிரியர்கள், நிர்வாகம், கற்பித்தல் முறைகள் போன்ற பல்வேறுபட்ட செயற்திட்டங்கள் திறமையானதாகவும் இருப்பதே ஆகும். அதாவது நவீன கால தொழில்நுட்ப சீராகவும் வளர்ச்சியானது மானிட வாழ்வில் சகல தொழிற்பாட்டையும் திறன்பட மாற்றியுள்ளது. அவ்வாறே கல்விசார் தொழிற்பாடும் இன்றைய காலகட்டத்தில் நவீன முறையில் வளர்ச்சி கண்டுள்ளது. எனவே இவ்வாறான வளர்ச்சியின் போக்கிற்கு இணங்க கற்பித்தல் முறையினை மாற்றியமைத்து சிறார்களின் கல்வி முன்னேற்றத்தில் திறமையானதாகவும், ஆரோக்கிய மானவர்களாகவும் மாற்றியமைத்து நவீன காலஓட்டத்திற்கு அமைவாக எங்கள் ஒவ்வொருவரையும் உருவாக்கிய பெருமை இந்த முத்தமிழ் முன்பள்ளிக்கே சாரும்.

மேலும் முத்தமிழ் முன்பள்ளியானது தன்னகத்தே ஓர் தனிப்பெருமையைக் கொண்டு விளங்குகின்றது. அதாவது இங்கு கல்விகற்று வந்த என்னைப் போன்ற பல மாணவர்கள் இன்று சமூகத்தில் பெரிதும் போற்றப்படுபவர்களாக நற்குணமும், நல்லறிவும் கொண்டவர்களாக திகழ்கின்றனர். எனவே சமூகத்திற்கு ஏற்ற பிரஜைகளை உருவாக்கி அவர்களின் வாழ்வில் ஒளியூட்டிய பெருமை எமது முத்தமிழ் அன்னைக்குச் சாரும் எனலாம்.

எனவே இம் முத்தமிழ் பாலர் பாடசாலையில் கல்வி கற்ற நாங்கள் இன்று எமது பாலர்பாடசாலை இருபத்தைந்தாவது ஆண்டில் வெள்ளிவிழாக் காண்பதை இட்டு பெருமகிழ்வடைவதோடு பழைய மாணவர்கள் சார்பாக முத்தமிழின் சேவை என்றென்றும் தொடர மன நிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

# பெற்றோர் உள்ளத்திலிருந்து

திருமதி.சிவாஜினி பன்னீர்ச்செல்வன்

யாழ் மாவட்டத்தின் நல்லூரில் ஆரம்ப கல்வியை புகட்டுவதில் அழியாத தடம் பதித்து புகழ் பூத்து நிற்கும் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி இன்று தனது வெள்ளி விழாவைக் கொண்டாடி நிற்கின்றது.

எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் ஆரம்பிக்கப்பட்ட இவ் முன்பள்ளி முதல்வரின் ஊக்கத்தினாலும் ஆசிரியர்களின் உதவியுடனும் பெற்றோர்களின் ஒத்துழைப்பினாலும் நலன்விரும்பிகளின் அனுசரணையினாலும் இன்று நல்லூரில் மட்டுமன்றி யாழ் மாவட்டத்திலும் முன்னிலை முன்பள்ளியாக நிமிர்ந்து நிற்கின்றது.

சிறந்த வீடொன்றை அமைப்பதற்கு அத்திவாரம் எவ்வளவு முக்கியமானேதோ அதே போல் சிறந்த கல்விச் செயற்பாட்டிற்கும் சிறார்களின் ஆளுமையை விருத்தி செய்வதற்கும் முன்பள்ளியே அடித்தளமாகும். இதன் சிறப்பே ஆரம்பக் கல்வியிலும் இரண்டாம் நிலைக் கல்வியிலும் மாணவர்கள் சிறப்பாக அமைய வழிவகுக்கின்றது. இந்த வகையில் முத்தமிழ் முன்பள்ளியின் சேவை மகத்தானதாகும்.

பெற்றோரின் அரவணைப்பிலிருந்து தம்மை நாடிவரும் ஒவ்வொரு குழந்தையையும் தாயாக அரவணைத்து கல்வியில் கசப்பு ஏற்படாமல் கல்வியுடன் ஆடல், பாடல் போன்ற கலைகளையும், விளையாட்டையும் ஒன்றுசேர புகட்டுகின்றது. முத்தமிழ் முன்பள்ளி. அத்துடன் தமிழ், ஆங்கில, பேச்சுப்போட்டி, கல்விச் சுற்றுலா, கண்காட்சி, வாணிவிழா, ஆசிரியர் தினம், சிறுவர் முதியோர் தினம், ஆண்டுவிழா என வருடாந்த வேலைத் திட்டங்களையும் செய்யத்தவறுவதில்லை. அச்செழுத்துடன் திறம்பட வாசிக்கத்தக்கதாகவும் பேச்சுத்திறன் மிக்க குழந்தைகளை உருவாக்கி தந்துள்ளது. நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி. அந்தவகையில் முத்தமிழ் சமூகத்தினருக்கு என் நன்றி கலந்த பாராட்டுக்கள்.

இவ் முன்பள்ளியில் ஆரம்ப அடித்தளத்தை பெற்ற சிறார்களில் ஏறத்தாழ 98% வீதமானவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு பெற்றோர்கள் சார்பில் முத்தமிழை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றோம்.

கல்வியில் மட்டுமன்றி ஒழுக்கத்திலும் சிறந்த மாணவர்களை இவ் முத்தமிழ் உருவாக்குகின்றது என்பதற்கு உதாரணமாக வீட்டிலும் நாட்டிலும் முதியவர்களை எவ்வாறு பாதுகாத்து பேண வேண்டும் என்பதை அவர்கள் வருடாந்தம் நடாத்திவரும் முதியோர் தினவிழா எடுத்துக்காட்டுகின்றது. இதன் மூலம் இப் பள்ளியில் பயிலும் சிறார்களின் மனதில் முதியவர்களை கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும்.

இதற்கெல்லாம் மூலாதாரமாக விளங்கும் பள்ளி முதல்வரான செல்வி சியாமளா சண்முகலிங்கம் அவர்கள் தனது முழு நேரத்தையும் அர்ப்பணித்து நிர்வாகத்தை திறம்பட நடாத்தி வருகின்றமையை ஓர் பெற்றோர் என்ற முறையில் பாராட்டுகின்றேன். அவர்களையும், அவர்களுடன் இணைந்து பணியாற்றிய, பணியாற்றுகின்ற ஆசிரியர்களையும் மற்றும் நல்லூர் வடக்கு மனோன்மணி அம்மன் ஆசிர்வாதிப்பாராக நடைபெறும் 25வது ஆண்டு நிறைவுவிழா சிறப்பான முறையில் நடைபெறவும், நம்நாட்டுக்கு இன்னும் நன்மாணாக்கர்களை உருவாக்கித்தரவும் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி மென்மேலும் வளர்ச்சியடையவும் இறைவன் ஆசீர்வதிப்பாராப.

"வாழிய வாழிய முத்தமிழ் எங்கள் வளமுடன் வளரும் முன்பள்ளியே"
முத்தமிழ் சமூகத்தையும் இப்புனிதப் பணி தொடர

# மழலையர் கல்வியை மாண்புற வளர்ப்போம்

சிவத்தமிழ் வித்தகர்
சிவமகாலிங்கம்
(ஓய்வு நிலை விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை)



**01. மக்கட் செல்வத்தின் மாண்பு**

ஒரு மனிதன் வாழ்க்கையில் பெறும் செல்வங்களில் மிக உயர்ந்த செல்வமாகக் கருதப்படுவது மக்கட் செல்வமேயாகும். ஒரு நாட்டின் சீரும் சிறப்பும் பேரும் புகழும் அந்நாடு பெற்றெடுத்த நன்மக்களைப் பொறுத்தே அமையும். ஒரு குழந்தையைப் பெற்றுச் சமூகத்திற்குத் தருவது தாயின் கடமை. அப்பிள்ளையைச் சான்றோன் ஆக்குவது தந்தையின் கடமை. நல்ல பிரஜையாக அவனை வாழவைப்பது அரசனின் கடமை என்பதை

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
நன்னடை நல்லகல் வேந்தற்குக் கடனே"

எனச் சங்க இலக்கியங்களிலே ஒன்றாகிய புறநானூறு கூறுகிறது. குழந்தைச் செல்வத்தைப் பெற்றோரே பெற்றோர் ஆவார். பல ஏக்கர் நிலத்தையும் மாடிவீடுகளையும் கோடிக் கணக்கான பணத்தையும் பெற்றிருந் தாலும் அவர்கள் பெற்றோர் ஆகார். விரும்பினால் அவர்களைக் கோடீஸ்வரர் என்று அழைக்கலாம். குழந்தைச் செல்வம் இல்லாதவர்களின் வாழ்வு குறைவாழ்வு அரைவாழ்வு என்பதைப் பாண்டியன் அறிவுடை நம்பியின் பின்வரும் புறநானூற்றுப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

படைப்பும் பல படைத்துப் பலரோடு
உண்ணும்
உடைப்பருஞ் செல்வராயினும்
இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டிக்
இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்
நெய்யுடைசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறு இல்லைத் தாம் வாழும் நாளே

செல்வம் இன்பத்தைக் கொடுப் பதைப் போல் பொருள் புகழைக் கொடுக்கும் மக்கட் செல்வம் இந்த இரண்டையும் தரும் சிறப்புடையதாகும். அறிவு சார்ந்த நன் மக்களைப் பெறுவதே அடைய வேண்டிய நன்மைகளில் மிக உயர்ந்தாகும் என்பதைப் "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறு அல்ல பிற" எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது.

**02. பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு**

மழலையின் சிரிப்பு தெய்வத்தின் சிரிப்புக்குச் சமனாகும். குழந்தைகளின் உள்ளம் கள்ளம் கபடமற்றது. பொறாமை வஞ்சகம் சூது போன்ற அசுர குணங்கள் பீடிக்காத பருவம் குழந்தையின் நடத்தைக் கோலங்கள் உருவாகுவதற்கு அவன் வாழும் சூழலே காரணமாக அமைகிறது. இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நல்ல குழந்தை களாகவே பிறக்கின்றன. சிறிய வயதில் குழந்தையின் மனதில் படியும் எண்ணக் கருக்கள் வளர்ந்த பின்பும் அவனிடம் தொடர்கின்றன. பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சு விதைகளை விதைக்காமல் நல்ல விதைகளை விதைத்து விட வேண்டிய பொறுப்பு பெற்றோரின் கடமையாகும். நல்ல சத்துள்ள உணவுகளைக் கொடுத்து குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்த் தெடுப்பதிலே தாய்மார்கள் மிகவும் அக்கறையோடு செயற்படுகிறார்கள். உடலைப் போர்த்து வளர்ப்பதோடு மட்டும் நின்று விடாமல் அறவிழுமி யங்களை மதித்து வாழும் தன்மையைச் சிறுவர்களிடம் ஏற்படுத்தும் பொறுப்பும் தாய்மாருக்கே உண்டு. "ஒருவன் நல்லவனாவதும், கெட்டவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்றே சினிமாப்பாடலும் குறிப்பிடுகிறது.

பத்துமாதம் கருவிலே சுமந்து பெற்றெடுத்த குழந்தையைத் தாயானவள் கண்ணும் கருத்துமாக வளர்க்கின்றாள். பிள்ளை பிறந்தவுடன் தாய் அடையும் மகிழ்ச்சியினை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. தான் பெற்ற பிள்ளை சான்றோன் எனப் பலராலும் பாராட்டப்படுவதையே தாயானவள் விரும்புவாள் என்பதை

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்
மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்றே தெய்வப் புலவர் திருவள்ளுவரும் கூறுகின்றார்.

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி தந்தை தன் மகனுக்கு அறிவைக் கொடுப்பது போல இந்திரனே நமக்கு அறிவைத்தா (புத்ராயேவ பதர சிஷதம்) என்று பிரார்த்திப்பதை வேதங்களிலே காணலாம். தான் பெற்ற பிள்ளையை அறிவாளியாக்கி கற்றறிந்த சபையிலே முந்தியிருக்கச் செய்வது தந்தையின் கடமை என்பதை

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

எனச் செந்நாப் போதரா கிய வள்ளுவரும் திருக்குறளில் கூறுகின்றார்.

**03. குழந்தைகளின் உருவாக்கத்தில் பாலர் கல்வி நிலையங்களின் பங்களிப்பு**

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. ஐந்தில் வளைத்து விட்டால் ஐம்பதில் வளைவது எளிதாகும். அதனால் சின்னஞ்சிறு பருவத்திலேயே

சீரிய குடிமக்களாக்குவதற்கு ஏற்ற வகையில் பயிற்சி தருவது பெரும் பலனைத் தரும்: நாட்டிற்கும் வீட்டிற்கும் நலம் தரும் சிறுவர்கள் ஒழுங்கான முறையில் கல்வியைப் பெறுவதற்கு வழி காட்ட வேண்டிய பொறுப்பு பெற்றோர். ஆசிரியர், சமூக நலன் விரும்பிகள் ஆகிய அனைவருக்கும் உண்டு. ஒரு மாணவனின் அறிவுக்கண் திறப்பதற்கு துணை செய்வதில் ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். ஆரம்பக் கல்வி ஒழுங்காக அமைந்தால் தொடர்ந்து மாணவன் பெறும் கல்வி சீராக இருக்கும்.

மூன்று வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளை ஆதரித்துக் கல்வி போதிக்கும் நிலையங்களாக முன்பள்ளிகள் காணப் படுகின்றன. இன்று இலங்கையின் பல பாகங்களிலும் பெரும் எண்ணிக்கை யிலான முன் பள்ளிகள் தனியார் களாலும், சில நிறுவனங்களாலும் நடாத்தப்பட்டு வருகின்றன. முன் பள்ளியைப் பெறக்கூடிய வயதில் உள்ள மாணவர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே முன் பள்ளிக்குச் செல்கிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்கள் முன் கல்வியைச் சீர் செய்வதில் அரசாங்கமும் அக்கறை காட்டி வருகிறது.

பாலர் கல்வியில் அக்கறை எடுத்துச் செயற்பட்ட கல்வியியாளர்களில் மொன்ரிசூரி அம்மையார் முதலிடம் பெறுகின்றார். பிள்ளைகளின் இயற்கை நிலையில் அவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவதன் மூலம் அவர்களைத் திறமைசாலிகளாக வளர்க்கலாம் என்பதை மொன்ரி சூரி அம்மையார் எடுத்துக் காட்டினார். உளவிருத்தியில் பின் தங்கியுள்ள பிள்ளைகளுக்கு கல்வி யறிவு புகட்டுவதில் ஈடுபட்ட அம்மையார் தாம் கையாண்ட கற்பித்தல் முறையில் பெருவெற்றி கண்டார். இந்த கற்பித்தல் முறையை சாதாரண குழந்தை களுக்கும் பயனளிக்கும் வகையில் அம்மையார் செயற்படுத்தினார். குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியை அவர் பெரிதும் விரும்பினார். குழந்தைகள் எவருடைய நிர்ப்பந்தமோ குறுக்கீடோ இன்றித் தாமாகவும் சுதந்திரமாகவும் கற்கக் கூடிய இடமாகப் பாடசாலைகள் அமைய வேண்டும் என்றார். பிள்ளைகளிடம் இயல்பாகவே அடங்கி யிருக்கும் ஆற்றல்களை வெளிப் படுத்துவதே ஆசிரியரின் கடமை என்றார்.

“மாணவர்கள் திணிக்கப்படும் பாத்திரங்கள் அல்ல ஏற்றப்படும் தீபங்கள்” என்பதே கல்விச் சிந்தனையா ளர்களின் கருத்தாகும். பாலர்களாக மொன்ரி சூரிப் பள்ளிகளிலும் சிறுவர் களாக ஆரம்பப் பாடசாலை களிலும் கல்வி கற்கும் மாணவர்களே நாட்டின் தலைவர்களாக நாளை திகழப் போகின்றார்கள். இதனை

“ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்”

என குழந்தைக் கவிஞர் அழ - வள்ளியப்பா தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

**04. முன்பள்ளி ஆசிரியர்களின் செயற்பாடு**

வீட்டுச் சூழலில் இருந்து விடுபட்டுக் கல்வி கற்கவரும் மாணவர்களை அரவணைத்துக் கற்பிப்பதற்கு பெண் ஆசிரியைகளே பொருத்தமுடையவர்கள் என்ற கருத்து கல்வியியலாளர்களிடம் நிலவி வருகிறது. அன்பு, கருணை, தாயுள்ளம், பொறுமை என்பன பெண் ஆசிரியைகளிடம் இயல்பாகவே குடிகொண்டிருக்கும் பண்புகளாகக் காணப்படுகின்றன. குழந்தைகளிடம் துடுக்கும், குறும்பும் அதிகமாகவே இருக்கும் இவற்றைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளும் தன்மை முன்பள்ளி ஆசிரியர்களிடம் இருத்தல் வேண்டும். ஆடியும் பாடியும் அபிநயத்துடன் கற்பிப்பதையே சிறுவர்கள் விரும்புகிறார்கள் கதைகளின் ஊடாகப் பிள்ளைகளை ஈர்த்துக் கற்பிக்க கூடிய ஆற்றல் முன்பள்ளி ஆசிரியர்களிடம் இருத்தல் வேண்டும்.

குழந்தைகள் ஓடி விளையாட வேண்டும். சோர்வின்றிச் சுடரோடு பிரகாசிக்க வேண்டும். குழந்தைகளின் உடலிலோ உள்ளத்திலோ சோர்வு ஏற்படக்கூடாது. கூட்டுறவு மனப்பான்மையோடு அனைவருடனும் கூடி விளையாட வேண்டும். குழந்தைகளின் மனம் புண்படும் விதமாக எதுவித வார்த்தையும் பேசக் கூடாது இந்த உயர்ந்த சிந்தனைகளையெல்லாம் பாரதியார் தனது ஓடி விளையாடு பாப்பா என்ற பாடலின் ஊடாக விளக்குகிறார்.

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருந்தலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

குழந்தைகளின் உடல் வளர்ச்சியோடு அறிவு வளர்ச்சி, தன்னம்பிக்கை, தன்மானம், மனிதப்பண்பு, அன்பு, நாட்டுப் பற்று போன்ற பண்புகள் எல்லாம் குழந்தைகளிடமும் உருவாக்கக் கூடியதாக கல்வி வழங்கப்படல் வேண்டும். குழந்தைகளிடம் அன்பு காட்டுவதில் அன்னையர்களாகவும், அறிவூட்டுவதில் தந்தையர்களாகவும், பழகுவதில் நண்பர்களாகவும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

முன்பள்ளிச் சூழல் மாணவர்களை ஈர்ப்பதாக அமைந்திருக்க வேண்டும் மாணவர்கள் மகிழ்ச்சியுடன் விரும்பி வரக்கூடிய சூழல் அங்கே காணப்படல் வேண்டும் கற்பதை ஒரு சுமையாகக் கருதாமல் சிறுவர்கள் விரும்பிக் கற்க கூடிய தன்மையில் கற்பித்தல் முறைகளும் அமைதல் வேண்டும். குழந்தைகளின் மனம் பச்சைக் களிமண் போன்றது. அதில் எப்படிப்பட்ட உருவத்தையும் செய்யலாம். கையெழுத்தைச் சரி செய்வதிலிருந்து தலையெழுத்தை முடிவு செய்வது வரை

குழந்தையின் முன்னேற்றத்திற்குப் பல தளங்களில் ஆசிரியரால் உதவமுடியும்.

வகுப்பிற்கு உள்ளேயும் வெளியேயும் ஆசிரியரின் நடை, உடை, பாவனை, பேச்சு அனைத்தையும் மாணவர்கள் கவனிக்கிறார்கள். கனிவான பேச்சும், கண்ணியமான நடத்தையும் உடைய ஆசிரியர்களை மாணவர்கள் தங்கள் உள்ளத் தாமரையில் வைத்து என்றும் போற்றுவார்கள். அவரைப் பின்பற்றி வாழவும் நினைக்கிறார்கள். சுய ஒழுக்கம் நிறைந்த மாணவர்களை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. தனிமனித ஒழுக்கத்தை வெறும் வார்த்தைகளால் கற்பித்து விட முடியாது. கடைப்பிடிக்கவும் முடியாது. வாழ்ந்து காட்டுபவர் தான் வழி நடாத்த முடியும். கல்வியோடு சேர்த்து வாழும் கலையையும் கற்றுத்தர வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர் களிடம் உள்ளது.

ஆசிரியர் உற்சாகத்தின் ஊற்றாக அமைந்து விட்டால் மாணவர்களின் வளர்ச்சி எளிதாகி விடுகிறது. ஆசிரியர் நகைச்சுவை உணர்வு மிக்கவராகவும் சுவைபடப் பேசுபவராகவும் அமைந்து விட்டால் மாணவர்களின் உற்சாகம் பன் மடங்காகிவிடும். நல்லாசிரியருக்கு ஞாபக சக்தி, மனவலிமை, கருணை என்பன இருக்க வேண்டும் மாணவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தாமலும், அதே சமயம் அவர்களின் காயங்களைக் கண்டுபிடித்து மருந்து போடும் மருத்துவர் களாகவும் ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். ஒவ் வொரு மாணவனின் இதயத்திலும் கல்வி யோடு சேர்ந்து அவரும் நிறைந்திருப்பது தான் ஆசிரியர்கள் பெறும் மிகச் சிறந்த விருது ஆகும்.

**நிறைவுரை**

இருபத்தைந்து வருடங்களாக ஒரு முன்பள்ளியைத் தொடர்ந்து நடாத்துவது என்பது மிகவும் சிரமமான காரியம் ஆகும். நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியை செல்வி சியாமளா தலைமை தாங்கி கால் நூற்றாண்டு காலமாக மிகச் சிறப்பாக நடாத்தி வருகின்றார். கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுவிழா, முதியோர் கௌர விப்பு, சிறுவர் தினம் எனப் பல வகையான நிகழ்வுகளும் முத்தமிழ் முன் பள்ளியில் வருடம் தோறும் நடாத்தப் படுகின்றன. சிறிய பிள்ளைகள் அறநெறி வழுவாது வாழ்வதற்கான ஆன்மீக விழிப்புணர்வும் மாணவர்களிடம் ஏற்படுத்தப்படுகின்றது. பாலர் கல்விக்கு ஓர் கலங்கரை விளக்காக விளங்கும் முன்பள்ளி தொடர்ந்தும் சிறப்புற இயங்க இறையருள்துணை கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

# முன்பள்ளிச் செயற்பாட்டில் பெற்றோரின் பங்கு



*செல்வி ஜெயா தம்பையா*
*பணிப்பாளர்*
*ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு*
*கல்வி அமைச்சு, வடமாகாணம்.*

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை சாசனத்தின் பிரகாரம் ஆரம்பப் பிள்ளைப்பருவ நலனும் கல்வியும் என்ற கட்டமைப்பு 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது பிள்ளைகள் ஆரம்ப பாடசாலையில் சேர்ந்து கொள்ளும் வகையில் அவர்களது உடல், அறிகைத்திறன், மொழித்திறன், சமூகமன வெழுச்சிதிறன் என்பவற்றை விருத்தி யாக்கி மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பாலர் பாடசாலைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

பாலர் பாடசாலைக் கல்வி வழங்கலானது சுகாதாரம், போசாக்கு, சமூகப்பாதுகாப்பு ஆகியவை தொடர் பான எண்ணக்கருக்களை ஒன்றிணைத்து அவற்றை ஆரம்ப பிள்ளைப்பருவ வயதிலுள்ள பிள்ளைகளிடையே வளர்த் தெடுப்பதை அடிப்படையாகக் கொண்ட தாகும். ஆரம்பப் பிள்ளைப் பருவமானது உடல், அறிவாற்றல், மொழி, சமூக மற்றும் மனவெழுச்சி ஆகியவற்றில் துரித மாற்றத்தை உருவாக்குகின்ற ஒரு பிரதான காலகட்டமாக இருக்கின்றது. குறிப்படத்தக்க மூளை விருத்தி 7 வயதிற்குள் இடம் பெறுவதாக கருதப் படுகின்றது. ஆரம்பப் பிள்ளைப்பருவ வளர்ச்சி மிகவும் வலுவானதாகும். ஆரோக்கியமான அனுபவங்களைப் பெறுவதற்கு பிள்ளைகளுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கவேண்டும். அதன் மூலமே விருத்தியையும் கற்றலையும் மேம்படுத்த முடியும். ஆரம்பப் பிள்ளைப்பருவ பிள்ளைகள் இலகுவில் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களாகவும் குறைபோசாக்கு, புறக்கணிப்பு, வறுமை போன்றவற்றுக்கு ஆட்படக்கூடிய நிலையிலிருப்பதாலும் பிள்ளைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியில் குடும்பம் மற்றும் சமூகம் ஆகியவற்றின் அதிகரித்த கரிசனை வேண்டப்படுகிறது.

பாலர் பாடசாலைகளில் பிள்ளைகளின் பங்குபற்றலானது அவர்களது

1. ஆரம்பக்கல்வியிலும்
2. தொடர்கல்வியிலும்

பங்குபற்றல், கற்றல் அடைவு களில் சாதகமான தாக்கத்தை செலுத்தி வருவதாக அறியப்பட்டுள்ளது.

இன்று உலகளாவிய ரீதியில் ஆரம்பப் பிள்ளைப்பருவத்தின் முக்கியத் துவம் பற்றியும் அப்பருவத்திலுள்ள பிள்ளைகளின் முழு வளர்ச்சியில் பாலர்

பாடசாலைகளின் வகிபாகம் பற்றியும் அதிகரித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக "மிலேனிய அபிவிருத்தி இலக்குகள்" ஆறு கல்வி இலக்குகளைக் கூறலாம்.

முதலாவது "ஆரம்பப் பிள்ளைப் பருவ நலநோம்புகை மற்றும் கல்வி ஆகியவற்றை விசேடமான மிகவும் பாதிப்புக்குள்ளான மற்றும் பின்தங்கிய பிள்ளைகளிடையே விரிவாக்கி மேம்படுத்தல்" என்பதைக் குறிப்பிட முடியும். ஐந்தாவது "பிள்ளைகளின் சுகாதாரம், போசாக்கு, கல்வி ஆகியவற்றுடன் தொடர்புபடுவதையும் ஆதாரமாகக் குறிப்பிட முடியும்" பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பாலர் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு பங்களிப்புச் செய்வார்களாயின் பாலர் பாடசாலைகளுடன் பிள்ளைகள் இணக்கமாக செயற்பட தமது பிள்ளைகளுக்கு அவர்களால் உதவ முடியும். பிள்ளைகளுக்கு பாதுகாப்பு அரவணைப்பு வழங்குதல். பாலர் பாடசாலையிலும் ஆரம்பப் பாடசாலையிலும் பிள்ளைகள் வெற்றிகரமாக தொழிற்படுவதற்கான ஆற்றலைப் பெற்றுத் தருவதாக அமையும். இதனால் பிள்ளைகளின் சமூகத்தேர்ச்சி, கல்வித் தேர்ச்சிகளை விருத்தி செய்ய முடியும். பெற்றோர்கள் பிள்ளைகளின் நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டுவதால் அங்கு நடைபெறுபவற்றை அவதானித்து பிள்ளைகளுக்கு உதவமுடியும். பிள்ளை கற்றல் சுற்றாடலில் ஆரோக்கியமாகப் பங்குபற்றி அவர்களின் முழு அளவிலான வளர்ச்சிக்கு உதவ சந்தர்ப்பம் கிடைக்கும். பிள்ளைகள் சூழல், பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள், அயலவர்கள், சுகாதார மருந்தகங்கள், வணக்கத் தலங்கள், சமூக அமைப்புக்கள் இங்கேயே வாழ்ந்து வருகிறார்கள். பிள்ளைகள் வாழும் சூழலை விளங்கிக் கொள்ளுதல் பிரதானமானதாகும். இதனால் பிள்ளைகளின் வாழ்வைப் பற்றி அறிந்து பெகாள்ள ஆசிரியருக்கு முடிகின்றது.

பெற்றோர்களும் ஒரு வகையில் ஆசிரியர்களே கல்வி என்ற கட்டிடத்தின் அத்திவாரத்தை உருவாக்குபவர்கள் பெற்றோர்களே. பிள்ளை தாயின் மடியில் தந்தையின் அரவணைப்பில் எப்போது அன்பை அனுபவிக்க தொடங்குகிறதோ அப்போதே சுயாதீன கற்றலையும் தொடங்குகிறது. பெற்றோர்களே ஆரம்ப வழிகாட்டிகள். பிள்ளையின் மனதில் நல்ல விழுமியங்களை, மாதிரிகளை (Models) பதிப்பவர்களும் பெற்றோர்களே.

கல்வியாளர் "கொமனியஸ்" முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே "அன்னையின் மடியில் பெறக் கூடிய கல்வி" பற்றி எழுதியிருந்தார். பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு ஆறு வயது வரை முறையாக கல்வியளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

தாய்மார் குழந்தைகளுக்கு கதைகள், பாடல்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். எனவும் கூறுகின்றார்.

குழந்தையின் மொழி விருத்தியில் பெற்றோர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும். குழந்தையின் சீரற்ற மொழிநடைக்கு பெற்றோரே காரணம் என்ற குற்றச்சாட்டும் இருக்கின்றது.

ஆரம்ப வகுப்புகளில் அனுமதி பெறும் குழந்தையின் மொழியறிவும், திறன்களும் குறைவாக இருப்பதற்குக் காரணம் பெற்றோரின் குறைந்த மொழியறிவும், தொலைக்காட்சி, வீடியோ சாதனங்களின் பாவனையுமாகும். வீடுகளில் நாள் முழுவதும் தொலைக் காட்சியும் வீடியோவும் இயங்குவதால் அதையே குழந்தைகளும் பார்க்கிறார்கள். இதிலிருந்து பெற்றோர்கள் மாறிக் கொள்ள வேண்டும். அப்போது தான் குழந்தையின் மொழிவிருத்தியை மேம் படுத்த முடியும். பிள்ளைகளை தமது வேலைகளில் ஈடுபடுத்தி செயற் படுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

பிள்ளைகளின் குடும்பப் பின்னணி, பெற்றோர் தொழில், சமூ கத்தின் பங்களிப்பு இவற்றை அறிந்து கொள்வதன் மூலம் குடும்பங்கள் ஒவ்வொன்றையும் பாலர் பாடசாலைகள் ஒன்றிணைக்கவும் இவை தமக்குள் ஒன்றுக்கொன்று உதவிக் கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

பாலர் பாடசாலையின் அபிவிருத் தியிலும் பாலர் பாடசாலையில் நடை பெறும் கூட்டங்களிலும் பெற்றோர் பங்கு அவசியமாகும் அத்தோடு தமது பிள்ளை களின் வகுப்பறைச் செயற்பாடுகளை கண்காணித்தலிலும் ஈடுபடுவது அவசியமாகும்.

பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு இருத்தல் அவசியம். வீடும் பாடசாலைகளும் இணைந்து பங்களிப்பு செய்யவேண்டும்.

பாடசாலை முகாமைத்துவக் குழு செயற்பாடு பெற்றோர், குடும்பம், பாடசாலை ஆசிரியர்களுக்கிடையே ஆரோக்கியமான உறவு கட்டியெழுப்பப் படவேண்டும்.

# முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளுக்கான கற்பித்தல் முறையியல்



ஞா.இரட்ணசிங்கம்
கல்வியியலாளர் (SLTES)

கல்வியடைவும் வாழ்வின் சிறந்த தொடக்கமும் பாலர் பள்ளியுடன் இணைந்துள்ளது. என்பது பிள்ளைப் பருவக் கல்வியியலாளரின் கொள்கை யாகும். முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளும் விளையாட்டும் இரண்டறக் கலந்த விடயங்களாகும். அவர்களுக்குரிய விளையாட்டுக்கள் பொருள் பொதிந் தவை. இன்றியமையாதவை. உள்ளத்தின் உணர்ச்சிகரமான இயல்புகளுடன் குழந்தைகளின் எதிர்கால அவா விளையாட்டின் மூலம் வெளிக் காட்டப்படுகின்றது. இதைத்தான் “விளையும் பயிரை (விளையாட்டில்) முளையிலே தெரியும்.” என்பார் முதியோர். எனவே தான் குழந்தைக் கல்வியியலாளர்களான புரொபல், ரூசோ, பெஸ்டலோசின், மார்க்கிரட் மக்மிலன், மொன்ரசூரி அம்மையார் போன்றோர் தமது கல்வியியற் சிந்தனைகளில் ஆரம்ப பிள்ளைகளின் விளையாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள்.

பிள்ளைகள் தமது கற்றற் பாங்குகளை பின்வரும் நான்கு அம்சங்களினூடு வெளிப்படுத்தலுக்கு விருப்புடையவர்களாகக் காணப் படுகின்றனர்.

01. விளையாட்டுடன் கூடிய செயற் பாடுகள்
02. இசை, அசைவு, நடன நாடகப் பாங்கான செயற்பாடுகள்
03. ஆக்கச் செயற்பாடுகள்
04. சுற்றாடலைத் தரிசித்து அதனுடன் ஒன்றியிருந்து செயற்படும் வேலைத் திட்டங்கள்

### விளையாட்டுடன் கூடிய செயற்பாடுகள்

கற்பித்தல் முறைகளுள் எந்த வயதுப் பிரிவிற்கும் இம்முறை வலிமை மிக்கதாகக் காணப்படுகின்றது. பந்துக்கள், பலகைகள், வர்ணக் கலவைகள், உருவங்கள், மணல்மூலை, நீர்மூலை, களிமண் போன்றன இங்கு கற்றல் வளங்களாகக் காணப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி கைத் தசைகளுக்கு வலிமையூட்டுவதுடன் மூளைக்குரிய பிரச்சினை தீர்க்கும் பகுதியின் வளர்ச்சியை மேலோங்கச் செய்கின்ற கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளை ஆசிரியர் கூட்டாகவோ தனியாகவோ திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். இவற்றுடன் பிள்ளைகள்

இயங்குகின்ற நேரங்களில் பிள்ளைகளின் பாதுகாப்பிலும் ஆரோக்கியத்திலும் பூரண கவனிப்பைச் செலுத்திக் கண் காணிப்பில் ஈடுபட வேண்டிய பணியும் ஆசிரியருக்குரியதாகின்றது.

நிறங்களையும் பொம்மைகளை யும் பிள்ளைகள் உயிர்ப்புள்ள நிலைப் பாடுகளாகவே எண்ணுகின்றனர். எனவே இவற்றைப் பயன்படுத்தும் போது வகுப்பறை உயிர்ப்புள்ள கற்றல் அமைவிடமாகின்றது. (Active learning Centre) அடிப்படைக் கணித எண்ணக் கருக்கள் விருத்தியடைய விளையாட்டு முறை மிகப்பொருத்தமாக அமைகின்றது. முன் - பின், பெரிது - சிறிது, மேல்- கீழ், அசையும் - அசையா, வளர்ந்த - கட்டையான, வெண்மை - கருமை போன்ற விடயங்களுக்கு உரிய அடிப் படைக்கு இங்கு கருக்கூட்டப்படுகின்றது.

## இசை, அசைவு, நடன, நாடகப் பாங்கான செயற்பாடுகள்

"உள்ளீர்க்கும் உள்ளம்" *(1984)* என்கின்ற மொன்ரசூரி அம்மையாரின் நூலில் சுற்றுச்சூழலும் பிள்ளைகளின் அசைவுசார் செயற்பாடுகளும் திட்டமிடப் பட்டு ஒருங்கிணைக்கப் படுவதன் மூலம் பொருட்களைப் பயன்படுத்தல், அவற் றினை மீளவைத்தல், பொறுப்பாக நடந்து கொள்ளும் பண்பு என்பன பற்றிய பிள்ளைகளின் உள்ளார்ந்த திறன்களை விருத்தி செய்யும் முறைமைகளையும் மெருகூட்ட முடியும் எனக் குறிப்பிடு கின்றார்.

- பாத்திரமேற்கு நடித்தல் (Role play)
- போலச் செய்தல் (Mimicri)
- தனியாள் திருப்தி (தன் உடல் ஆற்றல் கண்டு திருப்தியடைதல்)
- அசைவு சம்பந்தமான சொற் களஞ்சிய விருத்தி
- கவனக்குவிப்பு
- செயலாற்றும் தன்மை
- பிரச்சினைகளை சுமுகமாக விடு விக்கும் ஆற்றல்.
- பிறருக்காக துலங்குதல்
- நினைவு கூருதல், ஞாபகம், மனனம் செய்தல்
- சந்தங்களுக்கு ஏற்ப துலங்கல்
- விளையாட்டுப் படல்
- எளிய நடனம்
- தொடர்பாடல்
- பாரம்பரிய கலாசார வெளிப் பாடுகள்
- படைப்பாற்றல் விழிப்பு
- மனவெழுச்சி முகாமை

என்னும் பன்முக ஆற்றல் விருத்திகள் இம்முறையூடாக மெரு கூட்டம் பெறுகின்றன.

## ஆக்கச் செயற்பாடுகளும் சுற்றாடல் தரிசனமும்

முன்பள்ளி அமைவிடம் ரம்மியமா கவும் தாவர விலங்குப் பகுதிகளைக் கொண்டதாகவும் காற்றோட்டம் மிக்கதா கவும் காணப்படல் வேண்டும். இதன் மூலம் தாவரங்கள், விலங்குகள் பற்றி அடிப்படைப் புரிந்துணர்வு ஏற்படுகின்றது. தன்னுடைய ஐந்து புலனுறுப்புகளையும் பூரணமாகப் பயன்படுத்தி சுற்றாடலை

அவதானிக்கும் தூயசிந்தனைக்கு முற்பட்ட பருவத்தினரின் இயல்புகள் பூரணமாக வெளிக்காட்டப்படச் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

➢ உற்று நோக்கும் திறன் (Observation power)

➢ கண்டறியும் தேர்ச்சி (Discover)

➢ வகைப்படுத்தும் திறன்

➢ பருமன், வடிவம், தொழிற்பாடு, மணம், ஒலி, உணர்ச்சி சுவை, போன்றவற்றை அறிதல். மற்றவருக்கு வெளிப்படுத்தும் ஆற்றல்.

➢ ஒத்த, வேறுபட்ட இயல்பறியும் திறன்

➢ உறவுமுறைகள், சகல பொருட்களினதும் பயன்படுதன்மை, நிறைவு, வெறுமை போன்ற எண்ணக் கருவிகளின் விருத்தி

➢ தொடர்புகள், ஒட்டல், வேறாக்கல், தொகுத்தல், பகுத்தல், மென்மை, வண்மை போன்ற கணித, மொழிசார், எண்ணக்கரு விருத்தி

➢ வரிசை, இடைவெளி, காலம், காரண . காரியத் தொடர்பு பற்றிய விழிப்புணர்வு

என்பன இம்முறைமையில் மேலோங்கச் செய்யப்பட வாய்புள்ளது.

எனவே ஒரு மனிதனின் வாழ்க்கைப் படிமுறையில் அத்தியாவசியமானதும் கவனிக்கப்பட வேண்டியதுமான, அத்திவாரப்படியாகக் காணப்படுகின்ற முன் பள்ளிப் பருவ கற்றல் கற்பித்தல் முறைகள் நன்கு திட்டமிடப்பட்டு பிள்ளையின் மூளை விருத்தி கருதி செயற்படுத்தப்படல் வேண்டும். இந்த வகையில் ஒழுங்கு முறையில் செல்லாமல் எழுத்துக்கள், எண்கள் பற்றிய ஆரம்ப வகுப்புக்களுக்குரிய விடயங்களுக்கு தேவையான குறுக்கான பாய்ச்சல்களை தற்காலப் பெற்றோர், தம்பிள்ளைகள் காட்ட வேண்டுமென முன்பள்ளிகளில் எதிர்பார்க்கின்றார்கள். இவை ஆரம்பப்பள்ளிகளின் அனுமதிக்கு சில வேளைகளில் உதவி நின்றாலும் பிள்ளைகளின் சமநிலை வளர்ச்சிக்கு பிற்காலங்களில் பங்கமாக அமைந்து விடுகின்றன.

உசாத்துணை நூல்கள்

*01. தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும்*
*மா.செல்வராஜா (2005)*

*02. உள்ளீர்க்கும் உள்ளம் (1984)*
*மரியா மொன்ரிசூரி*

# கணிதம் சார் அனுபவங்கள்



திருமதி. அ. வேதநாயகம்
ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

எனும் குறளினினூடாக மனித வாழ்விற்கு எண் எவ்வளவு முக்கியமானது என்பதை வள்ளுவர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். மனிதன் மனிதனாக பிறரால் ஏமாற்றப்படாது சமூகத்தில் வாழ வேண்டுமாயின் கணித அறிவு முக்கிய மானதாகும். கண்ணிற்கு நிகரான கணிதத்தை கசப்பானது என்றுகூறி ஒதுக்குபவர்களும் இருக்கிறார்கள். அமுதத்திற்கு நிகரானது என்று சுவைத்து மகிழ்வோரும் இருக்கிறார்கள். கணிதம் உண்மையில் இலகுவானது. அது மிகவும் சுவையானது. "பருவத்தே பயிர்செய்" என்பது முதுமொழியாகும். உரிய பருவத்தில் அப்பருவத்திற்கான வழிமுறையில் பெறவேண்டிய கணிதம் சார் அனுபவங்களை பிள்ளைகள் தெளிவாக பெறுவார்களாயின் கணிதம் மிகவும் இலகுவானதாக விரும்பிக் கற்கும் பாடமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## முதற் பாடசாலையில் கணிதம்

ஒரு மனிதனின் முதற் பாடசாலை வீடு ஆகும். பிறந்ததிலிருந்து மூன்று வயதுவரை ஒரு குழந்தை தனது வீட்டிலே பல்வேறு அனுபவங்களைப் பெறுகின்றது. மனித வாழ்வின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்திலும் கணித அறிவு எந்நேரமும் பயன்படுத்தப் படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே பிள்ளை தான் வாழும் சூழலில் கிடைக்கும் அனுபவங்களிற்கேற்ப பல கணித எண்ணக்கருக்களையும் உள் வாங்கிக் கொள்கின்றது. ஆனால் எல்லாக் குழந்தைகளும் சமமான மட்டத்தில் கணிதம் சார்ந்த அனுபவங் களைப் பெற்றிருப்பார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொரு பிள்ளையும் தான் வாழும் சூழல் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் என்பவற்றின் அளவிற்கேற்ப அவர்கள் பெறும் கணிதம் சார் அனுபவங்கள் வேறுபட்டிருப்பதைக் காணலாம்.

அதனால் தான் குழந்தை வாழும் வீடுகளில் அவர்கள் கற்றலுக்கான அனுபவங்களைப் பெறும் வகையில் வீடு அமைந்திருக்க வேண்டும். பிள்ளை சுதந்திரமாக ஆடவும், பாடவும், ஓடவும், நடக்கவும் உண்மைப் பொருட்கள்

உருவங்கள் பொம்மைகளுடன் விளையாடவும் மண்விளையாட்டு, நீர் விளையாட்டு என்பவற்றில் சுதந்திரமாக மகிழ்வுடன் ஈடுபடவும் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறு தொடர்பாடலுடாகவும் நாளாந்த செயற்பாடுகளினூடாகவும் கணித எண்ணக்கருக்கள் சார்ந்த காட்சிகள் பிள்ளையின் மனதிலே படமாகப் பதிந்துவிடுகிறது. காலஞ் செல்லச் செல்ல அப்பிள்ளையின் மனதிலே ஒரு கருத்து உருவாகி பின் அடிப்படை எண்ணக்கருவை ஏற்படுத்துகின்றது. எனவே தான் இப்பருவத்தின் குழந்தைகளுடன் பெற்றோர்கள் இணைந்து கனிவோடும் பாசத்தோடும் நாளாந்த செயற்பாடுகளில் விளையாட்டுக்களில் ஈடுபட்டு கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்க தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

**முன்பள்ளியில் கணிதம்**

வெவ்வேறு வீட்டுச் சூழல்களிலிருந்து முன்பள்ளிக்கு பிள்ளைகள் வருகிறார்கள். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்று நம்முன்னோர்கள் மிகவும் அழகாக கூறியுள்ளார்கள். மூன்றிலிருந்து ஐந்து வயதுவரை குழந்தை முன்பள்ளிகளில் பயில்கிறது. மூன்றிலிருந்து நான்கு வயது வரையான பிள்ளைகள் ஆடல், பாடல் அபிநயத்தினூடாகவும் உண்மைப் பொருட்களுடன் விளையாடுவதன் மூலமாகவும் கற்றலுக்கான அனுபவங்கள் வழங்கப்படுகின்றன. நான்கிலிருந்து ஐந்து வயது வரையான பிள்ளைகள் விளையாட்டுக்கள், செயற்பாடுகள் ஊடாகவும் அழகியல் ஊடாகவும் கற்றல் அனுபவங்களைப் பெற வழிப்படுத்தப் படுகின்றனர். பிள்ளைகளின் தரத்திற்கேற்ப கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கான ஆற்றலை முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றிருப்பதோடு தேடல் உடையவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

முன்பள்ளியில் பிள்ளைகள் இனங்காணல், தெரிதல், வகைப்படுத்தல், வரிசைப்படுத்தல், ஒன்று ஒன்றுக்கான தொடர்பு, வடிவம், சமச்சீர், அயல் மாறின்மை, அளத்தல், பரப்பளவு, கனவளவு, காலம் முழுவதும் அரைவாசியும், கோலங்கள், பணம், எண்கள் தொடர்பான எண்ணக் கருக்களைப் பொருத்தமான வகையில் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பங்கள் வழங்கப் படுகின்றன. பரந்த அனுபவங்களைக் கொண்ட பொருத்தமான செயற்பாடுகள் நிறைந்து சிறார்களுக்கு வலுவூட்டும் இடமாக சிறந்த முன்பள்ளிகள் விளங்குகின்றன. திட்டமிட்டு தேவைக்கேற்ப ஒழுங்குபடுத்தப்படும் கற்றல் நிலையங்களும் அத்தகைய முன்பள்ளிகளின் பெருவளமாகும். இத்தகைய அரிய வாய்ப்பு எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைப்பதில்லை.

நாளாந்த செயற்பாடுகளினூடாக தமது பிள்ளைகளிற்கு கற்றலுக்கான

சந்தர்ப்பங்களை வழங்குவதற்கும் பெற்றோரும் தம்மைத் தயார்படுத்திக் கொள்வது காலத்தின் தேவையாகும். எனவே ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோரும் பொருத்தமான நாளாந்த செயற்பாடுகளில் பிள்ளையை ஈடுபடுத்துவதன் மூலமாகவும் (விளக்கம் : வீடு ஒரு பாடசாலையாக..." புத்தகம்) தொடர் பாடல்கள் மூலமாகவும், சிறு சுற்றுலாக்கள் மூலமாகவும், தெளிவான விளையாட்டுக்கள் செயற்பாடுகள் ஊடாகவும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை பிள்ளைகளிற்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

குழந்தை ஐந்து வயதுக் குள்ளேயே பூரண மனிதனுக்குரிய தன்மைகளைப் பெற்றுவிடுவதாகவும் ஐந்து வயதை அடையும் போது நன்மையாகவோ தீமையாகவோ வளர்ச்சி பெற்றுவிடுவதாகவும் ஐந்து வயதிற்குள் இழைக்கப்படும் தீமைகள் மீள ஒரு போதும் திருத்தப்பட முடியாது என சிந்தனையாளர் சிக்மன் புறொயிட் குறிப்பிட்டுள்ளார். எனவே ஐந்து வயதிற்கு முன் சரியான முறையில் கணித எண்ணக்கருக்களைப் பெறும் வகையில் குழந்தைகளிற்கு சந்தர்ப் பங்கள் வழங்க வேண்டியது கட்டாய மாகின்றது. முறையான பாடசாலைக் கல்வியின் தொடக்கம் ஆரம்பக் கல்வியாகும். முன்பள்ளிகளிலும் வீடுகளிலும் குழந்தைகள் அனுபவ வாயிலாகப் பெற்ற கணித எண்ணக் கருக்கள் ஆரம்ப வகுப்புக் களில் கணிதம் கற்கும் போது கணிதம் இலகுவானது அது இனிமையானது என அவர்களை உணரவைக்கும். எனவே முன்பள்ளி ஆசிரியர்களே! பெற்றோர் களே மேலெழுந்தவாரியாக எதனையும் சிந்திக்காது ஆழமாகச் சிந்தித்து திட்டமிட்டு சிறப்பாக செயற்பட்டு கணிதம் சார் அனுபவங்களைக் குழந்தைகள் தமது தரத்திற்கேற்ப மகிழ்வோடு பெற வாய்ப்பளித்து மகிழுங்கள்.

"முயற்சி உயர்ச்சி தரும்."

# முன் பிள்ளைப் பருவத்தில் தேவையான விளையாட்டுச் செயற்பாடுகள்



*திரு.த.சிவகுமார்*
*சிரேஷ்ட ஆசிரியர் - உடற்கல்வி*
*யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்*
*கைதடி*

பிறப்புக்கு முன்னான பருவம் சிசுப்பருவம், குழந்தைப்பருவம். இதனைத் தொடர்ந்து 1 தொடக்கம் 5 வயது வரை முன் பிள்ளைப்பருவம் காணப்படுகின்றது. இக்காலத்தின் ஆரம்ப நிலையில் பிள்ளை நடப்பதற்கு கற்றுக் கொள்வதுடன் சூழலையும் தனது புலன் களால் ஆராய்ந்து புதிய அனுபவங்களை பெற்றுக் கொள் கின்றான். தொடர்ச் சியான தாயின் அன்பு, அரவணைப்பு, அத்துடன் பாதுகாப்பு இவை அவனுக்குக் கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும். உடலியல் தேவையாக சிறந்த போசாக்கு தேவை. 3 பிரதான உணவு வேளைகளுடன் இரண்டு சிற்றுண்டி, பானம், அருந்தும் உணவு வேளைகளும் இருத்தல் வேண்டும். வளர்ச்சி நடை பெறுவதை உயரம், நிறை ஆகியவற்றை மூன்று மாதங்கட்கு ஒரு முறை அளவிடு வதன் மூலம் அறிந்து கொள்ளலாம். தேவையான தடுப்பூசி களை உரிய காலத்தில் பிள்ளை பெற்றோரின் உதவியுடன் எடுத்துக் கொள்கிறாரா என அறிந்து கொள்ளல் வேண்டும்.

இப் பருவப் பிள்ளைகள் 3 வயதில் இருந்து முன்பள்ளியில் கற்க வருவதால் முன்பள்ளி ஆசிரியர்கட்கு இவர்கள் தொடர்பான சகல விடயங்களும் தெரிந்து இருக்க வேண்டும். கதை, கேட்டல், கதை, சொல்லல், அவதானித்தல், கிரகித்தல், வாசிப்பு, மொழிவிருத்தி, பேச்சு, பாடல், ஆடல், இசை, பின்பற்றல், ஆசிரியரை மதித்தல் பெரியவரை வணங்குதல், இறைபக்தி போன்ற விடயங்கள் ஆசிரியரால் மாணவருக்கு படிப்படியாக வழங்கப்படல் வேண்டும். அத்துடன் அடிப்படை சுகாதாரப் பழக்க வழக்கங்களை பின்பற்றப் பழக்குதல், தீடீர் விபத்து ஏற்படுமிடத்து அது தொடர்பாக பாதுகாப்பு பெறுதல், சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுத்தல், ஏனைய பிள்ளைகளுடன் ஒத்துழைத்தல், மன எழுச்சியினை கட்டுப்படுத்தப்பழகுதல், ஆற்றல்களை வெளிப்படுத்த உதவுதல், ஊக்குவிப்புக் கொடுத்தல், கருத்து சுதந்திரத்தை அளித்தல், விளையாட்டுச் செயற்பாடுகளினூடாக கற்றல் தொழிற் பாடுகளை மேற்கொள்ளல், ஓய்வு பெற்றுக் கொள்ளல், குழுவாக இணைதல் போன்ற திட்டமிட்ட செயற்பாடுகள் ஊடாக ஆசிரியர்கள் முன்பள்ளி மாணவரை செயற்திறன் மிக்க பிள்ளையாக மாற்ற உதவுதல் வேண்டும்.

## விளையாட்டுச் செயற்பாடுகளின் அவசியம்

பிள்ளைகளின் உடல் அசைவு மூலம் விளையாட்டுச் செயற்பாடுகள் ஆரம்பிக் கின்றன. இதனால் தசை, எலும்பு, நரம்பு தொகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு படிப்படியாக ஒத்து இயங்கும் தன்மை ஏற்படுத்தப்படுகின்றது. இதனால் உடலில் புலனுறுப்புக்களின் செயற்திறன், அதிகரித்த சுவாசம், குருதிச் சுற்றோட்டத்தின் வேகம் என்பவற்றால் சுறு ணசுறுப்பும் புத்துணர்ச்சியும் ஏற்படுகின்றது. உறுப்புகட்கு தேவையான அளவு செயற்பாட்டுக்கான சக்தி கிடைக்கின்றது. தசை நார்கள் உடலில் வலுவடைகின்றன. கழிவுப்பொருட்களின் அகற்றலில் துரிதம் ஏற்படுகின்றது. எனவே பிள்ளை வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படுகின்றது. உடலில் நிறைய மாற்றங்கள் நடைபெறுகிறது. உடலோடு சேர்ந்து உளச் செயற்பாடு களும் நல்ல விதமாக அமைகின்றன. மகிழ்ச்சியுடன் வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளல், தலைமைத்துவம் பெறுதல், சக மாணவரை மதித்தல், பள்ளி சட்டதிட்டங்களை மதித்தல், ஆசிரியர் சொற்படி நடத்தல், திறமையானவரை மதித்து நடத்தல், விட்டுக்கொடுப்பு, ஏற்றுக்கொள்ளல், நேர்மனப்பாங்கைப் பெற்றுக் கொள்ளல் போன்ற விளையாட்டுத் தொடர்பான நற்பண்புகள் படிப்படியாக ஏற்படுத்தப் படுகின்றன.

விளையாடும் போது உடலில் உள்ள சோம்பல் மறைந்து சுறுசுறுப்பு உண்டாகி முகம் பிரகாசமடைகிறது. புதிய உணர்வு ஏற்படுகின்றது. கழிவான வியர்வை வெளியேறுகிறது. உடல் தசைகளில் சக்தி தேக்கி வைக்கப்படுகின்றது. கடினமான வேலைகளை இலகுவான வினைத் திறனுடன் செய்து முடிக்கும் தன்மை ஏற்படுத்தப்படுகின்றது. விளையாட்டு சட்டதிட்டங்களை ஏற்று நடப்பதால் குடும்பத்தில் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளை சுமுகமாக முகம் கொடுத்து சமாளிக்கப் பழகுகின்றனர். அப்பிள்ளைகளில் தொடர்ந்து ஏற்படும் மாற்றங்களை ஆசிரியர்களும் பெற் றோரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இது தொடர்பாக பெற் றோரினை இணைத்து கலந்துரை யாடல்களை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளின் நல்ல நடத்தை மாற்றங்களை ஊக்கப்படுத்தல் பிள்ளை யின் விருத்திக்கு வழி சமைக்கும்.

இந்தப் பருவ முடிவில் (5 வயதில்) இவர்களுக்கு கவனிக்க வேண்டிய வேறு விடயங்களும் உள்ளன.

01. ஆண், பெண், பிள்ளைகட்கு சரியான சமவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

02. அடிப்படை உடற்றிறன் வளர்ச்சி ஏற்படுத்தப்படல், ஓடுதல், பாய்தல், எறிதல், சுழலுதல், வழுக்குதல் போன்றன

03. விளையாட்டுச் செயற்பாடுகளில் பங்கேற்கும் பிள்ளைகட்கு உரிய

பாதுகாப்பு, பயத்தை தவிர்க்க நடவடிக்கை எடுத்தல்

04. பிள்ளைகளின் நம்பிக்கையைப் பெறக்கூடியவாறு சமநீதியானவராக நடந்து கொள்ளல்.

05. நேரம் தவறாமை, திட்டமிடல், பொறுமை, சமநிலை, விடாமுயற்சி, ஆளுமை, குழுவாக இயங்கும் திறன், சரியான முடிவுகள் எடுத்தல், பிள்ளைக்கோ பெற்றோருக்கோ உதவக் கூடிய வகையில் ஆசிரியர் தன்னை வளர்த்துக்கொள்ளல்.

06. சமூக உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வழிகளைக் கண்டறி பவராகவும் பிள்ளைகளின் தேவைகளை பெற்றுக் கொடுக்கும் ஆற்றல் உள்ளவராகஇருத்தல்.

07. மாணவர்கட்கு போட்டி வாய்ப்புக் களை ஏற்படுத்திக் கொடுத்தல், தாமே சுயமாக இயங்கும் ஆற்றலை மேம்பட உதவுதல்.

முன்பள்ளிப் பிள்ளைகட்குப் பொருத்தமான சில செயற்பாடுகள் தரப்பட்டுள்ளன. இவை மட்டுமல்ல இன்னும் அதிகமான செயற்பாடுகள் உள்ளன. ஆசிரியர் பொருத்தமான செயற்பாடுகளை தாமே ஆக்கிக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

01. தனியாள் செயற்பாடுகள் (உபகரணம் இல்லாது)

- மிருகங்களைப் போன்று நடத்தல், ஓடுதல் அசைவுகள் தாரா நடை, யானை நடை, கரடி நடை, காகம், பறத்தல், முயற்பாய்ச்சல், தவளைப் பாய்ச்சல், தீக்கோழி ஓட்டம் போன்றன.
- இவற்றை விட சமநிலையில் நிற்றல், ஒரு காலில் சுற்றுதல், துள்ளித் திரும்புதல், கெந்துதல், பல்வேறு வகையான நடத்தல்கள் (மெதுவாக, விரைவாக முன், பின்னாக, பக்கவாட்டில், குதியை உயர்த்தி கைவீசி) துள்ளுதல், மேசையாக / நாற்காலியாக மாறுதல் ....
- பல்வேறு வகையான ஓட்டங்கள் - மெதுவாக, விரைவாக, முன், பின்னாக, குதிரையோட்டம், கால் பின்பட ஓடுதல், முழங்கால், உயர்த்தி ஓடுதல்
- பல்வேறு வகையான பாய்தல் - ஒருகால் மிதித்து, இருகால் மிதித்து உயரம் பாய்தல் பக்கவாட்டில் பாய்தல், குறிப்பிட்ட இடங்களுக்குப் பாய்தல்.

02. தனியாள் செயற்பாடுகள் (உப கரணங்களுடன்)

உபகரணங்கள் - பெரிய பந்து, சிறிய பந்து, ரெனிஸ்பந்து, றபர் பந்து, வளையம், நீளத்தடி நிறமான கூம்புகள் பூங்கொத்துக்கள், நிறக்கொடிகள், பைப்பு பலூன், விளையாட்டு உபகரணங்கள் ......

பந்தை மேலே போட்டுப்பிடித்தல், விரலால் உயர்த்துதல், பந்தை உள்ளங்கையில் கொண்டு நடத்தல், நிலத்தில் போட்டுச் சொட்டுதல், குனிந்து பந்தை ஒரு கையால் உருட்டுதல், சுவரில் பந்தை தெறிதல், காலால் தட்டிக் கொண்டு செல்லல், நின்று பந்தை இலக்கு எறிதல், ஓடிவந்து எறிதல், பின் புறமாக நின்று தலைக்கு மேலாக பந்து

எறிதல், பெரிய பந்தை சிறிய பந்தால் எறிந்து அசைத்தல், வளையத்தை உடலினூடாக போடல், வளையம் புகுதல், பலூன் பறக்கவிடுதல், பலூன் அடித்து உயர்த்துதல்.

03. இருவராக - உபகரணம், உபகரணமின்றி செய்யும் செயற்பாடுகள்

ஒருவரை ஒருவர் உள்ளங் கையால் தள்ளுதல், ஒருவரை ஒருவர் இழுத்தல், முழங்கால் தொடுத்தல், நிழல் மிதித்தல், ஒற்றை சில்லுவண்டி, குதிரைப் பாய்ச்சல், (மேலாக) எதிர்ப்புறமாக ஓடுதல், ஓட இழுத்தல், மரம் அரிதல், பந்து பரிமாறல், பந்து கடத்தல், பந்து எறிதல், பந்து பக்கமாக கொடுத்தல், பலூன் கீழே விழா நடத்தல், எதிரும் புதிருமாகச் சுற்றுதல்.

04. குழுவாக உபகரணம் - உபகரமின்றி செய்யும் செயற்பாடுகள்

வட்டமாகி மாறி மாறிப் பாய்தல், வட்டத்துள் சிறு விளையாட்டுக்கள் பந்துகளுடனான விளையாட்டுக்கள், கோண் (கூம்பு) களை வட்டமாக்கி, சதுரமாக்கி முக்கோணமாக்கி நடத்தல், ஓடுதல், விநோத விளையாட்டுக்கள்.

இவ் விளையாட்டுக்களை பயிற்றுவிக்கும் போது பிள்ளைகட்குச் சரியான விளக்கத்தையும் விடய தெளிவையும் அறிவுறுத்தல்களாக ஆசிரியர்களால் மாணவர்கட்கு வழங்கப்படல் வேண்டும். பிழைகளை திருத்தி மீண்டும் செய்வித்தல் வேண்டும். இயற்கை சூழலையும் கவனித்துக் கொள்ள வேண்டும். சூரிய ஒளி நேரடியாக கண்ணுக்குள்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். கடும் காற்று, மெல்லிய மழைத்தூறல், பனியுடன் கூடிய புற்றரை (சறுக்கக் கூடியது) கடும் உஷ்ணம், குளிரான, சரிவான இடங்கள் ஆகியவற்றை ஆசிரியர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

1991 இல் வெளியேறிய மாணவர்கள்



1992 இல் வெளியேறிய மாணவர்கள்



2000 இல் வெளியேறிய மாணவர்கள்



**2001 இல் வெளியேறிய மாணவர்கள்**



**2002 இல் வெளியேறிய மாணவர்கள்**



**2003 இல் வெளியேறிய மாணவர்கள்**



## 2004 இல் வெளியேறிய மாணவர்கள்



## 2005 இல் வெளியேறிய மாணவர்கள்



## 2006 இல் வெளியேறிய மாணவர்கள்



**2007 இல் வெளியேறிய மாணவர்கள்**



**2008 இல் வெளியேறிய மாணவர்கள்**



**2009 இல் வெளியேறிய மாணவர்கள்**



## 2010 இல் வெளியேறிய மாணவர்கள்



## 2011 இல் வெளியேறிய மாணவர்கள்



## 2012 இல் வெளியேறிய மாணவர்கள்



**2013 இல் வெளியேறிய மாணவர்கள்**




**2014 இல் வெளியேறிய மாணவர்கள்**



**2015 இல் வெளியேறிய மாணவர்கள்**



# முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டில் அழகியல் திறன்களின் முக்கியத்துவம்



திருமதி.விக்கினேஸ்வரி நரேந்திரா
இசைத்துறை விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரி
B.F.Music.(Hons), D.Edu, M.E.D M,A Culture, S.L.T.E.SIII

சுதந்திரமான வெளிப்படுத்துதல் உருவாவது சுதந்திரமான பிள்ளைகளிடம் இருந்தாகும். பிள்ளையினுள் சுதந்திரம் ஏற்படுவது பிள்ளைகளுக்குத் தனது சுற்றாடலை நன்கு கிரகித்துக் கொள்வதற்கும் அதனை மீளமைப் பதற்குப் பூரண சுதந்திரம் வழங்கப் பட்டால் மட்டுமேயாகும். பிள்ளையின் சுயாதீனத்திற்குள்ள தடைகளை நீக்கும் போது நிச்சயமாகப் பிள்ளை சுதந்திரமான வெளிப்படுத்தலில் ஈடுபடும்."

"Advanced Montessori Methods" எனும் நூலில் மரியா மொன்டிசோரி அம்மையார் எடுத்துக்காட்டிய கருத்தை நினைவுபடுத்தி முன்பள்ளிக் கல்வியின் அழகியற்திறன்களை நாம் நோக்குகின்ற போது.

ஒரு மாணவனின் திறமைகளை வெளிப்படுத்துபவரில் முக்கிய பங்கு வகிப்பவர் ஆசிரியர். இந்தவகையில் முன்பள்ளி கல்வி மாணவர்களின் அழகியற் திறன்களை வெளிப்படுத்து வதன் மூலம் மாணவனுடைய இயல்பான ஆற்றல்கள் முழுமையாக விருத்தியடை வதற்கு ஏதுவாக உள்ளது.

அழகியற் கல்வியினூடாக மாணவர்களிடம் நான்கு பொது நோக்கங்களை அடைவதற்கு எதிர் பார்க்கப்படுகிறது.

1. இரசனைத் திறனை விருத்தி செய்தல்
2. கற்பனையும் ஆக்கரீதியான சிந்தனையும் விருத்தி செய்தல்
3. வெளிப்படுத்துதல் ஆற்றலை விருத்தி செய்தல்
4. ஆக்க, விமர்சன ஆற்றலை விருத்தி செய்தல்
5. பரஸ்பர ஒத்துழைப்பை விருத்தி செய்தல்

**இரசனைத் திறனை விருத்தி செய்தல்**

இரசனைத் திறனை விருத்தி செய்ய வேண்டுமாயின் முதலில் ஆசிரியர் இரசனைத்திறன் உடையவராய் இருத்தல் வேண்டும். ஆசிரியர் மாணவனிடம் இரசனையாகப் பேசுவது, அடுத்து நேரடி அனுபவம் அதாவது அனுபவத்தின் மூலம் இரசனை அடைகிறான். இது மகிழ்ச்சி கரமானதாகவோ அல்லது துக்கரமான

தாகவே இருக்கலாம். ஆனால் இவ்வனுபவம் அவனிடத்து ஓர் இரசனையை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக ஒரு அழகான ரோசாப் பூவை மரத்திற் பார்த்து ஒருவன் இரசிப்பான். அதே நேரம் அந்தப் பூவை ஒருவர் பறித்துத் தலையிற் சூடுகின்ற போது கோபம் ஏற்படலாம்.

இதன் மூலம் அவனிடம் ஓர் இரசனைத் தன்மை ஏற்படுவதை நாம் காணலாம். இதே போன்று கலையாக்கங்களை இரசிக்கின்ற தன்மையினை ஏற்படுத்துவதற்கு மாணவர்க்ளிடையே சித்திரம், சிற்பம், பாடல், அபிநயம், நாடகம், வீடியோ, குறுந்திரைப்படம் போன்றவற்றைப் பார்த்து அவற்றை இரசிக்கவும் விமர்சிக்கவும் செவிமடுக்கவும் வாய்ப்பு ஏற்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் இரசனையுடன் பாடலைப்பாடுதல், ஆடுதல், நடித்துக் காட்டுதல் போன்றவற்றினூடாக மாணவரிடம் இரசனைத் திறனை விருத்தி செய்யலாம்.

### கற்பனையும் ஆக்கரீதியான சிந்தனையையும் விருத்தி செய்தல்

ஒருவன் தான் பெற்ற இரசனை அனுபவத்திற் சிந்தனையைச் செலுத்தி, ஆழமாக ஆராய்ந்து விமர்சிக்கலாம். இவ்வழியில் அவன்தான் பெற்ற அனுபவங்களுக்கும் பல அர்த்தங்களைக் காணலாம். உதாரணமாக சூழலின் அடிப்படையில் மனதில் ஒருமைப்பாடு தோன்றி மனதிற் பலவிதமான கற்பனைக் காட்சிகள் தோன்றமுடியும். அவற்றை அனுபவிக்கும் ஆற்றல் பெற்ற ஒருவன் "தான் கண்ட அழகினை அனுபவித்து, அந்த அழகினை மனப்பாடமாக்கிக் கொள்வற்கு அவனுடைய மனத்தை ஒரு நிலைப்படுத்தும் திறன் காரணமாகின்றது" இவை பின்னர் ஆக்கத்தின் கருவாகின்றது.

இந்த ஆக்கத்திறன்கள் அவரவர் இரசனைத் தன்மையைக் காட்டும் அதாவது சாந்தமுடையதாக சலனமற்ற தன்மையுடனும், சிலருடைய ஆக்கங்கள் சலனமுடையனவாகச் சாந்தமற்றுக் காணப்படும். ஆக்கம் எனக்கூறுவது "போலச் செய்தல்" இல்லாமற் புதிய பாங்கில் ஏதேனுமொரு ஊடகத்தின் ஊடாக முன்வைக்கப்படும். சுயாதீனமான வெளிப்படுத்தலையே ஆகும். இசை, அசைவு, நடிப்பு எனும் செயற்பாடுகள் "ஆக்கம்" எனும் சொல்லினால் விசேடப்படுத்தப்பட்டுள்ளது.

அழகியலுணர்வு ஆக்கத் திறன்களையும், மனிதப் பண்பு களையும், ஆளுமைகளையும் வளர்ப் பதாக "ரவீந்திரனாத் தாகூர்" தெரிவிக் கின்றார். அழகியற் கலைகளை இரசித்தல், இன்பத்தையும் ஆக்கத் திறன்களையும் தோற்று விக்கின்றன.

1. கருத்து வெளிப்பாடு
2. கலைப்பொருள் உற்பத்தியிற் புதிய பொருளைக் கண்டுபிடித்தல்
3. புதுக்கண்டுபிடிப்பு

இப்படியான பலவகைச் செயற்பாடுகள் மூலம் ஆக்கத்திறன்களை விருத்தி செய்யலாம்.

## வெளிப்படுத்துதல் ஆற்றலை விருத்தி செய்தல்

மாணவர்களின் திறனை வெளிப்படுத்தலும் விருத்தி செய்தலும் பற்றி நாம் பார்க்கின்றபோது "பென்ஸ்சீரெக் சுய வெளிப்படுத்தலை ஊக்குவித்தல் பிள்ளையின் இயல்பான ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்குக் காரணமாக அமையும்" என்கிறான்.

### அழகியற் கல்வி சார்ந்த வெளிப்பாடுகள்

1. உடல், அங்க அசைவு மூலமாகப் பிள்ளையினுடைய வெளிப்பாடு நர்த்தன அசைவு எனப்படும்.
2. சப்தத்தையும், நாதத்தையும் கொண்டு பிள்ளை செய்யும் சுய வெளிப்பாடு இசை எனப்படும்
3. கீறல், கிறுக்கல், நிறங்களினாற் பிள்ளை செய்யும் சுயவெளிப்பாடு ஓவியம் எனப்படும்.
4. பலவகைப்பட்ட அபிநயப் பண்பு களைக் கொண்டு பிள்ளை செய்யும் சுயவெளிப்பாடு நடிப்பு எனப்படும்.
5. பலவகைப்பட்ட திண்மப் பொருட் களாகிய களிமண், குரும்பட்டி, மண் போன்றவற்றின் மூலம் வெளிப் படுத்தும் ஆக்கம் சிற்பம் எனப்படும்.

சுயவெளிப்பாட்டை வேறு படுத்திக் காட்டுவதற்கு வழமையாக "சிருஸ்டி" என்ற சொல்லைப் பயன் படுத்துகிறோம். பாவனை பண்ணாது புதிய நோக்குடன் ஏதாவது ஒரு ஊடகத்தின் மூலம் பிள்ளை முன் வைக்கும் சுதந்திரமான வெளிப்பாட்டை "சாதாரண ஆக்க மென்று" நாம் கருதுகின்றோம்.

"பிள்ளையின் வெளிப்படுத்தும் ஆற்றல்களின் விருத்திக்கு மிகவும் பிரயோசனப்படுவது, வளர்ந்தோரும், பிள்ளையும், சமமான நிலையில் உள்ள நட்புறவான தனியாளிடைத் தொடர் பொன்று நிலவும் சுற்றாட லொன்றாகும்." என மேபர் கூறுகிறார்.

பிள்ளையின் திறமையைத் தைரியப்படுத்திச் சுதந்திரத்தன்மை, ஒத்தாசை வழங்குகின்றபோது பிள்ளை யின் வெளிப்பாட்டு ஆற்றல் விருத்தி அடைகின்றது.

## ஆக்கவிமர்சன ஆற்றலை விருத்தி செய்தல்

ஆசிரியரிடமும் மாணவர் களிடமும் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் ஏற்படுகின்ற போது நல்ல ஆக்கவிமர்சன ஆற்றலை விருத்தி செய்யலாம். நல்லது கெட்டதை எடுத்துக்கூறல், ஏற்றுக்கொள்ளும் மனப் பாங்கை ஏற்படுத்தல், சமூகத்திற் பரவலாக நிகழும் அழகியல் விழுமியங் களையும் அளவு கோல்களையும் பிள்ளை விளங்கிக் கொள்ளக்கூடியதாக

இருக்குமாறு அறிமுகப்படுத்துதல், பிள்ளையின் புலனுணர்வை மேம் படுத்தும் செயல்வழிகளினால் அழகியற் கல்வி ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனக்கூறுதல் சரியானதாகும்.

மாணவர், ஒரு நிகழ்வின் முடிவில், தன் மனதிற் பட்டதை விமர்சிக்க ஆசிரியர் சந்தர்ப்பம் கொடுக்கும் போது அந்நிகழ்வின் பயன் மேலும் மேன்மை அடைகிறது.

உலகின் புதுமைகளுக்கும், அதிசயங்களுக்கும், பிள்ளையின் மனதைத் திறந்துவிட வேண்டும். அவதானிப்பிற்கும், துருவியாய்தலுக்கும் முன்னர் , மகிழ்ச்சியடைதலுக்கும் புலன்களை ஆயத்தப்படுத்தும் முகமாகக் கற்பனை, சிந்தனைகளுக்குப் பிள்ளையை வழிப்படுத்தல் முக்கியமாகும்.

அவ்வாறே, செயற்பாட்டின் முடிவிற் செய்யும் கலந்துரையாடல் மூலம் விமர்சன ரீதியாகச் சிந்திப்பதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்தலாம். விமர்சன ரீதியான சிந்தனை முறைகள், சிந்தனைப்பருவத்தின் ஒரு பண்பாகும். விமர்சன ரீதியான சிந்தனை விருத்தியடைவதற்குப் பிள்ளை சுயமையத் தன்மையிற் கைவிடுதல் அவசியமான காரணியாகும்.

**பரஸ்பர ஒத்துழைப்பை விருத்தி செய்தல்**

ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே கலந்துரையாடலையும் ஊக்குவிக்க வேண்டும். பிள்ளையின் இரசனைத் திறன்களின் விருத்தி தொடர்பான விடயங்களைக் கண்டு பிடித்தல், ஆக்கமதிப்பீட்டை விடக் கடினமான காரியமாகும். இது பிள்ளையின் நடத்தைக் கோலம், உருவமாகல் போன்றவற்றை அவதானிப்பின் மூலமும், பிள்ளையுடன் கலந்துரையாடுவதன் மூலமும் மறைமுகமாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

வெளிப்படுத்தலின் போது பிள்ளைகள் காட்டும் தனியாள் வேறுபாடுகள் பற்றி மதிப்பீட்டின் போது கவனஞ் செலுத்த வேண்டும். இவற்றின் மூலம் பரஸ்பர ஒத்துழைப்பை விருத்தி செய்யலாம்.

இந்தவகையில் முன்பள்ளிக் கல்வியில் அழகியலூடாகத் திறன்களை விருத்தி செய்தல் ஒரு முக்கிய விடயமாகும்.

அழகியல் வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணி

# பாலகர்களின் உடலியல், உளவியல் வளர்ச்சிகளை மேம்படுத்தும் சூழல் முன்பள்ளிகளில் பிரதானம்



திரு.பா.தனபாலன்
நிபுணத்துவ ஆலோசகர்
விழுமிய கல்வி பிரிவு
கல்வியமைச்சு - பத்திரமுல்ல,

பாலகர்களுக்காக நிலை பெற்றிருக்கும் கல்வியானது அவர்களை மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு வழி வகுப்பதாக இருக்க வேண்டும். முன்பள்ளிக் கல்வி தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள இரண்டரை வயதிலிருந்து ஐந்து வரையான காலம் பாலர்களின் வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பருவமாகும். முறைசார் கல்விக்கான அடித்தளம் இப் பருவத்திலேயே இடம் பெறுகின்றது. அண்மைக் காலத்தில் இப்பருவம் தொடர்பான ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. புதிய கல்வியியற் செயலாற்றுகைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம் அரசு ஆகியோர் புரிந்து இப்பருவ பாலகர்களின் அபிவிருத்தியில் மிகக்கூடுதலான அக்கறை எடுக்க வேண்டியுள்ளது. இத்துறை தொடர்பான விழிப்புணர்ச்சி இன்று எல்லோரிடமும் ஏற்பட்டு வருகின்றது.

இப்பருவ பாலகர்களிடையே உடல் வளர்ச்சி (physical development) இயக்க வளர்ச்சி (Motor development) மன எழுச்சி வளர்ச்சி (Emotional Development) அறிவு வளர்ச்சி (Intelectual Development) சமூகவளர்ச்சி (Social Development) ஆகிய அனைத்தும் வேகமாக வளர்கின்றன. இவ் வளர்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கினைத்து விருத்தியாக்கினால் தான் பூரணமான ஆளமையுடைய பிள்ளைகளையும் எதிர்கால சந்ததிகளையும் உருவாக்க முடியும். இதற்கேற்ற வாய்ப்புக்களையும் சூழ்நிலைகளையும் அளிப்பதில் முன்பள்ளிக் கல்வி பெரும் செல்வாக்கினைச் செலுத்துகின்றது. இவ் வகையில் நவீன முன்பள்ளிக்கல்வியின் குறிக்கோளாக பின்வருவன உள்ளன.

1. பாலகர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருத்தல்.
2. அவர்களிடையே நல்ல பழக்க வழக்கங்களை வளர்த்தல்.
3. பாலகர்களின் முழுமையான வளர்ச்சிக்கான சூழ்நிலைகளையும், ஊக்கங்களையும் உருவாக்குதல்.
4. மகிழ்ச்சிகரமான கற்றலின் ஊடாக மகிழ்வுடன் வாழும் சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

5. அடுத்தகட்ட வளர்ச்சி நிலைகளுக்கு தயாராகுதல், பள்ளிக்கான முன் ஆயத்தம் செய்தல்
6. உடல் - உளரீதியில் சுகதேகிகளாக இருக்க வழியமைத்தல்
7. ஆரோக்கியமான நற்பிரஜைகளை உருவாக்குதல். இங்கு ஆரோக்கியம் என்பது உடல் - உள - சமூக - ஆத்மீக நிலைகளில் அடையக் கூடியஅதியுயர் நிலையாகும்.

இப்பருவத்தினரின் தேவைகளைப் பூர்த்திசெய்தல் மிக முக்கியமாக நோக்கப்படுகின்றது. இதில் உடலியற் தேவைகளான (Physicalneeds) காற்று, சுத்தமான நீர், சத்துணவு, உறைவிடம். உடை, வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை களும் உளவியற் தேவைகளான (Phsychological needs ) காப்புணர்ச்சி, அன்பும், பாசமும் சுதந்திர உணர்வு, கணிப்பு, சுய உணர்வுத் தேவைகள், துணிவாகச் செயலாற்றல் என்பவை உள்ளன. இவற்றில் தற்போதைய பாலகர்களிடையே உளவியல் தேவைகளே மேலோங்கி உள்ளதாக துறைசார் ஆய்வுகள் உறுதிப்படுத்தப் படுகின்றன. இவ்வாறான தேவைகள் மறுக்கப்படும் போது அமைதியின்மை, விரக்தி, மனஅழுத்தம், சந்தேகம், குற்ற உணர்ச்சி ஆகியவை ஏற்பட்டு பாலகர்கள் மனநிலை ரீதியாக பாதிப்படையலாம். இன்றைய பெரும் பாலான பாலகர் களுக்கு இத் தேவைகளை உரிய முறையில் வழங்க முடியாத குடும்ப முன்பள்ளி பாடசாலைச் சூழல் உள்ளது. இதைப் போக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன் முன்பள்ளி ஆசிரியர் வளர்ப்புத் தாயாக இருந்து பாலகர் களுக்கு இத் தேவைகளை வழங்கு வதுடன், பெற்றோர்களுக்கு இது தொடர் பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு முன்பள்ளிப் பாலகர்களின் தனியாள் வேறு பாடுகளையும் இனங்கண்டு செயலாற்ற வேண்டும்.

## பாலகர்களின் அறிவுத்தாகம்

முன்பள்ளிப் பருவ பாலகர்கள் இயல்பாகவே அறிவுத்தாகம் உடையவர் களாகக் காணப்படு கின்றார்கள். ஆனாலும் அதை அறியாத நிலை மேலோங்கி காணப்படுகின்றது. கல்வி நிலைகளில் அடித்தளமாக முதற்படியாக அமைவது முன்பள்ளிக் கல்வியாகும். அடித்தளம் இல்லாத கட்டடம் எவ்விதம் திறனுள்ளதாக அமைய முடியும்? நம் கல்வி முறையில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளுக்குக் காரணம் முறையான முன்பள்ளிக் கல்வி வழங்காத நிலையே ஆகும்.

இப்பருவ பிள்ளைகளின் இயக்க வளர்ச்சியை ஊக்குவிப்பதில் விளை யாட்டுக்களும், உபகரணங்களும் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் இப் பாலகர்களின் மனவெழுச்சி சீரான முறையில் வளர்வதற்கு ஆசிரியருடைய அரவணைக்கும் செயலாற்றுகை வேண்டப்படுகின்றது. மனவெழுச்சி களைக் கட்டுப்படுத்தவும், சீரான

முறையில் வெளிப்படுத்தவும் இப் பருவக் கற்றல் செய்முறைகள் உதவுகின்றன. உலகளாவிய ரீதியில் நவீன முன் பள்ளியில் பொதுவான நேரசூசி பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என இத்துறை சார் ஆய்வாளர்கள் எடுத்தியம்புகின்றனர்.

1. இறை வணக்கம் (Prayer Assembly) பாலகர்களின் விழுமிய நம்பிக் கைகளை ஏற்படுத்துதல்
2. ஆரோக்கியப் பரிசோதனை (Health Checkup) உடல் உறுப்புக்களை உற்று நோக்கி கவனித்தல்.
3. சுதந்திர உரையாடல் (Free conver sation) - பாலகர்களுடன் அளவளாவி ஆலோசனை வழிகாட்டல் வழங் குதல்.
4. வெளிவிளையாட்டுக்கள் (Out door Play) ஓடி, ஆடி தசைநார் பயிற்சிக்கான விளையாட்டுக்கள்
5. கை, கால், சுத்தமும் கழிவிடத்துக்குச் செல்லும் (Toilet and wash) - உரிய சுத்தமான பழக்கவழக்கங்கள் பெறல்.
6. கதை சொல்லுதல் - (Story Telling ) கதை மூலம் கற்றல்.
7. பாடல்கள் (Rhymes) பாடல்கள் பாடி இசையும் அசைவும்.
8. ஆக்கச் செயல்கள் - (Creative Acti - Vities) விரல் பயிற்சி, வெட்டுதல், கிழித்தல், ஒட்டுதல், வர்ணம் பூசுதல்
9. ஆயத்தச் செயல்கள் - (Readiness Activities) மொழி, எண், சுற்றாடல் எண்ணக்கருக்களை கற்பதற்கான ஆயத்தம்.
10. வருகையும் வீட்டுக்குத் திரும்பலும் (Arrival and Departure)

**ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்**

இவ்வாறான விடயங்கள் நெகிழ்ச்சியு டையதாக நாளாந்தம் பல்வேறு செயல்முறைகளுக்கு ஆசிரியரால் உள்ளாக்கப்படுகின்ற போது இப்பருவ பாலகர்களின் அறிவுத்தாகம் விருத்தி யடையும் வாராந்தம், தவணை, வருடம் என்ற வகையில் சூழல் நிலைமைகளை அனுசரித்துப் பாடத்திட்டங்களை முற் கூட்டியே தயாரிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் சுற்றாடல், சுற்றுலா, கல்விச் சுற்றுலா, களவேலைகள் ஆக்க சக்தியைக் கலைகள் மூலமாகப் பெறுதல், பெற்றோர்களுடன் இணைந்து வெளிப் பயணங்களை (Fields trips) ஒழுங்குபடுத்தி அனுபவங்களை வழங் குதல் வாயிலாக முன்பள்ளிப் பாலகர் களின் தேர்ச்சிகளை விருத்தியாக்கலாம்.

குழந்தை இலக்கியங்கள் மூலமா கவும் பல்வேறு கற்றல் சாத னங்கள் மூலமாகவும் விஞ்ஞான அனுபவங்களை (Science Experience) வழங்கி பாலகர் களின் ஆராய்ந்து கண்டுபிடிக்கும் ஊக்கத்தை விருத்தியாக்க வேண்டும். மற்றும் முன்பள்ளி விழாக்களை (Festivals in pre schools) நடாத்துவதன் மூலம் பாலகர்களின் சமூகமயமாக்கல்

செயன்முறையை விருத்தியடையச் செய்யலாம். அதிலும் சமய விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், தேசிய விழாக்கள் என்ற வகையிலும் போட்டிகளாக அல்லாத விளையாட்டு விழாக்களை நவீன உளவியல் அடிப்படைகளில் நடாத்தி பாலகர்களின் ஆளுமையைச் சிறந்த முறையில் விருத்தியாக்கலாம்.

## பெற்றோர் கல்வி

இன்றைய நவீன முன்பள்ளிக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பெற்றோர்களுக்கான கல்வி (Parent Education) மிகுந்த முக்கியத்துவம் கொண்டதாகக் காணப்படுகின்றது. பெற்றோர்களும் முன்பள்ளி ஆசிரியர் களும் இணைந்து செயலாற்றுவதன் மூலம் முன்பள்ளிக்கல்வியின் நோக்கம் நிறைவேறும். பெரும்பாலான படித்த படிக்காத பெற்றோர்களுக்கு முன்பள்ளி தொடர்பான விழிப்புணர்வு போதாமல் உள்ளது. எனவே பெற்றோர்களை முன் பள்ளிப் பாடசாலைகளுடன் இணைந்து பல செயலமர்வுகளையும் விழிப்புணர்வு களையும் செயற்திட்டங்களையும் முறையாக மேற்கொள்ள வேண்டியுருக் கின்றது. அத்தோடு அருகிலுள்ள ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்.

முன்பள்ளிப் பாலகர்கள் இன்றைய கால சமூகப் பண்பாட்டுச் சூழலில் பல பாதிப்புக்களுக்கும், தாக்கங்களுக்கும் உட்பட்டுக் காணப்படுகிறார்கள். இதனால் குழந்தைகளிடையே பல பிரச்சினைகள் எழுகின்றன. பிரிவுத்துயர், பொறாமை, கவலை, பயம், சினம், எதிர்மனப்பான்மை பொருந்தா மனவெழுச்சி உணர்வுகளை வெளியேற்றும் பாலகர்களின் குடும்ப நிலை, பெற்றோர் பிரிவு, பெற்றோர் மது அருந்துதல், புரிந்துணர்வற்ற குடும்ப நிலை என்பவற்றின் தாக்கங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களை மீட்க பெற்றோர்களுக்கான கல்வியும், வழி காட்டல் ஆலோசனைகளும் மிக அவசியமாகவுள்ளது. இதற்குப் பெற் றோர்களுக்கான கூட்டம் குழுவிவாதம், குழுச் சமர்ப்பிப்புகள், மனம் திறந்த கலந்துரையாடல்கள், செயல மர்வுகள், ஒளி, ஒலி, உபகரணங்கள் மூலமான விழிப்புணர்வுகள் தேவையாகவுள்ளது.

# எதிர்கால கலங்கரை விளக்குகளிற்கு இங்கிதமான ஏற்றமுறு அத்திவாரம் இடுவோம்.



திருமதி.குககுமாரி விஜயரகுநாதன்
B.A, Dip in Edu, M.Ed, M.phil in edu
அதிபர் யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா
இலங்கை தி.பல.கழக வருகை விரிவுரையாளர்

மனித சமூகத்தை மாண்புறச் செய்வதற்கு மகத்தான கல்வி ஒழுங்குகளே துணை நிற்கின்றன. கல்வி அறிவற்றவர் விலங்குகளுக்கு ஒப்பானவ னாகவும் மரத்துக்கு ஒப்பானவ னாகவும் நம் முன்னோர் எடுத்தியம்பி கல்வியின் முக்கியத்து வத்தை வலியுறுத்தி யுள்ளனார். இத்தகைய கல்வியை ஒரு மனிதன் பெறுவதற்கு ஆர்வத்தையும் அங்கீகாரத் தையும் வழங்கி ஊக்கு விக்கும் முதற்குரு தாய். எல்லாத் தாய்மாரும் பாசத்தோடும் பரிவோடும் பிள்ளையை வளர்த்தாலும் பிள்ளையின் எதிர்கால வாழ்விற்கு வழிப்படுத்தும் உளவியல் நுட்பங்களை பலரும் அறிந்திருப்பதில்லை. இத்தகைய பெற்றோரின் குழந்தைகள், கற்றறிந்த பெற்றோரின் பிள்ளைகள் அனைவரும் முன் பள்ளியில் இணைகின்றனர். இவர்களே எதிர்கால கலங்கரை விளக்குகள் மானிட சமூகத்தை மாண்புறச் செய்யும் மாமனிதர்கள் இயற்கையின் கொடைகளை தம்மிடம் இசைய வைத்து இனிய உலகை இயக்கி இரட்சிப்பவர்கள் இவர்களை நெறிப படுத்தி மகிமைப்படுத்தும் அறிவியல் தாய்மாரே முன்பள்ளி ஆசிரியர்கள் அத்திவாரம் இங்கிதமாக இறுக்கமாக அமைந்தால் தான் உயர்ந்த கலங்கரை விளக்குகள் உருவாகி நின்று நிலைத்து நிறைஒளி தரும்.

இந்த வகையில் ஒரு முன்பள்ளி ஆசிரியரின் முக்கியத்துவம் முழுமையாக கல்வி உலகால் அங்கீகரிக்கப்படுகிறது. முன்பள்ளி ஆசிரியர் பணியை ஏற்பவர்கள் எதிர்கால சிருஷ்டி கர்த்தாக்கள் இதனால் தான் "எழுத்தறி வித்தவன் இறைவன் எனக் கருதப் படுகிறான். இறைபணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய முக்கியமான தகைமை உளவியல் அறிவு ஆகும்.

உளவியல் அறிவு என்பது "உளம் பற்றிய அறிவியல் என ஆரம்பித்து அது ஒரு உயிரியற் சமூகம் சார் பரிசோதனை ரீதியான விஞ்ஞானம்" என ஆய் வாளர்கள் வரை விலக்கணப் படுத்தி யுள்ளனர். இவ்வாறு உளவியல் ஆய்வுகள் தொடர்ந்து விரிகின்றன. இந்த உளவியல் அறிவு எம் முன்பள்ளி

ஆசிரியர்களிற்கு எவ்வாறு துணை நிற்கின்றன. என நோக்குவோமாயின் ஒரு குழந்தையின் உடல், உள வளர்ச்சி தனித்துவம் உணராமல் ஆசிரியர் வழிப்படுத்த முடியாது குழந்தையின் வளர்ச்சியானது கருவிலேயே ஆரம்பிக் கின்றது. கருவிலே உருவாகும் போது பெற்றோரின் பரம்பரை இயல்புகள் செல்வாக்குச் செலுத்துகின்றன அத்துடன் தாய் வாழும் சூழல் காரணிகளும் கரு வளர்ச்சியின் போது பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. பிள்ளையின் பிறப்புக் காயங்கள் எதிர்கால வாழ்வில் பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லன. இவ்வாறு தனியாள் வேறுபாடுகளுள்ள குழந்தைகளை முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறு வழிப்படுத்தலாம் எனச் சிந்தித்தால் ஆசிரியர் தன்முன் உளவியல் சார் அனுபவங்களுடன் உளவியல் கல்வி அனுபவங்களுடன் உளவியல் கல்வி அறிவுடனும் தான் வெற்றிகரமாக செயற்படலாம்.

பிள்ளை உளவியல் பற்றிய ஆய்வுகள் தொடர்கின்றன. நுட்பமாகவும் விரிவாகவும் ஆய்வாளர்கள் கருத்துரைக் கின்றனர். தத்துவ இயலாளர் களான பிளேட்டோ, அரிஸ்டோட்டில், டூபல், ரூசொ போன்றோர் மனித இயல்பு, உளச் செயற்பாடுகள் பற்றி கருத்துக் களை வெளியிட்டனர். அவர்களைத் தொடர்ந்து கல்வியலாளர்களான புரொபல், கொமி னியஸ், பெஸ்டலோஜி, மொன்டிசூரி ஆகியோரும் பிள்ளைகளின் நடத்தை பற்றி ஆராய்ந்து கருத்துக்களை வழங்கி யுள்ளனர். உளவியல் அறிஞர்களாக அங்கீகரிக்கப்பட்ட புரொயீட் கெஸல், பவ்லொவ், வஸ்டன், ஸ்கின்னர், மில்லர், ஜீன் பியாஜே போன்றோர் பல்வேறு பரிசோதனைகள் மூலம் பிள்ளை வளர்ச்சி, விருத்தி இயல்புகள் நடத்தைகள் பற்றி விரிவான விளக்கங் களைத் தந்துள்ளனர். இவ்வாறு பிள்ளை உளவியல் அறிவை முன்பள்ளி ஆசிரியர் பெற்றுக் கொள்வதால் தன் பணியை இலகுவானதாகவும் இங்கிதமானதாகவும் பயனுறுதியு ள்ளதாகவும் ஆற்ற முடியும் பிள்ளையின் உடலியல் ஆட்சி, அறிதல் ஆட்சி உளம் சமூகம் சார் ஆட்சி ஆகிய மூன்று ஆட்சிப்புலங்களையும் இனங் கண்டு ஆசிரியர் செயற்பட வேண்டும். எனவே பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகள், வளர்ச்சிப் பாங்குகள், உடல்சார் புலனியக்க வளர்ச்சி மட்டம், விவேக இயல்பும் அடைவு மட்டமும் நடத்தைக் கோலங்கள், உடல் உளத் தேவைகள் என்பவற்றை இனங்கண்டே அவர்களை ஆளுமை மிக்கோராக சமூகப் பொருத்தப்பாடு உடையோராக உருவாக்க முடியும். இவ்வாறு ஒவ்வொரு பிள்ளைகளையும் இனங்காண ஆசிரிய ருக்கு உளவியல் அறிவு அவசிய மாகிறது. அவரவர்க்குப் பொருத்தமான முறையில் கற்பித்தல் நுட்பங்களை மேற்கொண்டு பிள்ளைகளைக் கவரக் கூடிய முறையில் முன்பள்ளியை நெறிப்படுத்தலுக்கும் உளவியல் அறிவே உறுதுணையாகிறது.

முன்பள்ளியை ஒழுங்கமைத்

தலுக்கே உளவியல் அறிவு அடிப்படை யாகிறது. கவர்ச்சிகரமாக உடல் சார் சமூகம்சார் சூழலை ஒழுங்குபடுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்ப நெகிழ்வான நேரசூசியைப் பின்பற்ற வேண்டும் பிள்ளைகளைக் கவர்ந்திருக்க வல்ல கதைகள், படங்கள் அட்டவணைகள் சமர்ப்பிக்க வேண்டும். வயதுக்கும் விவேக மட்டத்திற்கும் பொருத்தமான சாதனங்களை வழங்கி பொருத்தமான முறைகளைத் தெரிவு செய்து கற்பிக்க வேண்டும். சீரான கற்றலும் ஒழுங்காற்றலும் பேணப்பட வேண்டும். இத்தகைய ஒழுங்கமைப்பை பாடசாலையில் கற்ற பாட அறிவை மட்டும் கொண்டு ஒருவர் செயற்படுத்த முடியாது. அவரது உளவியல் அறிவே இவ்வொழுங்கமைப்பில் உறு துணையாகும்.

பிள்ளைகளை வழிப்படுத்தலுக்கு மட்டுமன்றி அவர்களிடம் காணப்படக் கூடிய உடல் உள பிரச்சினை களை இனங்காணவும் அவர்களைப் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றோருக்கு வழங்கவும் பெற்றோரோடு நேர்முகமான தொடர்புகளைப் பேணி பிள்ளைகளை மேம்படுத்தவும் ஆசிரியருக்கு உளவியல் அறவு அவசியமாகின்றது. பிள்ளைகளையும் பெற்றோரையும் மட்டுமன்றி பாடசாலை சார் சமூகத்தையும் திருப்திப் படுத்தும் வகையிலும் அவர்கள் பாடசாலையின் பணியை உணர்ந்து உன்னதப்படுத்தவும் முன்பள்ளி ஆசிரியரின் தன் முனைப்பான செயற்பாடுகள் உதவும். எனவே முன்பள்ளி ஆசிரியர் தன் மகத்தான பணியால் மாண்புறு சமூகத்தைக் கட்டியெழுப்ப உளவியலறிவுடன் உள்ளார்ந்த அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

இடம்,பொருள், ஏவல் அறிந்து இங்கிதமாக பேச, பிறர் பேசுவதைப் புரிந்து கொள்ள தன் நடத்தைக் கோலங்களை ஒழுங்கமைக்க பிறர் நடத்தைக் கோலங்களைப் புரிந்து நடக்க உளவியல் அறிவு உதவுகிறது. உன்னதமான பணியின் உண்மைப் பெறுமதியை உளம் கொண்டு என்றும் அர்ப்பணிப்புடன் அர்த்தமுள்ள பணியாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களை கல்விச் சமூகம் என்றும் நன்றியோடு போற்றும் கல்லாதோரும் கைகூப்பித் தொழுவர். காலங்கடந்தும் கலங்கரை விளக்குகள் தம் ஒளியால் தம் முன்பள்ளி ஆசான்கள் பணியை உலகுக்கு உணர்த்தி நின்று உதவுவார்.

# முன்பள்ளிச் சிறார்களிடையே அரங்கச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்



நா.விமலநாதன்
BSc.M.Ed
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

முன்பள்ளிக்கல்விக் கலைத் திட்டம், செயற்பாடுகள், பற்றிய அனைத்து மட்டங்களுக்கும் பொதுவான தோர் புலக்காட்சி பூரணமடையாத நிலை இங்கே காணப்படுகிறது. இருப்பினும் காலத்தின் தேவையொட்டி ஓரளவு ஒழுங்குபடுத்தப்பட்ட நிலை உள்ளதனை மறக்கமுடியாது. சிறுவர் நாடகம் என்ற எண்ணக்கரு நன்றாக வளர்ச்சிய டைந்துள்ள இக்கால கட்டத்திலே அதன் நீட்சியாக முன்பள்ளி சிறார்களுக்கும் இவ்வாறான அரங்கச் செயற்பாடுகளை எவ்வாறு வடிவமைக்கப்படலாம். எவ்வாறு முன் கைச்சாத்திடலாம் என்பது பற்றி மேலோட்டமாக ஆராய்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

இன்றைய காலகட்டத்திலே முன்பள்ளிக் கல்வி என்பது அனைத்துத் தரப்பினராலும் வேண்டப்படுகின்ற ஒன்றாக கருதப்படுகின்றது. Pre-school, Playschool, பாலர் பாடசாலை, முன்பள்ளி என்று பலவாறும் அழைக்கப்படும் குழந்தைப்பருவ கல்விச் செயற்பாடு மிகவும் அவதானமாக நோக்க வேண்டிய கருப்பொருளாக அமைகி ன்றது.

6 வயதினிலே பாடசாலைக் கல்வியை ஆரம்பிப்பதற்கான முன் அனுபவத்தை அல்லது தகுதியினைப் பெறுவதற்கான ஒன்றாகவே முன்பள்ளிக் கல்விச் செயற்பாடு உருவாக்கப்பட்டது. தற்போது பிரபல ஆரம்பப் பாடசாலை களின் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான முன் நிபந்தனைகளாக இருப்பது வேறு விடயம். இருப்பினும் தாய், தந்தை, பாட்டன், பாட்டி ஆகியோரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் பிள்ளை பாடசாலை என்பதைப் புரிந்து கொள்வதற்கு அறிந்து கொள்வதற்கு கல்விச் செயற்பாடுகளில் இசைந்து கொள்வதற்கு அனுபவம் பெறும் காலப்பகுதி எனக் கொள்ளலாம்.

கல்வி என்னும் பயிரை முகர்ந்து பார்க்க விளைவதும் இக்காலப் பகுதியிலே தான் இப்பருவத்திலே குழந்தைகளை மிகவும் கவனத்துடன் கையாளவேண்டியது அவசியமாகும்.

ரூசோ, ஜோன் டூயா, மொன்ரிசோரி அம்மையார், புரொபல் போன்ற கல்விச் சிந்தனையாளரின் வழி காட்டலினூடாக இச் சிறார்களுக்கான

செயற்பாடுகள் வடிவமைக்கப்பட வேண்டும். அவர்களின் பல்வேறு விதமான செயற்பாடுகளினூடாக ஆளுமை விருத்தி ஏற்படுகின்றது. அவர்களின் அனுபவத்திரளமைப்பை மிகவும் கவனமாக விருத்தி செய்ய வேண்டும். இந்த வகையிலேயே முன்பள்ளிப் பிள்ளைகளின் அரங்க செயற்பாடுகள் நோக்கப்படவேண்டி உள்ளது.

சிறுபிள்ளைகள் இயல்பாகவே ஆடல், பாடல், விளையாட்டு, போலச் செய்தல் போன்றவற்றில் நாட்டங் கொண்டவர்களாக இயல்பார்கள். எனவே அவர்களை இயல்பான சூழலிலே இவ்வகையான செயற்பாடுகளை நோக்கி முன்னகர்த்துவது விரும் பத்தக்கது. இவற்றினூடாக சிறார்களின் உள்ளார்ந்த, உடலியக்க, அழகியல் திறன்களை வெளிக்கொணர முடியும். இத் திறன்களை சரியாக அடையாளம் கண்டுகொண்டால் அவை தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி அத்திறன்களை மேலும் வளர்த்தெடுக்க முடியும்.

எனவே தான் முன்பள்ளி ஆசிரியர்கள் மிகவும் பொறுப்புவாய்ந்த சேவையை ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். குழந்தை உளவியல், ஆடல், பாடல் அபிநயம், விளையாட்டு போன்ற பல்பரிமாணத்திறன் கொண்ட வர்களாக இருக்கவேண்டும்.

அப்படியானவர்கள் தான் பிள்ளையை சரியான முறையில் இனங்கண்டு கொள்ளமுடியும். பின்னர் அப்பிள்ளையில் உள்ள திறனை வளர்த்தெடுக்கவும் முடியும். பாடசாலையிலே இல்லாத வாய்ப்பு இங்கே உண்டு. ஆடல், பாடல் விளையாட்டு என்பன இங்கே முதன்மைப்படுத்தப்படுகின்றன. ஆகவே அவை தொடர்பான ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்கான களமாக முன் பள்ளியை வினைத்திறன் வாய்ந்த வகையில் பிரயோகிக்க முடியும்.

சிறுவர் கலைகளாக பின்வருவன இனங்காணப்படுகின்றன. அவைகளாவன பாடல்கள், சித்திரக்கதை, கதை, பத்திரிகை, கதை சொல்லுதல், நாடகம் என்பனவாகும். இவற்றிலே நாடகம் சார்ந்த அரங்கச் செயற்பாடுகளை எவ்வாறு வடிவமைப்பது என்பது பற்றி சிறிது பார்க்கலாம். நாடகக் கலையானது ஒரு கூட்டுக்கலையாகும். பாடல்கள், கதை, சித்திரம், நடிப்பு, விளையாட்டு போன்ற அனைத்தும் இதனுள் அடங்கி உள்ளது. பிள்ளைகள் எப்போதும் காட்சிகளையே விரும்புவார்கள். இவர்களை மிகவும் மகிழ்விப்பதாக இது அமையும். பறவைகள், விலங்குகள் என்பவற்றை பேசும் பாத்திரமாக மேடையில் காணபது இவர்களுக்கு விருப்பத்தைத் தரும் நாடகத்துடன் ஒன்றி தாமும் ஒரு பாத்திரமாக மாறி ரசிக்கத் தலைப்படுவர். காட்சிகள் சிறுவர்களின் மனதைக் கவர்ந்து பரந்து பட்ட அறிவைக்

கொடுக்கிறது. தாம் படித்தறியாத கேட்டறியாத விடயங்களை எளிதில் கிரகித்துக் கொள்ள நாடகம் உதவு கின்றது.

சிறுவர் நாடகங்கள் பொதுவாக இரண்டு தளங்களிலே நின்று நோக்கப்படலாம்.

1. சிறுவர்களைக் கொண்டு நாடகம் பழக்கி அதனை சிறுவர்கள் பார்க்கச் செய்தல், 2. பெரியவர்களைக் கொண்டு சிறுவர்களுக்கான நாடகங்களைத் தயாரித்து அதனை சிறுவர்கள் பார்க்கச் செய்தல்.

முன்பள்ளிச் சிறார்களைப் பொறுத்தவரையில் 1வது வகை சற்று சிரமமான செயற்பாடாகவே இருக்கும். ஆனால் மிகுந்த சிரத்தையுடன் அவர்களைப் பயிற்றுவித்து அவர்களின் மனவெழுச்சிக்குத் தகுந்தவாறும் அவர்களின் உடலியக்கத் திறன்களை வளர்த்தெடுக்குமாறும் அரங்கச் செயற் பாடுகளை வடிவமைத்துக் கொள்வது மிகுந்த பிரயோசனத்தை வழங்கும். ஆசிரியரும் இதனூடாக எங்குமே கற்றுக்கொள்ள முடியாத சிறுவர் தொடர்பான சிறந்த அனுபவங்களைப் பெறமுடியும்.

நாடகம் கூட்டுக்கலை என்று பார்த்தோம். அந்தவகையில் சிறார்களு க்கான நாடகங்களை பின்வரும் அம்சங்களை கொண்டிருக்க வேண்டும். எனக் எதிர்பார்க்கப்படுகின்றது.

1. விளையாட்டு

சிறுவர்கள் அனேகமாக விளையாடுவதில் விருப்பம் கொண்டவர் களாக இருப்பர். விளையாட்டு மூலம் கற்றல் என்பது சிறார்களுக்கு மிகவும் பயன்படுகின்ற விடயம் ஆகும். பொம்மைவிளையாட்டு, மண்சோறு அமைத்தல் போன்ற விளையாட்டுக்களில் நாடகப்பண்பு காணப்படும். இதில் இவர்கள் ஈடுபட்டுக்களிப்பர். எனவே நாடகமும் விளையாட்டுப் போல் இருத்தல் வேண்டும்.

2. ஆடல், பாடல், கற்பனை

சிறுவர்கள் இயல்பாகவே பாடவும் ஆடவும் விரும்புவர். யாராவது சிறுவர்களோடு கதைக்கும் போது ஒரு பாட்டுப்பாடிக் காட்டுவீர்களா என்று வினாவுவது வழக்கம் அநேகமான சிறுவர்கள் தங்கள் மழலைக்குரலினால் பாடி கேட்பவர்களை மகிழ்விப்பார். ஆடல், பாடல் என்பன மனவெழுச்சியைத் தூண்டக்கூடியன. தனது லயத்தைத் தானே கண்டு கொள்ள இது உதவும், சுதந்திரம், கற்பனை, அவதானம், கருத்தூன்றல், அழகியல் என்பன வளர்ச்சி பெற இது உதவும் எனவே இவர்களுக்கான நாடகங்களை கூடியளவு ஆடல் பாடல்களைக் கொண்டு அமைக்கப்படல் வேண்டும்.

3. வினோதங்கள்

சிறுவர்கள் பெரும்பாலும் வினோதங்களிலே நாட்டமுடையவர்கள். காகத்தை நரி ஏமாற்றி கதை கூட வினோதத் தன்மை நிரம்பியதே

மிருகங்கள் பறவைகள் வருகின்ற கதைகள், அவர்களுக்கு மிகவும் விருப்பமானதாக இருக்கும். வர்ணங்கள், பகட்டான வேட உடுப்புகள், சிலவேளை களில் முகமூடிகள், போன்றவை வினோதத்தன்மையை ஏற்படுத்தும் வண்ணம் பயன்படுத்தப்படலாம்.

4. கதை சொல்லல்

கதைசொல்லல், கேட்டல் என்பன சிறார்களுக்கு மிகவும் விருப்பமான செயற்பாடுகள். குரலிலே சொல்வதைக் கேட்பதற்கும் தானே பார்க்கக் கூடிய தன்மைக்கும் மிகவும் வித்தியாசம் உண்டு. பிள்ளையினால் விரும்பக்கூடிய அவர் களால் ஏற்றுக்கொள்ள கூடிய கதைகள் நாடகமார்க்கப்படலாம். சிறார்களின் மனவெழுச்சிக்கு தகுந்த வகையில் நேர்ப்பாங்கான தன்மைகள் கொண்ட கதைகள் தெரிந்தெடுக்கப்படல் அவசியம்.

5. அறப்போதனை

சிறுவர் அரங்கத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படையாக போதனை இடம்பெறல் தவிர்க்கப்படல் வேண்டும். நல்ல அறக்கருத்துக்கள் படைப்பினுள் பொதிந்திருந்த தக்க தருணத்தில் பாத்திரங்களினூடாக வெளிப்படுதல் மிகுந்த பயனைத் தரும்

6. நாடக ஒத்திகை

நாடகத்திற்காக ஒத்திகைச் செயற்பாடுகள் பிள்ளைகளுக்கு களிப்பையும் உற்சாகத்தையும் உண்டு பண்ணக் கூடியதாக அமைதல் வேண்டும். ஒரு விளையாட்டு விளையாடுவது போன்ற உணர்வு எல்லாருக்கும் கிட்ட வேண்டும். வசனங்கள், பாடல்கள் பாடமாக்குவது தவிர்க்கப்படல்வேண்டும். இயல்பான மொழி நடையில் இயல்பாகப்பேசும் பழக்கத்தையே சற்று வலுவூட்டி பொருத்திக் கொள்ள வேண்டும்.

தண்டிப்பில்லாத ஜனநாயக மயமான, கலகலத்துடான சூழலிலே நாடக ஒத்திகை இயல்பாக நடைபெற வேண்டும். பிள்ளைகளின் செயற்பாடுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறைகளைச் சுட்டிக் காட்டுவதைத் தவிர்த்து நிறைகளைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தல் வேண்டும்.

சிறுவர் அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடும் சிறார்கள் பெறக்கூடிய நன்மைகள்

1. சேர்ந்து பழகும் கருமமாற்றும் திறன் பெறல்
2. மனமகிழ்ச்சி அடைதல்
3. கூச்சம், பயம், தெளிதல்
4. கூட்டு முயற்சியில் ஈடுபடுதல்
5. தலைமை தாங்கும் திறன் ஏற்படும்
6. விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு விருத்தி அடையும்
7. தன்னம்பிக்கை
8. அழகியல் நயக்கும் திறன்
9. உடலியக்கத்திறன்களில் தேர்ச்சி பெறல்

சிறுவர் அரங்கச் செயற்பாடுகளை

முன்பள்ளி ஆசிரியர்களே முன்னின்று நடாத்த வேண்டும். இதற்கான பயிற்சிகளை அவர்கள் பெற்றிருத்தல் அவசியம். முன்பள்ளி ஆசிரியர் பயிற்சியிலே இப்பயிற்சி கண்டிப்பாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சிறுவர் அரங்கச் செயற்பாட்டை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் பல் வேறுபட்ட திறன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகளாவன

1. தங்கள் கற்பித்தற் செயற் பாட்டை கவர்ச்சியாகவும் இலகுவாகவும் செய்யும் திறன் பெறுவர்

2. மாணவர்களுடன் நெருங்கிப் பழகுவதனால் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற வாய்ப்பைப் பெறுகி றார்கள்.

3. மாணவர்களின் விசேட திறன்களை இனங்கண்டு கொண்டு அத்திறன்களை அவர்களிடத்தே வளர்த் தெடுப்பதற்கான வழிமுறைகளை உருவாக்கல்

4. சிறுவர்களுடன் ஒத்த மனப்பாங்குடன் இருப்பதனால் கவலைகளிலிருந்து விடுபட்டு திறந்த மனதுடன் செயற்படல்

5. கற்பனை, துக்கசிந்தனை, படைப்பாக்கத்திறன் என்பவற்றை வளர்த்தெடுக்கும் ஆற்றல் பெறுக

பிள்ளைகளிடையே அரங்கச் செயற்பாடுகளை எவ்வாறு செயற் படுத்துவது என்பதிலே மிகுந்த கவனம் அவசியம். இதற்காக முன்பள்ளி ஆசிரியர்கள் சில அடிப்படைத் திறன்களை தம்மிடத்தே வளர்த்துக் கொள்ளல் அவசியம்.

அவையாவன

1. சிறார்களுக்காக செய்கின்றேன் என்ற நினைப்பில்லாது சிறுவர்களை நேசிப்ப வர்களாக இருத்தல்

2. எவ்விதமான எதிர்பார்ப்பும் நிர்ப்பந் தமும் இல்லாமல் சிறுவர்களின் அரங்கில் ஈடுபடும் மனப்பாங்கு கொண்டி ருத்தல்

3. தமது செயலாலும் பேச்சுக்களாலும் தோற்றத்தாலும் சிறார்களைக் கவரும் ஆற்றல் கொண்டிருத்தல்

4. சிறார்களுடன் இணைந்து செயற்பட தயாரான மன நிலையுடன் இருத்தல்.

5. சிறுவர் அரங்கில் நடித்த அனுபவம், சிறுவர் அரங்கம் தொடர்பாக கற்றுக்கொள்ள விருப்பம் கொண்டி ருத்தல்

6. மிகுந்த கற்பனையாற்றல், தளர்வான மனநிலை, சந்தோஷமாக எச் செயற்பாட்டிலும் ஈடுபடும் தன்மை கொண்டிருத்தல்.

7. ஆடல், பாடல் தெரிந்திருத்தல், சிறுவர்களின் ஆற்றல்களுக்கு ஈடு கொடுக்கக் கூடியதாக செயற்படல்

8. சலிப்பின்றி சிறுவர் அரங்கில் தொடர்ச்சியாக ஈடுபடக்கூடிய ஆர்வம் கொண்டிருத்தல்

இவ்வாறான தகுதிப்பாடுகளை முன்பள்ளி ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டும். இல்லாதவிடத்து சிறுவர் அரங்க வல்லுனர்களுடன் இணைந்து பயிற்சிகளைப் பெற்று அரங்க செயற்பா டுகளில் ஈடுபடலாம்.

இதன்மூலம் சிறப்பான முன்பள்ளி ஆசிரியராக செயற்பட முடியும்.

எம் சிறார்கள் மத்தியிலே புதிதாக உருவாகியுள்ள அரங்க செயற்பாடு ஒன்றினை பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது. சிறார்களைப் பெரியவர்களாக ஒப்பனை செய்து (அனேகமாக பெண் பிள்ளைகளை) பரதநாட்டிய உடை, மேலைநாட்டு உடை போன்றவற்றை அணிவித்து சினிமாப்பாடல்களுக்கு ஆடவைக்கும் நிகழ்ச்சிகள் அனேகமான முன்பள்ளிக் கலைவிழாக்களில் காணக் கூடியதாக உள்ளது. இந்நிகழ்ச்சிகள் பலரதும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. சிறார் களுக்கு சற்றும் பொருத்தமில்லாத உடல் அசைவுகளை பயிற்றுவிதது அவர்க ளுக்கு பொருத்தமில்லாத துள்ளிசைப் பாடல்களுக்கு ஆடப்பண்ணி அதனை வளர்த்தோர் ரசிக்கின்ற ஒரு நிலையே இது குழந்தை தனது சொந்தக்குரலிலே பாடி தனது பிஞ்சுக் கை, கால்களினால் அதற்கேற்ற அபிநயம் படித்து ஆடும்போது அதன் மனவெழுச்சியில் நேர்ப்பாங்கான மாற்றங்கள் ஏற்படும். படைப்பாக்கத்திறன் விருத்தியாகும். அதை விடுத்து குழந்தையை வைன்கொடுத்து ஆடம் பொம்மையைப் போல் பாவனை செய்யவைப்பது பொருத்தமற்ற செயற்பாடே

நிறைவாக குழந்தைகளின் கற்கை உலகிற்குப் பிரவேசிக்கும் நுழைவாயிழாகக் கருதப்படும் முன்பள்ளி மாணவர்களிடையே அவர்களின் வயது, சிந்தனை, பருவம் என்பவற்றுக்கு ஏற்ற வகையில் அவர்களின் மனவெழுச்சிப் பண்புகளை வளர்த்தெடுக்கத்தக்க வகையில் அரங்க செயற்பாட்டினை வடிவமைத்து வகையில் அரங்க செயற் பாட்டினை வடிவமைத்து செயற்ப டுத்துவது விரும்பத்தக்கது. இதன் மூலம் அவர்களிடமுள்ள தனித்துவமான திறன் களை அடையாளம் கண்டு வளர்த் தெடுக்க முடியும்.இதனால் மாணவர்கள் தொடர்ச்சியான தமது கற்கும் செயற் பாட்டில் ஆர்வத்துடன் ஈடுபடுவதோடு இணைபாட விதான செயற்பாடுகளிலும் தம்மை இணைத்து பன்முக ஆளமை யினை வளர்த்துக் கொள்ளமுடியும்.

உசாத்துணை

நாடக வழக்கு - குழந்தை ம.சண்முக லிங்கம்

சிறுவர் அரங்கு - தோ.தேலானர் (ஆய்வுக்கட்டுரை)

# ஆரம்பக்கல்வியே தலைமைத்துவத்திற்கு அடிப்படை



*கலாநிதி சின்னத்தம்பி - பத்மராசா*
B.A(Cey) P.G.D.E, M.E.D, M.Phil, Phd,
*விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*

கல்வி என்பது இன்று ஒவ்வொருவருக்குமுரிய அடிப்படை உரிமையாகும். மனிதன் மனிதனாக வாழ கல்வியே அடிப்படையாகும். இதனாலேயே யுனஸ்கோ கூட "கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான்" என்கிறது இக் கல்வியானது பிறப்பு முதல் எம்மிடம் இயற்கையாக அமைந்து காணப்படாமல் பின்னர் நாம் பெறும் அனுபவங்களும் அவற்றின் விளைவுகளாலுமே தீர்மானிக்கப்படுகின்றன. கற்றலில் அடங்கும் அறிவு, திறன், மனவெழுச்சி, உடலியக்கம் சார்ந்தவையாக இவ் அறிவு இருக்கின்றது. எனவே தான் இவ் அறிவானது பிறப்பு முதல் இறப்புவரை தொடர்கின்றது. இந்த வகையில் கல்வியின் சிறப்பை நோக்கிய நாம் தரமான கல்வியை வழங்கும் நிறுவனங்கள் தொடர்பாகவும் நோக்க வேண்டியுள்ளது.

அறிவுத்துறையில் பல பரப்புக்களையும் தன்னுள் அடக்கி அவற்றின் உட்பொருளையும் அதற்கான விளக்கங்களையும் அளிப்பதாகவும் இக் கல்வி நிறுவனங்கள் விளங்குகின்றன. எமது நாட்டில் கல்வியானது

1. ஆரம்பக்கல்வி
2. இடைநிலைக்கல்வி
3. உயர்தரக் கல்வி
4. பல்கலைக் கழகக் கல்வி

எனும் நான்கு பெரும் பிரிவுகளை தன்னுள் உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

இதில் முதலாவது நிலையாகிய ஆரம்பக்கல்வி மிகவும் முக்கியத்துவமானது "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழியூடாக ஏனைய பிரிவுகளுக்கும் அடிப்படையாக அமையும். இவ் ஆரம்பக்கல்வி நிலை எனும் போது குடும்பத்து சூழலிற் காரணிகளும் (Ecological factors) அதில் பெரும்வகி பாகத்தைக் கொண்டிருக்கின்றது பிள்ளை வளர்ப்பு முறை, பெற்றோரின் முதிர்ச்சி குடும்பவசதி, உறவுகளின் நடத்தைகள், சூழல் அமைவுகள் போன்றனவும் இதில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. எனலாம்.

குழந்தை உளவியலாளரும் பிள்ளையின் அறிகை ஆற்றல் விருத்தியிலே நேரடியாக செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக தாய்,

தந்தையின் கல்வி, குடும்ப உறவுகளின் கல்வி, கல்விசார் ஊக்குவிப்புக்கள், குடும்பத்தின் சமூக, பெருளாதார நிலைகள் என்பனவற்றைக் குறிப்பிடுகின்றனர். ஆரம்பக்கல்வியிலே குழந்தையானது விளையாட்டில் ஈடுபடுவதனால் சமூக மயமாக்கலுக்கு குழந்தை உட்படுகின்றது. இதனால் பிறரில் தங்கியிருக்கும் நிலை குறைந்து சகபாடிகளுடனான தங்கியிருக்கும் நிலை வளரும் அதீத உணர்வுகள், தலைமைத்துவப் பண்புகள், போட்டி உணர்வு, மதிப்பீட்டுத் திறன், போட்டித் திறன், பிறரை மாதிரி கையாக பின்பற்றல் வன்நடத்தை வளருதல் முதலிய பல் திறன்களும் வளர்ச்சிய டைகின்றன எனலாம்.

எமது நாட்டில் ஆரம்பக்கல்வி அறிவானது மிக உயர்ந்த நிலையில் உள்ளது 91% வீதமாக இது உள்ளது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கல்விக்கான முதலீடுகளை அதிகளவில் மேற்கொள்ளுகின்றன. உலக நாடுகளின் வரிசையில் எமது நாடானது 44வது இடத்தை (131 நாடுகளில்) பெற்றுள்ள போதிலும் தகவல் தொழில்நுட்பம், அறிவுப் பொருளாதாரம் மற்றும் தலைமைத்துவம் போன்ற துறைகளில் அதிகம் முன்னேற வேண்டிய சவாலையும் கொண்டுள்ளது. சுயாதீன கற்றல் மேம்படுத்தப்பட வேண்டியதுடன் மாறிவரும் சூழலை எதிர்கொள்ள வேண்டிய நிலையும் உள்ளது எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்க கூடிய ஊழியப்படையை உருவாக்க வேண்டிய நிலையும் உள்ளது.

சமாதானம், ஐக்கியம், சம வாய்ப்பு, கல்வியில் ஏற்படுத்தப்பட வேண்டி உள்ளது. கல்வியில் அடைவு அதிகரிப்பு, பிராந்திய வேறுபாடு நீக்கம், மனிதவள மேம்பாடு என்பனவும் எட்டப்படவேண்டியவையாக உள்ளது. இவ்வாறு பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்கும் நாம் சிறந்ததொரு தலைமைத்துவத்தை வளர்ப்பதிலும் ஆரம்பக்கல்வி முதல் அக்கறை செலுத்த வேண்டிய நிலை உள்ளது ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற முதுமொழிக்கேற்ப சிறு வயதிலேயே தலைமைத்துவத்தை வளர்ப்பதனூடாக சிறந்ததொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்பமுடியும் என்பதில் ஐயமில்லை. தலைவர்கள் பிறப்பதில்லை எவருமே தலைவராகலாம். ஒவ்வொரு பொது மகனும் ஏதோ ஒரு வகையில் தலைவனாகவே செயற்பட வேண்டிய கட்டாய நிலைக்கு உட்படுகின்றான். பிறக்கும் போதே தலைவனாகக் கூடிய உரிமையும் எம்முடன் தோன்றி விடுகின்றது ஆயினும் ஒரு சிலரே தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொள்கின்றனர். பலர் கிடைக்கும் தலைமைத்துவத்தையும் தட்டிக்கொட்டி விட்டு தக்கவைத்துக் கொள்ளத் தவறி விடுகின்றனர். தலைவர்கள் பல ரகம் சமூகத்தலைவர்கள், ஊர்த்தலைவர்கள், ஆன்மீகத் தலைவர்கள், உத்தியோகத் தலைவர்கள், தொழிற்தலைவர்கள்,

நாட்டு தலைவர்கள், உலகத் தலைவர்கள் என கூறிக்கொண்டே போகலாம் ஒரு தலைவன் தனக்குத் தானே தலைவனாகவும் இருக்க வேண்டும். தன்னை ஆள முடியாதவன் தலைமைத்துவத்தை இழந்து விடுகின்றான்.

இத்தகைய தலைமைத்துவத்தை ஒருவரிடம் வளர்ப்பதில் ஆரம்பக்கல்வி அதிக தாக்கத்தை செலுத்தி உள்ளது ஐம்புலன்களுக்கும் மனதிற்கும் நாம் நல்ல தலைமையை வழங்க வேண்டும். அவை எமக்கு கட்டுப்பட்டு செயற்படா விட்டால் எதிர்மறை விளைவுகளையே சந்திக்க வேண்டியிருக்கும் புலன்களையும் பொறிகளையும் மனதையும் முகாமை செய்து அவற்றுக்கு நல்ல தலைவராக இருக்க வேண்டும். இதற்கு ஆன்மீகம், தியானம், யோகம் என்பன உதவும் இதை நெறிப்படுத்துவதில் ஆரம்பக்கல்வி முக்கிய வகிபங்கை கொண்டு உள்ளன எனலாம். அன்பு, அமைதி, கருணை, நீதி, கரிசனை, சாந்தம் ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளை சிறார்களிடம் ஆரம்பக்கல்வியானது வழங்கவேண்டும் இவையே அனைவரையுமே வாழவைக்கின்றன. இவற்றை வளர்த்துக் கொள்ளும்போதே தனக்குத் தானே தலைவனாகுவதுடன் பிறருக்கும் தலைவனாகும் வாய்ப்பும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. தலைமைத்துவம் ஆனது பண்பின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டியதே தவிர பதவி அந்தஸ்து, செல்வம், புகழ் போன்றவற்றினால் கட்டியெழுப்ப முடியாதது ஆகும். எமது வீழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் நாமே காரணம் என்பதை உணர வேண்டும். இதையே "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்றனர் நம்முன்னோர்கள்

ஆரம்பக்கல்வி முதல் நாம் மனிதப் பண்பாடு, நல்லொழுக்கம், மனிதாபிமானம், மனித விழுமியம், அகிம்சை, சத்தியம், அறம், ஆன்மீகம் முதலியவற்றை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும் மாணவர்களிடம் இருக்கும் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்ந்து அவர்களிடம் இருக்கும் இலைமறை காய் போன்ற தலைமைத்துவத்தை வளர்க்கும் பண்புகளை வெளிக்கொணர்வதில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களது வகிபங்கு காத்திரமானது எனலாம். மாணவர்களிடம் மாணவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களையும் வழங்கி அவர்களது திறன் வெளிப்படுத்தப்பட களம் அமைக்க வேண்டும். இதன் மூலமே எல்லோராலும் விரும்பப்படும், வேண்டப்படுகின்ற நல்லதொரு தலைவனை உருவாக்க முடியும்.

உசாத்துணை

சபாஜெயராசா குழந்தை உளவிலும் கல்வியும் சந்திரசேகரன் சோ, சின்னத்தம்பி - மா, கல்வியும் மனிதவள விருத்தியும்

வலயக்கல்வி அலுவலகம் திருமலை நித்திலம் முத்துலிங்கம்.ச கல்வி உளவியல் கல்வியமைச்சு புத்தாக்கம் சார் கற்பித்தல் முறையியல்கள்

# முன் பள்ளியில் விசேட கல்வி.



ஆறுமுகம் ரவீந்திரன்,
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

ஒரு பிள்ளையினுடைய கல்வியானது அதன் கருவறையில் ஆரம்பித்துக் கல்லறை வரை தொடர்கிறது. அந்த வகையில், தாயின் கருவறையே அதன் முதல் வகுப்பறை யாகின்றது. அப்பிள்ளையானது புவியில் அவதரிக்கும்போது குடும்பமே அதன் முதற் பாடசாலை யாகின்றது. இவ்விதமாய்க் குடும்பத்தை விட்டு வெளியே வருகின்ற பிள்ளையானது முதல்முதலாய்த் தரிசிக்கின்ற பாடசாலை அதன் முன்பள்ளியேயாகும். முற்றிலும் புதியதொரு சூழல், புதிய பல முகங்கள், புதிய பல கற்றல் முறைமைகள், இவை யாவற்றுக்கும் தன்னை இயைபுபடுத்திக் கொண்டு தன் கல்விப் பயணத்தைத் தொடரவேண்டிய ஒரு நிலைமை இப்போதுதான் பிள்ளைக்கு உருவா கின்றது. ஒரு பிள்ளையின் கல்விப் பயணத்திலே இந்த முன் பள்ளியின் பங்கு மிகவும் மகத்தானது. வீரியம் மிக்க பயிர்களை உருவாக்கித் தருகின்ற நாற்று மேடைகள் போல வினைத்திறன் மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்கித் தருகின்ற நாற்று மேடைகளாக இந்த முன்பள்ளிகள் விளங்குகின்றன என்று கூறின் அதில் தவறேதும் இல்லை.

நமது நாட்டைப்பொறுத்தமட்டில் இந்த முன் பள்ளிகள் தொடர்பாக போதிய கரிசனையற்ற நிலையே மிக நீண்ட காலமாக நிலவிவந்தது. எனினும், தற்போது இந்நிலையில் ஓரளவு மாற்றங்கள் ஏற்பட்டுவருவதைக் காண முடிகின்றது. இந்த முன் பள்ளிகளை மேலும் வினைத்திறன் மிக்கவை யாக்குவதற்கு விசேட கல்வி தொடர்பான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுவது மிகவும் இன்றியமையாததாகின்றது. இவ்விடத்தில் இந்த விசேட கல்வி தொடர்பாக நாம் சற்றே புரிந்துகொள்வது இன்றியமையாததாகின்றது.

நமது மாணவச் செல்வங்களிடையே விசேட தேவை கொண்டோர் எனும் ஒரு தரப்பினரும் காணப்படுகின்றனர். ஒரு சாதாரண வகுப்பறையிலிருந்து தமது கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதில் பெருமளவு இடருறுகின்றவர்களை விசேட தேவை கொண்டோர் என நாம் ஒருவாறு வரையறுக்கலாம். இப்பேற்பட்ட விசேட தேவை கொண்ட பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்கான அல்லது அவர்களை வளப்படுத்துவதற்கான கற்பித்தல்

நுட்பங்கள், உத்திகள், வளங்கள் போன்ற யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு இயலே விசேட கல்வியாகும். எனவே, மேலே சொல்லப்பட்ட விசேட தேவைகொண்ட பிள்ளைகளையும் சாதாரண கல்வி நீரோட்டத்தோடு இணைத்துக் கொள் வதற்கு இவ்விசேட கல்வி தொடர்பான அறிவும் நேர் மனப்பாங்கும் மிகவும் இன்றியமையாதவையாகும்.

முன் பள்ளிகள் தொடர்பான கரிசனை அண்மைக் காலங்களிலேயே ஏற்பட்டு வருகின்ற நிலையில் இங்கு காணப்படக்கூடிய விசேட தேவை கொண்ட மாணவர்கள் தொடர்பாக இதுவரை அதிகமாகச் சிந்திக்கப்படவில்லையென்றே கூற வேண்டியுள்ளது. இந்நிலை ஆரோக்கிய மானதன்று. விசேட தேவை கொண்ட மாணவர்கள் முன் பள்ளிப் பருவத்தி லேயே இனங்காணப்பட்டு உரிய முறையில் போசிக்கப்படவேண்டும். அப்போது தான் இவர்களும் ஏனைய மாணவர்களோடு இணைந்து தமது கல்விப் பயணத்தைத் தங்கு தடையின்றி மேற்கொள்வதற்கான ஏதுநிலை உருவாகும். இதற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேட கல்வி தொடர்பான போதிய பயிற்சிகள் அளிக்கப்படுவது மிகவும் அவசியமாகும். அத்துடன், மாணவர்கள் அனைவரையும் கூர்ந்து அவதானித்து அவர்களின் இயலுமை, இயலாமைகளைக் கண்டறியும் திறன் மிக்கவர்களாக அவர்கள் ஆக்கப்படவேண்டும். மேலும் விசேட தேவை கொண்ட மாணவர்கள் தொடர்பான நேர் மனப்பாங்கு கொண்ட வர்களாகவும் இவர்கள் ஆக்கப்பட வேண்டும். இதற்கான பயிற்சிகள் மாத்திர மன்றி வலுவான ஊக்குவிப்புக்களும் இவ்வாசிரியர்களுக்கு அளிக்கப்படுவது மிகவும் இன்றியமையாததாகும். அது மாத்திரமன்றி, முன் பள்ளிகளிலே இனங்காணப்படுகின்ற விசேட தேவை கொண்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும், அவர்களது திறன்களை விருத்திசெய்யக்கூடிய சாதனங்கள், அத்தோடு தேவையான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் என்பனவும் தடையின்றி வழங்கப்பட வேண்டும்.

நமது சமூகத்திலுள்ள பிள்ளை களில் பெரும்பாலானவர்கள் முன்பள்ளி களுக்குச் செல்வதில்லை. இதற்கு வறுமை, பெற்றோர்களின் அறியாமை, முன் பள்ளிகள் இவர்களை ஏற்க மறுக்கின்றமை போன்ற காரணங்களை நாம் கூற முடியும். எது எவ்வாறாயினும், இப் பிள்ளைகள் அனைவருமே முன் பள்ளிகளில் இணைக்கப்படவேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது. கிராம சேவகர் பிரிவுகள்தோறும் விசேட தேவை கொண்ட பிள்ளைகள் இனங்காணப்பட்டு, அவர்கள் அனைவரும் முன் பள்ளிகளில் இணைக்கப்படவேண்டும். இவ்விணை ப்பானது வெறுமனே பெயரளவிலான

ஒரு இணைப்பாக அன்றி, தற்போது நமது நாட்டில் அமுலிலுள்ள உட்படுத்தற் கல்வி விதிமுறைகளுக்கமைவாக ஆரோக்கியமான ஓர் உட்படுத்தலாக அமைதல் வேண்டும். இதன்மூலம் பெருமளவான விசேட தேவை கொண்ட பிள்ளைகளை சமூகத்தின் பயன் மிக்க அங்கங்களாக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

விசேட தேவை கொண்ட பிள்ளைகள் இயற்கையால் ஏதோ ஒரு வகையில் வஞ்சிக்கப்பட்டவர்களானாலும் அவர்களும் இவ்வுலகில் வாழப் பிறந்தவர்களே. கல்வியால் பெற்றுக் கொள்ளக்கூடிய உச்சப் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கும் உரிமையுண்டு. எனவே, முன் பள்ளிப் பருவத்திலேயே அவர்கள் முழுமையாய்க் கல்வி வெளிச்சத்துக்குள் கொண்டுவரப்பட வேண்டும். அதற்காகப் பாடுபட நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

“எல்லோருக்கும் கல்வி” என்ற ஐ.நா. ஸ்தாபனத்தின் உயரிய இலக்கினை எட்டிப் பிடிப்பதற்கு இதைவிட ஒரு சிறந்த வழி இருக்க முடியாது.

# முன்பள்ளியில் ஒழுக்க விழுமியங்கள்



திருமதி.கலா.பிரகதீஸ்வரன்
ஓய்வுநிலை ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்
யாழ்வலயம்

ஒரு குழந்தை கருவிலேயே அதாவது தாயின் கருவிலிருந்து பல வகையான கற்றலையும் பெற்றுக் கொள்கிறது. இதயத்துடிப்பில் இருந்து தாளத்தையும், அசைவுகளில் இருந்து லயத்தையும், சுவைகள், விருப்பு வெறுப்புக்கள், தாயின் ஒழுக்க விழுமியங்கள், பக்தி முறைகள், அறம் போன்றவற்றை அறிந்து கொள்கிறது. உதாரணமாக அர்ச்சுனனின் மனைவியின் கர்ப்பத்திலே இருந்த அபிமன்யு தனது தாயக்கு முனிவர் கூறிய தெய்வபக்தி கதைகளைக் கேட்டும் போர் யுத்திகளையும் கண்விழித்து கேட்டதாக புராணக் கதைகள் கூறுகின்றன. எனவே கருவில் குழந்தை கற்பதனால் கர்ப்ப காலத்தில் தாய் நல்லவற்றையும் மெல்லிய இசையினையும் கேட்கவும் சிந்திக்கவும் வேண்டும்.

இன்றைய உலகில் முன்பள்ளிப் பருவத்தை மிகவும் பெறுமதியானதாகவும் அவர்கள் தான் கற்றலை கற்கக் கூடிய தயார் நிலையில் உள்ளவர்கள் என்றும் கூறுகிறார்கள். எனவே இரண்டு வயது தொடக்கம் பாடசாலை செல்லுமுன் வரையான காலம் தான் முன்பள்ளிப்பருவம் இவர்களை "பிசையப்பட்ட மாக்கலவை" என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். மாவிலே நாம் விரும்பிய உருவங்களை விதம் விதமாக அமைக்கலாம். எனவே தான் முன்பள்ளி ஆசிரியர்களின் பொறுப்பு மிகவும் முக்கியமானது ஏனெனில் தாய் தந்தையர் கையில் இருந்து உங்களிடம் ஒப்படைக்கும் பிள்ளையின் செயற்பாடுகளை மிக உன்னிப்பாக அவதானித்தல் வேண்டும்.

காலையில் முன்பள்ளிக்கு வரும் பிள்ளைகள் பல்வேறு சுற்றாடல்களில் இருந்து பலதரப்பட்ட குணாதிசயங்களுடன் வருகின்றனர். எனவே இவர்களை சரியாக அவதானித்து சமூக இசைவாக்கத்தை அறிய வேண்டும். முன்பள்ளிப் பருவத்திலேயே பிள்ளைகள் ஆன்மீகத்தை கற்றுக் கொள்ள வேண்டும். முன்பள்ளிகளில் காலையில் கூட்டுப்பிராத்தனை வீடுகளில் பெற்றோருடனான பிரார்த்தனை என்பன பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுகின்றது. காலை வணக்கம் கூறுதல், காலையில் எழுந்தவுடன் பெற்றோர்களை முத்தமிடல், விசேட தினங்களில்

பெற்றோர்கள், ஆசிரியர், பெரியோர்கள் போன்றோரின் கால்களில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் என்பன சிறந்த நற்பண்புகளாகும். பிள்ளைகள் காலைக் கடன்களை முடித்து தாமே தமது வேலைகளை செய்து பாடசாலைக்கு வரப்பழக்கி கொள்வதுடன் முன்பள்ளி வந்தவுடன் தனது பொருட்களை உரிய இடத்தில் வைக்கப்பழகிக் கொள்ள வேண்டும்.

வகுப்பறையில் சகபாடிகளுடன் அன்பாகப் பழகுதல், அவர்களுக்கு உதவுதல் போன்ற பழக்கவழக்கங்களை நாளாந்த செயற்பாட்டின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டும். உணவு உண்ணும் முன்னர் கைகளை கழுவுதல், உணவுகளை உண்ணும் முறை, உண்ணும் முன்னர் கடவுளுக்கு நன்றி கூறுதல், மற்றவருடன் பகிர்ந்து உண்ணல் போன்றன முன்பள்ளியூடாக வளர்க்கப்படவேண்டும். வகுப்பறையில் கண்டெடுத்த பொருளை ஆசிரியரிடம் ஒப்படைத்தல் வேண்டும், ஆசிரியர் சொற்படி நடத்தல், உண்மை பேசுதல் என்பன பிள்ளைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடத்தைகளாகும். சகபாடிகளுடன் இணைந்து செயற்படுதலே பிள்ளைகளுக்கு நல்ல பண்புகளை வளர்க்கிறது. சகபாடிகளை பெயர் சொல்லி அழைத்தல், நட்புறவுடன் நடத்தல், விளையாடும்போது ஏற்படும் வெற்றி தோல்விகளை சமமென ஏற்றல், விபத்துக்கள் ஏற்படின் முகம் கொடுத்து உதவுதல், பிழைகள் செய்திருப்பின் மன்னிப்பு கேட்டல், உதவி புரிந்தவர்களுக்கு மன நிறைவாக நன்றி கூறுதல், போன்ற நற்பண்புகளை வளர்ப்பதன் மூலம் சமூகத்தில் ஏற்படும் பல முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ள முடிகிறது. இவ்வாறான நல்ல பண்புகள் வளர வாய்ப்பளிப்பது முன்பள்ளிப் பருவமே ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

சிறு வயதிலிருந்தே பிள்ளைகளை கோயில்களுக்கு சென்று வழிபட வேண்டும். என பெற்றோர் வழிப்படுத்த வேண்டும். பெற்றோர் தம்முடன் பிள்ளைகளை அழைத்துச் சென்று வழிபடவேண்டும். இதனைப் பார்த்து பிள்ளையும் கற்றுக்கொள்ளும் வழிபடும் முறை, வீண்வார்த்தைகள் பேசுதலைத் தவிர்த்தல் போன்றவற்றை பிள்ளைகள் பெற்றோரைப் பார்த்துக் கற்றுக் கொள்ளும் சமய விழாக்களை நடாத்துதல், தோரணம் அமைத்தல், மாலைகட்டுதல், கோலம் போடுதல், பாஓதுதல், என்பவற்றை பாடசாலைகளில் போட்டிகள் வைப்பதன் மூலம் ஊக்குவிக்கலாம்.

ஒரு பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியில் முன்பள்ளி பெரும் பங்காற்றுகிறது. முன்பள்ளிப்பருவ மகிழ்வான கற்பித்தல் என்பது விளையாட்டு மூலமான கற்பித்தல் செயற்பாடாகும். இவ் விளையாட்டுக்கள் மூலம் விட்டுக் கொடுத்தல், ஒற்றுமை சுறுசுறுப்பு, பாதுகாப்பு, புத்துணர்வு போன்றன வளர்க்கப்படுகின்றது.

கலையை இரசித்தல், கலையாற்றல், இயற்கையை இரசித்தல், தேடுதல், போன்றன பிள்ளையை வளப்படுத்துவனவாகும். பிள்ளைகளை இயற்கைக்கு அழைத்துச் சென்று அவதானிக்க ஊக்குவித்தல் வேண்டும். இசையை இரசிப்பதனூடாக கலையாற்றல் வளர்க்கப்படுகின்றது. இன்றைய உலகில் எமது தமிழர் பண்பாடு, பழக்கவழக்கம், கலை, கலாசாரம் என்பன அருகிச் செல்வதைக் காணலாம். இதன் காரணமாகவே இன்று எமது நாட்டில் பல பிறழ்வான நடத்தைகள் ஏற்படுகின்றன. எனவே நாம் எமது நாட்டினை பாதுகாக்க வேண்டியவர்கள் இதனால் இவற்றை வளர்த்தெடுக்க வேண்டிய ஒரு தார்மீக கடமை ஆசிரிய சமூகத்திற்கு உண்டு. அதிலும் முன்பள்ளிப் பருவத்தில் விதைக்கப்பட்ட நல்ல பண்புகள் என்றும் அழியாதவை. எனவே இப்பருவத்தில் நாம் இவ்வாறான நல்ல பண்புகளை விதைத்தல் முன்பள்ளி ஆசிரியர் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எனவே பிள்ளைகளிடையே "பழக்கங்களை வழக்கமாக்கி" வழக்கங்களை ஒழுக்கமாக்கி" ஒழுக்கமான வாழ்க்கைக்கு வளம் ஊட்டி சமய, சமூக ஒழுக்க விழுமியங்களுக்கு அத்திவாரம் இடுவதில் பெரும் பங்களிப்பு செய்வது முன்பள்ளியே" அதனால் தான்

"முன்பள்ளிப்பருவ ஒழுக்க விழுமியங்களிலே தான் ஆரம்பப் பிள்ளைப்பருவ விதை முளையிடப் படுகிறது" என்ற கூற்றுக்கமைய நல்ல மாணவர்களை உருவாக்கி நாளை நல்ல சமூகத்தை உருவாக்குவோம்.

# முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிந்தனையில்....



திரு.க.விமலநாதன்
முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

நீண்ட காலமாக பாலர் பாட சாலை என சொல்லப்பட்டு வந்த நிலை அது பற்றிய முக்கியத்துவம் இன்று விரிவடைந்து ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி என சிந்திக்கப்பட்டு அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உலகின் அனேகமான நாடுகள் ஏற்றுக்கொண்டு காலத்துக்குக்காலம் புதிய எண்ணக் கருக்களினூடாக புதிய வடிவம் பெற்று வருகின்றன. பிள்ளைகளின் வயதுக்கு, வளர்ச்சி வேகத்திற்கு விருத்தி நிலைக்கு, விருப்பத்திற்கும் பொருத்தமான கற்றல் அனுபவங்களை வழங்குவது மிகமிக அவசியம் என்பது இன்று பலராலும் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை சிறுவர் பாதுகாப்பு திட்ட உருவாக்கல், திட்டமிடல் முகாமை யாளராக சிறப்புற செயலாற்றிய பிரியா குமாரசாமி கருத்து விளக்குகையில் "பிள்ளைகள் அனுபவத்தின் மூலமே கற்கிறார்கள் அவ் அனுபவத்தை பெற்றுக் கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே பெரியவர்களான எமது கடமையாகும்." இவரது கருத்திலிருந்து எமது பிள்ளைகளை நாம் செயற்பாடு களில் ஈடுபடுத்துவதுடன் மூலம் சிந்தனைச் செயலாளிகளாக மூளை விருத்தித் திறன் கூடியவர்களாக எதிர்கால சமூக சவால்களுக்கு முகம் கொடுக்க வல்லவர்களாக வளர வாய்ப்புள்ளது.

முன்பள்ளிக் கல்விக் கால கட்டமாக உள்ள இரண்டரை வயதிலி ருந்து ஐந்து வயது நிறைவு வரையான காலம் இவர்களது வாழ்க்கையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பருவமாகும். இப்பருவ பாலர்களிடையே உடல் வளர்ச்சி (Physical development) இயக்க வளர்ச்சி (Motor developmen) மன எழுச்சி வளர்ச்சி (Emotional develop ment) அறிவு எழுச்சி (Inteleetual Development) சமூக வளர்ச்சி (Social development) போன்றவை வேகமாக வளர்கின்றன. இவ் வளர்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து விருத்தியாக்கினால் தான் பூரணமான/ திருப்தியான ஆளுமையுடைய பிள்ளை களையும் எதிர்கால சந்ததி களையும் உருவாக்க முடியும். இந்நிலைகளில் முத்தமிழ் முன்பள்ளி அதன் நிர்வாகம் இவற்றைச் சரியாக விளங்கியிருக்கும்.

தன்மையும் அதற்கேற்ப செயற்பாடுகளை உருவாக்க களநிலையை ஏற்படுத்துவதிலும் முனைப்பாக உள்ளனர். இந்நிலைக்கு பெற்றோரும் நன்கு ஒத்துழைப்பு வழங்குமிடத்து அதிகமான வெற்றிகளை நிர்வாகத்தால் அடைய முடிகிறது. முழுமையாகப் பெற்றோரின் விழிப்புணர்வு நிலை ஏற்படுமாயின் நாம் மேலும் திருப்தியான அடைவுகளைப் பாலர்களிடையே ஏற்படுத்த முடியும.

நவீன முன்பள்ளிகளின் சிந்தனையில் அவர்களின் நேரசூசியில் விழுமிய நம்பிக்கையை ஏற்படுத்துதல், ஆரொக்கிய கவனிப்புக்கள், சுதந்திர உரையாடல்கள் வெளி உள் விளையாட்டுக்கள், சுத்தம் சுகாதாரம் தொடர்பான பழக்கவழக்கங்கள், கதை மூலம் கற்றல், பாடல்கள் பாடி இசையும் அசைவும் செய்து கலந்துரையாடல் ஆக்கச் செயல்கள் மூலம் கண்டு கொள்ளல் செயற்பாடுகள் மொழி, எண், சுற்றாடல், சார் ஆயத்தங்கள் என அம்சங்கள் நாளாந்தம் அமைதல் மிகமிக முக்கியமானது.

இத்தகைய பாரிய ஓர் வேலைத் திட்டத்தில் நிர்வாகத்தினர் ஈடுபட தயாராக இருப்பது முத்தமிழில் நன்கு தெரிகிறது. இருந்தாலும் பெருகிவரும் வளவாய்ப்புகள் மேலும் பெருக பலபக்க ஆளணியினரின் உதவி தேவை என்பது புலனாகிறது. அறிவுசார் நிர்வாகிகள் சிந்திக்கும் இச் செயல்களை தேவை நாடி நிற்கும் சகலரும் சேர்ந்து வளம் பெருக உதவிகள் நல்குவது இங்கு தேவையாக உள்ளது. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" எனவே சகலரும் இப்பருவ பாலர்களை வளர்க்க உதவுவது எமது நாட்டு நிலைமையில் மிகமிக முக்கியமானது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது எனவே இப்பருவம் சமூகத்துக்குகந்த பிள்ளையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றது. நோர்வே, சுவீடன், பின்லாந்து, பிரித்தானியா, யப்பான் போன்ற பல நாடுகள் இப்பருவ பாலர்களை வளர்ப்பதிலேயே மிக முக்கிய கவனத்தில் பாரிய முயற்சிகளை எடுத்துவருகின்றன. முன்பள்ளிகளில் செயற்பட்ட பாலர்கள் பிற்கால கல்வியில் ஏனைய செயற்பாடுகளில் சிறப்பாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

எமது நாட்டில் குறிப்பிட்ட காலத்துக்கு முன் பாடசாலைக்கு பிள்ளைகள் செல்ல மறுத்தனர். அழுது அடம்பிடித்தனர். ஆனால் முன்பள்ளி வளர்ச்சியின் இன்றைய நிலையில் யாராவது பாடசாலை செல்ல மறுக்கிறார்களா? அனைவரும் சிந்திப்பது நன்று.....

இத்தகைய முக்கியத்துவம் வகிக்கும் முன்பள்ளிகளின் சகல வளர்ச்சியிலும் அரசை மட்டும் எதிர்பாராது சகலரதும் ஒத்துழைப்பு

அவசியமானது பல பெற்றோர் விழிப்புணர்வு போதாமல் பங்குபற்றல் குறைவாக உள்ளது. செயற்றிட்டங்களில் கற்றல் உபகரணங்களைத் தயாரித்து உதவுவதிலும் பண உதவிகளை வழங்குவதிலும் தாராள மனப்பாங்கை எமது பிள்ளைகளின் வளர்ச்சிக்காகவே என சிந்தித்து உதவினால் மேலும் நன்கு விருத்தி நிலையடைந்து பிள்ளைகள் வளர முடியும்.

இன்றைய கால சமூக பண் பாட்டுச் சூழலில் குழந்தைகளிடையே பல பிரச்சினைகள் தாக்கத்தை ஏற்படுத்துகின் கின்றன. பயம், சினம், கவலை, அடக்குமுறை, பொருந்தா மனவெழுச்சி, உணர்வுகளை வெளியேற்றும் பாலகர் களது குடும்பநிலை, பெற்றோர் மது அருந்துதல், புரிந்துணர்வு, அற்ற குடும்பநிலை என்பவற்றால் பாதிக்கப் பட்டவர்கள் போன்ற வற்றிலிருந்து மீட்கவும் அனைவரும் சிந்திப்பது. கல்வி வழிகாட்டல் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியம். எல்லாம் அறிந்தவர் எவருமில்லை. ஒன்றும் தெரியாதவர் யாருமில்லை எனவே துறைசார் அறிவுகளை சம்பந்தப்பட்ட வருடன் கலந்துரையாடி விழிப்பு பெறுவது சிறப்பானது முத்தமிழ் முன்பள்ளிப் பாலர் சூழலில் இந்நிலை பாரியளவில் இல்லை என்றாலும் மேலும் வளர சிந்திப்பது அறிவு சார்ந்தது. மிகவும் உகந்தது.

1990களில் ஆரம்பமான முத்தமிழ் முன்பள்ளி தேவையான மாணவர் தொகையுடன் காலத்துக்கு காலம் பல்நிலை வளர்ச்சிகளை அடைந்து வளர்ந்திருப்பது பெருமைக்குரியது.

அறிவு, ஆரோக்கம், செயல் திறன் நிலைகளில் பாலர்களை வளர்த்து வரும் பணிமிக உன்னதமானது. அதற்கென வருடந்தோறும் பேச்சுத்திறன், விளையாட்டுத்திறன், கலை அறிகை திறன், சுதந்திர முனைப்புத்திறன் என பல்வகைத் திறன் விருத்திக்கான களங்களை உருவாக்குவதில் முனை ப்புடன் முன்னணியில் விளங்கு கின்றது.

பல்துறை அனுபவமுதிர்ச்சி பெற்ற சியாமளா ஆசிரியையின் வழிகாட்டலில் வாண்மை விருத்தியடைய மேலதிக ஆசிரியைகளின் உதவியுடன் சிறப்பாக வழிப்படுத்தப்பட்டு வருவது இப்பாடசாலையின் மற்றுமோர் சிறப்பு.

பல் சிறப்புடன் பல் வளங்க ளையும் பெற்று மேலும் வளர செயலாற்ற என் நல்லாசிகள் உரித்தா கட்டும்.

# மயிலே குயிலே

மயிலே மயிலே ஆடிவா
மகிழ்வாய் நாமும் ஆடிடலாம்
குயிலே குயிலே பாடிவா
கொய்யாப் பழமும் தந்திடுவேன்



பச்சைக்கிளியே பறந்துவா
பழுத்த கொவ்வை தந்திடுவேன்
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகின்றேன்.

வெள்ளைக் கொக்கே ஓடிவா
பிள்ளை நானும் மகிழ்ந்திடுவேன்
மாடப் புறாவே இங்கே வா
மகிழ்வாய் நாமும் பேசிடலாம்

செல்வி பிரஷாவினி ரூபராஸ்வரன்

## மாணவர் ஆக்கம்



சாரங்கசர்மா சாயீஸ்வரசர்மா



தபர்ணா விஜயரட்ணம்

## நாளாந்தச் செயற்பாடுகள்












# நாளாந்த வகுப்பறைச் செயற்பாட்டில் சித்திரம்



கிறுக்கல் சித்திரம்



கீறல் சித்திரம்



ஊதல் சித்திரம்


நூல் இழுத்தல் சித்திரம்


அச்சு அடித்தல்


அச்சுப் பதித்தல்


வெளித் தேய்த்தல் சித்திரம்


உட்த்தேய்த்தல் சித்திரம்

## காய்கறி

காய்கறியாம் காய்கறி
காலையில் பறித்த காய்கறி
கத்தரி வெண்டி தக்காளி
கரட் பூசணி பாகற்காய்
(காய்கறியாம்)

சத்து நிறைந்த காய்கறி
சந்தைக்கு வரும் காய்கறி
பச்சை நிறக் காய்கறி
பசுமையான காய்கறி
(காய்கறியாம்)

கபிஷா சிறிஸ்கந்தராஜா

## அம்மா



அம்மா அம்மா எந்தன் அம்மா
அன்பாய் என்னை வளர்த்த அம்மா
பத்து மாதம் சுமந்து என்னை
பாலூட்டி வளர்த்த அம்மா

நோய் எனக்கு வந்து விட்டால்
துயிலினையே மறந்திடுவாள்
கண்விழித்துத் தேற்றிடுவாள்
கண்ணின் இமையாய் காத்திடுவாள்

பள்ளிக்கூடம் நான் சென்று
பாடங்களைப் படித்து பாரினில்
நான் உயர படிக்கல்லாகி
என்னை பாதுகாக்கும் என் அம்மா

அனுஷிகன் சத்தியறூபன்


## என்றுமே உமை வாழ்த்தும் ஒரு ஜீவன் நானம்மா

பாலகராய் மழலை மொழி பேசி
பையப் பைய நடை போட்டு
முத்தமிழில் வந்திணைந்த முத்தான முத்திலொன்று நானம்மா
முன் வினைகள் தீர்ந்திடவே முழுதான பேரறிவை தந்தீரம்மா

எப் பிறப்பு கண்டிடினும் - கொண்ட
ஏழ் ஜென்மம் கடந்திடினும்
என்னை வளர்த்த ஏணிப்படி இப்பள்ளியம்மா
என் நலமான ஒரு ஏற்றம் தந்தீரம்மா
என்றுமே உமை வாழ்த்தும் ஒரு ஜீவன் நானம்மா

செல்வி.தட்ஷா உமாபதிசிவம்

## பசுவும் கன்றும்



வெள்ளைப் பசு வந்தது.
மெல்லப் புல்லை மேய்ந்தது
துள்ளிக் கன்றும் பாய்ந்தது
சுகமாய்ப் பாலைக் குடித்தது

தாயின் அருகில் நின்றது
தடவித் தாயும் கொடுத்தது
தாயின் அன்பு மேலதாம்
தன்னைக் கன்றும் மறந்தது.

றாகவி. சிவகுமார்

# வருடாந்த செயல்த் திட்டம்



# இருபத்தைந்தாவது அகவையில் முத்தமிழ் முன்பள்ளி

ஆஷிக்கா.மணிராஜா

யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூரின் நன்நகரில்
தன்னிகரில்லா முன்பள்ளி முத்தமிழ் முன்பள்ளியே.
இருபத்தைந்தாவது அகவையில் வாழிய நீ வாழியவே

வாழ்த்துகின்ற பாலர் நாம் மனம் விரும்பும் நறுஞ்சோலை
சந்தனமாய் மணம் வீசியே வழிகாட்டும் முன்பள்ளியே
இருபத்தைந்தாவது அகவையில் வாழிய நீ வாழியவே

முத்து முத்தான மழலை செல்வங்களை
முத்தமிழ் வித்தகராய் மாற்றும் முன்பள்ளியே
இருபத்தைந்தாவது அகவையில் வாழிய நீ வாழியவே

இரத்தினமாய் முகமலர்ந்த முத்தான மழலைகளை
பரணி போற்ற வாழ வைக்கும் முன்பள்ளியே
இருபத்தைந்தாவது அகவையில் வாழிய நீ வாழியவே

# ரயில்

கூ ...... எனச் சத்தம் கேட்கிறதே
புகையுடன் விரைந்து வருகிறதே
வளைந்து நெளிந்து வருகிறதே
குகையிலும் நுழைந்து வருகிறதே
(கூ ..... எனச்)



நேரம் தூரம் பாராது
இரவும் பகலும் உழைத்திருமாம்
மேடு பள்ளம் பாராது - காடும்
மேடும் சென்றிடுமாம்
(கூ ..... எனச்)

எம்மை எல்லாம் சுமந்து செல்லும்
நீண்ட வண்டி அதுவல்லோ
அந்த வண்டி ரெயில் வண்டி
சுக்கு சுக்கு ரெயில் வண்டி (2)

# Good Manners

Say "Good Morning" to your teacher

Say "Hello" to your friend

Say please "When you make a request

Say "Thank you" When Some one helps you

Say "Sorry" When you are wrong

E.Naveen

# Teacher

| | | |
|---|---|---|
| T | - | Thanks to my |
| E | - | Experience with my teachers in my |
| A | - | Alma Mater my |
| C | - | Child hood was enriched with |
| H | - | Happiness |
| E | - | Eduation |
| R | - | Rewarding and Rich life |

Asvika Thuvarakan

# பொது அறிவு

01. குழந்தைப் பாடல்களை இயற்றிய முதல் கவிஞர் யார்?

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

02. மனித கருவை ஆய்வுக்கு அனுமதித்த முதல் நாடு எது?

**இங்கிலாந்து**

03. எத்தனை வயதிற்கு மேல் சுவை உணரும் ஆற்றல் குறையும்?

**50 வயதிற்கு மேல்**

04. உலகின் பெரிய பூச்சி எது?

**கோலியாத் வண்டு**

05. கார்ப்ஸ் மீனின் ஆயுட்காலம் எவ்வளவு?

**50 வருடங்கள்**

06. பசுவை விட அதிக பால் தரும் விலங்கு எது?

**வெள்ளாடு**

07. உலகின் மிகப்பெரிய எரிமலை எது?

**கொடபாக்ஷி**

08. பச்சோந்தியின் நாக்கு அதன் உடலின் நீளத்தை விட எத்தனை மடங்கு?

**இருமடங்கு**

09. விண்வெளிக்கு அனுப்பபட்ட 1வது நாயின் பெயர் என்ன?

**லைகா**

10. தரையில் முதுகுபடும்படி உறங்கும் ஒரே விலங்கு எது?

**மனிதன்**

பழைய மாணவர்கள்
பாலேந்திரன் டிலக்ஷன்
பாலலேந்திரன் டிலக்ஷி

# அம்மா

பத்து மாதம் சுமந்து என்னை
முத்துப்போலப் பெற்றவள் அம்மா

நித்தம் சோறு ஊட்டுவாள் அம்மா
முத்தம் தந்து வளர்ப்பாள் அம்மா
என்னை நித்திரை செய்ய வைப்பாள் அம்மா
என்னை வளர்த்த அன்னை தனை
முன்னை எழுந்து வணங்கிடுவேன்.

விஜிதன் சாரங்கன்.

# நூல்கள் படி

நல்ல நல்ல நூல்களை
நாடிச் சென்று படித்திடுவாய்
நித்தமும் படிக்கும் பழக்கத்தை
நீயும் என்றும் கடைப்பிடிப்பாய்!



நுட்பமான கருத்துப் பல
நூல்கள் எமக்கு சொல்லிடுமே
தெரிந்து நூல்களை படித்திடுவோம்
தேசம் போற்ற வாழ்ந்திடுவோம்

பிறின்சன் பகீஷன்

# முத்தமிழே நீடு வாழ்க

கல்வியிலே சிறந்திட்ட நல்லூர் தனில்
கலைகளுடன் கல்வியையும்
கருத்துடனே வழங்கிட்ட - எம்
முன்பள்ளியே நீ நீடு வாழ்க.

முத்தமிழினை முத்தாக வழங்கி
மும்மூர்த்தியாய் எம்மை வழிநடத்திட்ட
எம் ஆசான்களே நீர் நீடு வாழ்க.

மூன்று வருடம் என்னை அணைத்திட்ட முத்தமிழே
மூன்றல்ல நீ முன்நூறு தலைமுறைகள்
பலநூறு முத்துக்களை உருவாக்கி
வீறுநடை போடும்
முத்தமிழின் முத்து நான் மகிழ்வுடனே
வாழ்த்துகின்றேன்

கிசோறா சசிதரன்

# முத்தமிழ் முன்பள்ளியே எம்தெய்வம் ....

எம் அறிவுக் கண்களைத் திறந்து வைத்து
அத்திவாரம் இட்ட முத்தமிழ் முன்பள்ளியை துதிப்போம்
கல்விக் கடலின் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்து
வெள்ளி விழா காணுகின்ற முத்தமிழ் முன்பள்ளியினை போற்றுவோம்.

அன்பினைச் சொரிந்தே அகரம் முதல்
அட்சரங்கள் அத்தனையும் - எமக்குச்
சொல்லிக் கொடுக்கும் முத்தமிழ் முன்பள்ளி
ஆசான்களை வணங்கிடுவோம்.

தேசத்தில் நாம் எதிர்காலத்தில் தலைசிறந்த மானிடராய்த்
திகழ வைத்த முத்தமிழ் முன்பள்ளியினை அன்புடனே
என்றும் நாம் பணிந்திடுவோம் - முத்தமிழின்
தன்னலமற்ற சேவைக்குத் தலை வணங்குவோம்.

யாழருவி செந்தூரன்
பழைய மாணவி

நேரத்தைத் தவிர எதுவும் நமக்குச் சொந்தமானதல்ல.
பிறரது பொருட்களுக்கு ஆசைப்படக்கூடாது.

## கடி ஜோக்ஸ்

| | | | |
|---|---|---|---|
| 01. | விமல் | : | வைக்கோல் சாப்பிட்டா கண் பார்வைக்கு நல்லது. |
| | குமார் | : | சும்மா அளக்காதே |
| | விமல் | : | உண்மையா தான் சொல்றேன்...... எந்த மாடாவது மூக்குக் கண்ணாடி போட்டிருக்கா |
| 02. | அம்மா | : | டேய், கண்ணா கடைக்குப் போயி நாலு நாட்டுக்கோழி முட்டை வாங்கிட்டு வாடா!" |
| | மகன் | : | சரிம்மா...! அந்த நாலு நாடும் எது எதுன்னு பேரைச் சொல்லுங்க!.... |
| 03. | Teacher | : | ஏன்டா 20 நாளா ஸ்கூலுக்கு வரவில்லை....? |
| | Student | : | எங்கப்பா தான் சொன்னாரு, ஒரே இடத்துக்கு அடிக்கடி போனா மரியாதை கிடைக்காதுன்னு ....... |
| 04. | மாணவன் | : | செய்யாத தப்புக்கு நீங்க தண்டனை தருவீங்களா சார்? |
| | ஆசிரியர் | : | தரமாட்டேன் ஏன்? |
| | மாணவன் | : | நான் Home Work செய்யலை சார்...! |
| 05. | ஆசிரியர் | : | நான் தினமும் ஏழு கிலோமீட்டர் (7 Km) நடந்து சென்று படித்து வந்தேன். |
| | மாணவன் | : | அப்பவே உங்களுக்கு படிப்புக்கும் ரொம்ப தூரமா சார் ..... |
| 06. | பிள்ளையார் | : | அப்பா எனக்கு இனி எலியிலை எல்லாம் போய் வரமுடியாது. கார் வாங்கித்தாங்கோ ..... |
| | சிவன் | : | காரா ..... அப்படியென்றால் பொறு உண்டியல் நிரம்பட்டும் |
| 07. | டாக்டர் | : | நீங்க இவரை 1 மணிநேரம் முன்னாடி கொண்டு வந்ருந்தீங்கன்னா காப்பாற்றியிருக்கலாம்....... |

நோயாளியின் உறவினர் : அக்ஸிடெண்ட் நடந்தே 15 நிமிடம் தான் ஆகுது.....

நிதுஷா ஐங்கரன்
பழைய மாணவி

# முதல் நாள் என் முன்பள்ளி

அன்னையின் அரவணைப்பில்
அன்புடனே வளர்ந்த என்னை
பள்ளி முன் கல்வியென்று
முன்பள்ளியென்று அழைத்து வந்தார் - அன்பான என் அம்மா

அப்பாவின் சைக்கிளிலே சிறகடித்த சிட்டாக
ஆனந்தமாய் நாம் வந்தோம்
வெண்புறாக் கூட்டமாய் சிரிப்புடனே பாடி ஆடி
விரைந்து வந்த சிறுவர்களில்
மகிழ்வுடனே பலர் வந்தார்
அழுதபடி சிலர் வந்தார்.

வாசலிலே நிறைகுடம்
மங்களமாய் வரவேற்க
இன்முகமாய் ஆசிரியர்
அன்போடு அழைத்திட்டார்

எம்மைப் போல் சிட்டுக்கள்
சிரித்தபடி எங்களுக்கு
மலர் மாலை அணிவித்து
மகிழ்வுடனே வரவேற்றார்.

அங்கு நின்ற பெரியவரோ
ஆசி பல கூறியே
பன்னீரும் தெளித்து விட்டு
பக்குவமாய் பொட்டும் இட்டார்.

வகுப்பறையில் ஆசிரியர்
வந்திருந்து எங்களுடன்
சிரித்துக் கதைபேசி
சிறகடிக்க வைத்து விட்டார்

முன்பள்ளி முதல் நாளை
முழுமையாக அனுபவித்து
பிரிந்து செல்ல மனமின்றி
விடைபெற்று சென்று விட்டேன்

முன்பள்ளி முதல் நாள்
என் வாழ்வின் முதற்படி
வெற்றியின் ஆரம்பம்
முதற்படி ஏறிவிட்டேன்
உச்சி வரை சென்றிடுவேன்
வெற்றி பல பெற்றிடுவேன்.

பாஸ்கரன் பிரவீனா
பாஸ்கரன் நிலக்ஷனா
பாஸ்கரன் பவிஷனா

# பிராணிகள் பற்றிய சில தகவல்கள்

01. மனிதர்களைப் போல் நடக்கும் உப்பு நீர் அருந்தும் நாய் போல் உறுமும் பிராணி

**பென்குயின்**

02. ஞாபக சக்தி கூடிய மிருகம்

**யானை**

03. முட்டையிடும் முலையூட்டிகள்

**எறும்புண்ணி**

04. பற்கள் இல்லாத பிராணிகள்

**தேவாங்கு, தேரை, ஆமை, ஓணான்**

05. குட்டி ஈணும் பூச்சிகள்

**இராமபாணம்**

06. நின்ற படியே தூங்கும் பிராணி

**யானை, குதிரை, ஒட்டகம்**

07. வாழ்நாளில் தூங்காத பிராணி

**எறும்பு**

08. கண்களைத் திறந்து கொண்டு தூங்கும் பிராணி

**முதலை, பாம்பு, மீன்**

09. உடலை விடப் பெரிய தலை கொண்ட பிராணி

**எறும்பு**

10. நாக்கில்லாத உயிரினம்

**முதலை**

11. ஆபத்தை உணரும் போது தனது தலையை மண்ணினுள் புதைத்துக் கொள்ளும் பிராணி

**தீக்கோழி**

12. காற்றினால் பரவும் வித்துக்கள்

**எருக்கலை, பருத்தி, சீதேவியார் செங்கழுநீர், மூக்குத்திப்பூண்டு, பொன்னொச்சி, குறிஞ்சா**

13. நுளம்புகளை விரட்டப் பொருத்தமான இலைகள்

**துளசி, வேம்பு, காட்டு இஞ்சி, கிரிசாந்தியம்**

14. பூச்சி இல்லாத இனம்

**சிலந்தி**

பழைய மாணவி
செல்வி ப.கஜானா

# விடுகதைகள்

01. அழுவான், சிரிப்பான் அனைத்தும் செய்வான் அவன் யார்?

**முகம் பார்க்கும் கண்ணாடி**

02. ஊரெல்லாம் ஒரே விளக்கு அதற்கு ஒரு நாள் ஓய்வு. அது என்ன?

**நிலா**

03. நாலு காலுண்டு வீச வால் இல்லை. அது என்ன?

**நாற்காலி**

04. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும். அவன் யார்?

**தேள்**

05. சிவப்பு நிறக்காளை நீரெல்லாம் பதுங்கும் காளை அது என்ன?

**நெருப்பு**

06. கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது. அது என்ன?

**உப்பு**

07. இங்கிருந்து பார்த்தால் இரும்புக் குண்டு. எடுத்துப் பார்த்தால் இனிய பழம் அது என்ன?

**விளாம்பழம்**

08. ஆயிரம் பேர் வந்த சென்றாலும் வந்த சுவடு தெரியாது. அது என்ன?

**எறும்பு**

09. கறுப்புச் சட்டைக்காரன் சட்டையைக் கழற்றினால் வெள்ளைக்காரன். அவன் யார்?

**உழுந்து**

பழைய மாணவிகள்
சி.தர்சா, சி.சியாமி

# உயிர் ஆசான்

அன்னைக்கும் தந்தைக்கும் அடுத்தவராய் சொன்னாலும்
அறிவைத் தருவதில் முதல் நிலை ஆசானையே சாரும்
அரும்பாடுபட்டு அளவில்லாத கல்வியை நமக்களித்து
தரணியில் உயர வைத்த முத்தமிழே

உறவுகள் கூட உதவாத சமயத்தில்
உறவிடும் கல்வியை
உன்னதமாய் வெற்றிடவே
உன்னத கல்வியை எனக்களித்த முத்தமிழை
உலகம் போற்ற எந்நாளும் வாழ்த்திடுவோம்

முத்தமிழின் முத்துக்களாய் எமைவளர்த்த
முத்தமிழே நீ என்றும் தீடு வாழ்க - இவ்
வெள்ளிவிழா நன்னாளில் மனதார வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள்
கண்ணதசான் சரணியன்
கண்ணதசான் சாதுர்ஷன்

பணத்தை இழந்தால் சொற்ப நஷ்டம். நேரத்தை இழந்தால் எல்லாமே நஷ்டம்
நல்ல சொற்கள் குளிர்ந்த நீரை விட குளிர்ச்சியானவை

# ஆடை

மானம் காத்திடும் ஆடை
மதிப்பை தந்திடும் ஆடை

அழகை வழங்கிடும் ஆடை
அடுத்தவர் மதித்திடும் ஆடை

சூட்டை தணித்திடும் ஆடை
குளிரை தடுத்திடும் ஆடை

உடலைக் காத்திடும் ஆடை
உழைப்பைக் கொடுத்திடும் ஆடை

பண்பாடுணர்த்திடும் ஆடை
பதவியைக் காட்டிடும் ஆடை

மானம் காத்திடும் ஆடை
மதிப்பை தந்திடும் ஆடை



பிரதீபன் வேறோனிக்கா

அன்புள்ள இதயம் இல்லாவிட்டால் நாம் நீதியாக இருக்க முடியாது
இளமையில் தான் எவ்வகைப் பண்பும் உருப்பெறுகிறது.

# முத்தமிழ் அன்னை

முத்தான முன்பள்ளியாம் முத்தமிழில்
முதற்கல்வி கற்று நான் முழுநிலவானேன்
தத்தி திரியும் சிறு பிள்ளையை
தத்தெடுத்த முத்தமிழ் அன்னை இவள்
அன்பு அறிவு ஆற்றலுடன்
ஆடலும் பாடலும் கற்று தந்தாள்
முத்துக்களாய் இன்று நாம் சிரிக்க
முத்தான் கல்வியை தந்திட்ட
முத்தமிழ் அன்னையை போற்றிடுவோம்
முத்துக்களாய் நாம் மிளிர்ந்திடுவோம்

வைஸ்ணவி சசிகரன்

# சிட்டுக் குருவி

சின்னச் சின்ன சிட்டுக்குருவி
சிறகு விரித்து பறக்கும் குருவி
வண்ண வண்ண சாம்பல் நிறத்தில்
வனப்பாய் வானில் பறக்கும் குருவி.



கொட்டிக் கிடக்கும் தானியக் குவியலை
கூடிவந்து சுற்றி நின்று
தொட்டுத் தொட்டு கொத்தி தின்று
கூடி பறந்து கூடு செல்லும்!.

நிலாஜினி.ரவிச்சந்திரன்

# மும்மொழிகள்

| தமிழ் | சிங்களம் | ஆங்கிலம் |
|---|---|---|
| அம்மா | அம்மா | Mother |
| அப்பா | தாத்தா | Father |
| அக்கா | அக்கா | Elder sister |
| அண்ணா | அய்யா | Elder brother |
| தம்பி | மல்லி | Younger brother |
| தங்கை | நங்கை | Younger Sister |
| தாத்தா | சீயா | Grand Father |
| பாட்டி | ஆச்சி | Grand Mother |
| சித்தப்பா | (B) பப்பா | Uncle |
| சித்தி | புஞ்சிஅம்மா | Aunt |
| பெரியப்பா | லொகுதாத்தா | Uncle |
| பெரியம்மா | லொகுஅம்மா | Aunt |
| மாமா | மாமா | Uncle |
| மாமி | நன்தா | Aunt |

பழைய மாணவிகள்
பி.மதுசாஜி
பி.பவிசாஜினி

# My Toy

My Favourite toy is a doll

It's name is barbie

I'll comb it,s hair daily in the morning

I'll change it's dress daily in the evening

I'll brush it's teeth daily at night

I will always be with it

I love my doll



Kugagaran shajana

# விடுகதைகள்

01. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம் அது என்ன?

**வளையல்**

02. அண்ணா கல்வியில் வாங்காதது தம்பி கடையில் வாங்கியது அது என்ன?

**பட்டம்**

03. ஆயிரம் பேர் கட்டிய மண்டபம் ஒருவன் கண்பட்டால் அழியும் அந்த மண்டபம் எது?

**தேன்கூடு**

04. ஆயிரம் பேர் தடுத்தாலும் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தாது அது என்ன?

**கடலலை**

05. இதயம் போல துடிதுடிக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன?

**கடிகாரம்**

06. உயிர் இல்லாத நீதிபதி, ஒழுங்காக நியாயம் சொல்கிறார் அவர் யார்?

**தராசு**

07. உச்சியில் கிரீடம் உடம்பெல்லாம் கண் அது என்ன?

**அன்னாசிப்பழம்**

08. கையில்லாமல் நீந்துவான் கால் இல்லாமல் ஓடவான் அவன் யார்?

**படகு**

09. கூடவே வரும் உதவி செய்யாது அது என்ன?

**நிழல்**

10. ஏறினால் வழுக்கும், இனிய கனி தரும் காயைத் தின்றால் துவர்க்கும் அது என்ன?

**வாழைமரம்**

# தகுதியில்லாத நட்பு (சிறுகதை)

சுண்டெலி ஒன்று தவளை ஒன்றுடன் நட்புக் கொண்டிருந்தது. தவளையோ பெரும்பாலும் தண்ணீரிலேயே வசித்து வந்தது. அது ஒரு நாள் சுண்டெலிக்குத் தான் நீச்சல் கற்றுக் கொடுப்பதாகக் கூறி சுண்டெலியின் காலைத் தன் காலுடன் ஒன்று சேர்த்துக் கயிற்றால் கட்டிக் கொண்டது.

இவற்றை வானத்தில் இருந்து அவதானித்த பருந்து ஒன்று கொத்த வந்தது. உடனே தவளை சுண்டெலியுடன் தண்ணீரில் பாய்ந்தது தண்ணீரில் மூழ்கி சுண்டெலி மூச்சுத்திணறி இறந்தது அதன் உடல் மேலே மிதந்தது... ஆனால் கால்கள் இன்னமும் தவளையுடன் சேர்த்தே கட்டப்பட்டிருந்தன.

அந்தச் சமயம் தண்ணீரில் செத்த சுண்டெலி மிதப்பதைப் பார்த்த பருந்து கீழ் நோக்கி வந்து அந்த எலியைக் கொத்திக் கொண்டு உயரப் பறந்தது. அதனுடன் சேர்ந்து கட்டப்பட்டிருந்த தவளையும் பருந்தின் பிடியில் சிக்கியது பருந்து தவளையையும் கொன்று தின்றது.

"நாம் ஒருவரை நண்பராக ஏற்றுக்கொள்வதற்கு முன் அவர் அதற்கு தகுதியானவரா என்று யோசிக்க வேண்டும். இல்லையேல் தவளைக்கு ஏற்பட்ட நிலைமைதான் எமக்கும் ஏற்படும்."


பி.சனாஷன்
பழைய மாணவன்

# பிள்ளைகள் வாழ்க்கைக்கூடாக கற்றுக் கொள்கின்றனர்.

- விரிசல்களுடன் வாழும் பிள்ளையானது தன்னைத் தாழ்வாக மதிக்கக் கற்றுக்கொள்ளும்
- விரோதத்தோடு வாழும் பிள்ளையானது சண்டை செய்யக் கற்றுக் கொள்ளும்
- ஏளனத்துடன் வாழும் பிள்ளையானது வெட்கமடையக் கற்றுக்கொள்ளுங்கள்
- அவமானத்துடன் வாழும் பிள்ளையானது தன்னையே குறை சொல்லக் கற்றுக்கொள்ளும்
- பொறாமையோடு வாழும் பிள்ளையானது பொறாமை கொள்ள கற்றுக்கொள்ளும்
- பொறுமையுடன் வாழும் பிள்ளையாது பொறுமையாய் இருக்கக் கற்றுக்கொள்ளும்
- உற்சாகமளித்து வாழும் பிள்ளையானது பாராட்டக் கற்றுக்கொள்ளும்
- புகழப்பட்டு வாழும் பிள்ளையானது தன்னம்பிக்கையைக் கற்றுக்கொள்ளும்
- ஏற்றுக் கொள்ளப்பட்ட வளரும் பிள்ளையானது தன்னை நேசிக்கக் கற்றுக்கொள்ளும்
- நியாயத்துடன் வாழும் பிள்ளையானது நீதியைக் கற்றுக்கொள்ளும்
- பராமரிப்புடன் வாழும் பிள்ளையானது விசுவாசிக்க கற்றுக்கொள்ளும்
- நட்பு மற்றும் ஏற்றுக் கொள்ளலோடு வாழும் பிள்ளையானது பாரினிலே பாசத்தைத் தேட கற்றுக்கொள்ளும்
- பகிர்ந்து கொடுத்து வாழும் பிள்ளையானது கஞ்சத்தனமின்றி வாழக்கற்றுக்கொள்ளும்.
- நேர்மையுடன் வாழும் பிள்ளையானது சத்தியத்தையும் உண்மையையும் கற்றுக்கொள்ளும்
- கருணை மற்றும் கரிசனையுடன் வாழும் பிள்ளையானது மற்றவரை மதிக்கக் கற்றுக்கொள்ளும்.

# சித்திர ஆரம்ப பயிற்சி

சோ.அபிராமி
(ஆசிரியை)



# நன்றி நவில்கின்றோம்

தமிழர் பண்பாட்டில் ஒன்றான நன்றி மறவாமையை கருத்தில் கொண்டு எமது முத்தமிழின் வெள்ளி விழா மலரிற்கு மெருகூட்டியோரை நன்றி கூறும் வகையில் இம்மலரிற்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பவற்றை வழங்கியவர்களிற்கு எமது மனம் நிறைவான நன்றிகள் மலரிற்கு காத்திரமான கட்டுரைகளை வழங்கிய கல்விப் பெருந்தகைகளுக்கு எமது சிரம் தாழ்த்திய நன்றிகள் சிறுவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும் வகையில் ஆக்கங்களை தந்த முத்தமிழின் முத்துக்களுக்கும் மலர் சிறப்புற வெளியிடுவதற்கு விளம்பர அனுசரணை வழங்கியவர்கள், அன்பளிப்புத் தந்தவர்கள், மலர் வெளியிட எம்முடன் உழைத்த பல அன்பு உள்ளங்களிற்கும் எமது நன்றிகள் அனைத்துக்கும் மேலாக வெள்ளி விழாவில் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென்ற உத்வேகத்துடன் செயல்பட்ட பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் எமது எண்ணங்களை வண்ணம் தந்து அழகிய வர்ண மலராக வடிவமைத்துத் தந்த வைரஸ் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முன்பள்ளிச்சமூகம்



Java
Civil Engineering Construction
Since 1995



# Java
## Engineering Construction

கட்டட நிர்மாணத்துறையில் 18 வருடம்
அனுபவம் வாய்ந்த எமது நிறுவனம் நூற்றுக்கு
மேற்பட்ட வீடுகள் அமைத்து நன்மதிப்பை
வென்றெடுத்த நிறுவனமாகும். அனுபவம்
வாய்ந்த தொழிலாளர்கள்
பொறியியலாளர்களை தன்னகத்தே கொண்ட
தனித்துவமான எமது நிறுவனத்தினூடாக
தங்களின் கனவு இல்லங்களை அமைத்திட
வர்த்தக நோக்கமான கட்டங்கள் அமைத்திட
அழையுங்கள் எங்களை



# Java
## Engineering Construction

No 12, Yamuna Veethy,
Nallur, Jaffna.

T.P : 077 7283600

# Vigneswara Paints & Electricals

அனைத்து விதமான கட்டப் பொருட்களின்
சாம்ராச்சியம் அனைத்துவிதமான கட்டப் பொருட்கள்
கம்பி, சிமெந்து, பெயின்ட் வகைகள், வயரிங்
பொருட்கள் அனைத்தும் ஒரே கூரையின்
கீழ் பெற்றுக் கொள்வதற்கு நாடுங்கள்





*Vigneswara Paints*
*&*
*Electricals*





இல 170, பலாலி வீதி,
கோண்டாவில்.

தொ.இல : 021 222 4844

# MAYURANS NAKAI MALIKAI

## Manufacturers of Gold Jewels



14, Muslim College Road,
Jaffna.





22கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

## மயூரன்ஸ் நகை மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்

14,முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 077 6510251



# KAJAMUGAN HARDWARE

## கஜமுகன் காட்வெயர்

கட்டிடப் பொருட்கள், லங்கா கம்பி, பைப் வகைகள், சீமெந்து
மெச்சன் மெஸ் வலைகள், பெயின்ற் வகைகள் மற்றும்
Pepsi Soda & Accessories, அனைத்தையும் பெற்றுக்
கொள்ள வேண்டிய ஒரே இடம்.....



**கஜமுகன் காட்வெயர்**

147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



தொலைபேசி : 021 222 2833
021 222 7144
தொலைநகல் : 021 222 2368
E-Mail Kajamuganhw@hotmail.com

# New Nelson Learners

89, Kandy Road, Chundukuli, Jaffna

T.P : 021 222 4527
0773581916
077 7906064

Fax : 021 222 9109





## நியூ நெல்சன் லேணர்ஸ்



97A, Point Pedro Road,
Nelliyadi, Karaveddi.

T.P : 021 2261393, 0771113382

Main Road,
Valvettithurai.

T.P : 0775573711

# P.V.R Jewellery

*Proprietor : V.Piratheepan*




## பி.வி.ஆர் ஜுவல்லரி

*Main Street, Mullaithivu*

*Email : piratheep24@gmail.com*

*Tel : 727272456, 0772492336*

---


*Proprietor : P.Vishnu*


## விஷ்ணு நகைத் தொழிலகம்



## Vishnu Jewellery Work Shop

*Manufactures of Gold Jewels*






224/3 Kasthuriyar Road,
(Parath Studio Lane) Jaffna.


224/3 கஸ்தூரியார் வீதி,
(பாரத் ஸ்ருடியோ ஓடை)
யாழ்ப்பாணம்.

*Tel : 077 7293676, 021 222 4427*


YASO MOTORS
&
HARDWARE
Importer & Deaers in Motor Cycle & Spare Parts
163, Stanly Road, Jaffna.
Tel : 021 720 0650, 077 501 7161
Fax : 021 222 7566
Email : Yaso.motors@yahoo.com


25வது அகவையில் காலடி எடுத்து வைக்கும்
நல்லூர் முத்தமிழ் பள்ளிக்கும்,
சின்ன விழி அசைத்து சிரித்து வரும் சித்திரங்களை
அள்ளி அரவணைத்து அரிய கல்வி ஊட்டிடும் அதன்
ஆசிரியர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்
பிருந்தவானம் புத்தகசாலை
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு


KBS
ENGINEERS
குறைந்த செலவில்....
புதிய கட்டிடங்கள் அமைத்தல்
பழைய கட்டிடங்களைத்திருத்தியமைத்தல்
கட்டிட வரைபடம் வரைதல்
கட்டிட மதிப்பீடு
கட்டிட மேற்பார்வை
செய்வதற்கும் எம்மைத்தொடர்புகொள்ளவும்
KBS ENGINEERS
3rd Mile Post, Pointpedro Road,
Kalviyankadu, Jaffna.
T.P-0212231364
0773538030
0773533400
E- Mail :- rubankbs@gmail.com
குறைந்த செலவில் கட்டிடப்பொருட்களைப்பெற்றுக்கொள்ளலாம்


Siva Studio
சிவா ஸ்ருடியோ
Professional Outdoor,
Indoor Photo & Videography,
Album Makers,
Duro & Glass Frames
Pointpedro road Kalviyankadu
Sivastudiojaffna@gmail.com
T.P :- 077 6949790



கதிரவன் நகைமாடம்
A35, முல்லை வீதி, விசுவமடு
T.P: 0771755169




வாகனங்கள் தருகிறோம்
நீங்களே ஓட்டிச்செல்லலாம்.
Jaffna
Rent A Car
021 222 3339, 0777 484820
Point Pedro Road, Nallur, Kalviyankadu.


Virus - Inuvil 021 224 1815